www.padippakam.com

மே 2005

ரூ. 5.00

# புதிய ஜனநாயகம்



நுண்கடன்-நுண்தொழில்:
ஏழைகளைக்
கொள்ளையிடும்
ஏகாதிபத்திய சதி!



## போப் ஜான் பால் - II

# ஆசி வழங்கிய கரங்களில் இரத்தக் கறை!

படிப்பகம்

www.padippakam.com


# லாட்டரி சூதாட்டத்துக்கு முட்டுக் கொடுக்கும் சி.பி.எம்.

உழைக்கும் மக்களின் வாழ்வைச் சீரழித்து நாசமாக்கும் லாட்டரி சூதாட்டத்தைத் தமிழக அரசு தடை செய்துள்ளதைத் தொடர்ந்து, லாட்டரி முதலாளிகளான கருப்புப் பண பேர்வழிகள், லாட்டரிச் சீட்டு விற்பதையே தொழிலாகக் கொண்டோரைத் திரட்டி உண்ணாவிரதம் இருப்பது, ''அம்மா''வுக்கு வேண்டுகோள் விடுத்து நாளேடுகளில் முழுப்பக்க விளம்பரம் செய்வது என்று பலவழிகளிலும் முயற்சித்து, மீண்டும் இழந்த சொர்க்கத்தைக் கைப்பற்றத் துடிக்கின்றனர். ''அம்மா'' அசைந்து கொடுக்காததாலும், சட்டமன்றத் தேர்தல் நெருங்குவதாலும் எதிர்க்கட்சிகளிடம் பேரம் நடத்தி தமது சுரண்டல் முயற்சிக்கு ஆதரவு கோரி வருகின்றனர்.

லாட்டரிச் சீட்டு விற்று பிழைத்து வந்த பல்லாயிரக்கணக்கானோர் இன்று பிழைக்க வழியின்றி தவிப்பதால், அவர்களுக்கு மாற்று வேலை கொடுக்கச் சொல்லி அரசிடம் போராடுவதை விட்டுவிட்டு, லாட்டரி முதலாளிகளின் 'நியாயமான' கோரிக்கையை ஆதரித்து மீண்டும் லாட்டரி சூதாட்டத்தைத் தொடங்கக் கோரி போலி கம்யூனிஸ்டுகள் போராடக் கிளம்பி விட்டார்கள். மதுரை தல்லாகுளம் தந்தி அலுவலகம் அருகே 4.4.05 அன்று லாட்டரி வியாபாரிகள் நடத்திய உண்ணாவிரதப் போராட்டத்தை சி.பி.எம். கட்சியின் மதுரை எம்.பி.யான திருவாளர் மோகன் தொடங்கி வைத்து வாழ்த்துரையும் வழங்கியுள்ளார்.

இந்தியாவிலேயே முதன்முதலாக லாட்டரி சூதாட்டத்தை கேரளாவில் தொடங்கி வைத்த முன்னோடிகள் போலி கம்யூனிஸ்டுகள்தான். எனவே தான் தமது பாரம்பரியப் பெருமையுடன் சீரழிவுக்குச் சிவப்புக் கம்பளம் விரித்து வரவேற்று ஆதரிக்கக் கிளம்பிவிட்டார்கள் போலும்! இதே வழியில் நாளை சாராயம், மசாஜ் பார்லர், வீடியோ பார்லர், விபச்சாரம், கந்துவட்டி முதலானவற்றையும் வரவேற்று போராட்டம் நடத்தினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

சுரண்டும் சூதாட்டக் கும்பலின் கொள்ளைக்கும் ஆதிக்கத்துக்கும் சமூக சீரழிவுக்கும் ஆதரவாக நிற்கும் போலி கம்யூனிஸ்டு துரோகிகளை அம்பலப்படுத்தி, ''மகா நடிகர் எம்.பி. மோகனே, கம்யூனிஸ்ட் என்று சொல்லாதே!'' என்ற தலைப்பிட்டு அதேநாளில் மதுரை நகரெங்கும் புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி சுவரொட்டிப் பிரச்சாரத்தை மேற்கொண்டது. போலி கம்யூனிஸ்டுகளைக் கையும் களவுமாகப் பிடித்து அவர்களின் முகத்திரையைக் கிழித்துக் காட்டிய இச்சுவரொட்டிகள் உழைக்கும் மக்களிடம் பெருத்த வரவேற்பைப் பெற்றதோடு, சி.பி.எம். கட்சி அணிகளிடையே விவாதத்தைத் தூண்டிவிட்டுள்ளது.




- புரட்சிகர மாணவர்- இளைஞர் முன்னணி, மதுரை.


## அன்று கொன்றது சுனாமி! நின்று கொல்கிறது அரசு!

# இன்னுமொரு சாட்சியம்!

சுனாமியால் பாதிக்கப்பட்ட கடலூர் - சிங்காரத் தோப்பைச் சேர்ந்த பார்த்திபன் என்ற இளைஞர் கடந்த மார்ச் 27-ஆம் தேதியன்று கடன் தொல்லை தாளாமல் தற்கொலை செய்து கொண்டு மாண்டு போயுள்ளார். ஒரு நவீன எந்திரப் படகுடன் மீன்பிடித் தொழிலைச் செய்து வந்த இவர் சிங்காரத் தோப்பு மீனவர் பஞ்சாயத்தின் செயலராகவும் இருந்து வந்துள்ளார். சுனாமி பேரழிவினால் இவரது படகு உடைந்து நாசமாகி வாழ்விழந்து நின்றார். அரசு நிவாரணத்தின் மூலம் படகைச் செப்பனிட்டு கடனை அடைத்து, மீண்டும் வாழ்ந்து முன்னேற முடியும் என்ற அவரது நம்பிக்கையில் இடியாய் இறங்கியது அரசின் அற்ப நிவாரண உதவி.

உடைந்த படகை சீர் செய்யவே ரூ. 3 இலட்சத்துக்கு மேல் தேவைப்பட்ட நிலையில், நிவாரணமாக ஏறத்தாழ ரூ. 1 லட்சம் தருவதாக - அதுவும் கடனாகத் தருவதாகக் கூறினர், ஆட்சியாளர்கள். என்ஜினை இலவசமாக சீர் செய்து தருவதாகப் பசப்பிய - அரசால் ஏற்பாடு செய்யப்பட்ட சென்னையைச் சேர்ந்த நைலான் கம்பெனி ரூ. 65,000 பில் போட்டு அவருக்கு அனுப்பியது. அற்ப நிவாரணத்தைக் கொண்டு எதுவும் செய்ய முடியாத நிலையில், மாவட்ட ஆட்சியரிடம் ஐந்து முறை மனு கொடுத்தும், நிலைமையை நேரில் விளக்கியும் கூட எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாததால் நிவாரணத் தொகையாக அரசு அனுப்பிய காசோலையை வாங்க மறுத்து அவர் திருப்பியனுப்பி விட்டார். உரிய நிவாரண உதவியைச் செய்ய மறுக்கும் அரசின் அலட்சியப் போக்கை எதிர்த்து தீக்குளிக்கப் போவதாகவும் எச்சரித்து மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்துப் பார்த்தார். ஆனாலும் அரசு எந்திரம் அசைந்து கொடுக்கவில்லை. வாழ்விழந்து விரக்தியடைந்த பார்த்திபன், தற்கொலையைத் தீர்வாகத் தேடிக் கொண்டார்.

நிவாரண உதவி கிடைக்காமல் தற்கொலை செய்து கொண்ட மீனவர் பார்த்திபன்.



உரிய நிவாரண உதவியின்றி கடன் தொல்லை தாளாமல் பார்த்திபன் மரணமடைந்த செய்தியறிந்து திரண்ட பத்திரிகை புகைப்படக்காரர்கள், தொலைக்காட்சியினரை அ.தி.மு.க. குண்டர்கள் விரட்டியடித்து உண்மைக் காரணம் வெளிவராதபடி தடுத்தனர். போலீசாரோ, மாவட்ட ஆட்சியரிடம் பார்த்திபன் அளித்த மனுக்களை அள்ளிச் சென்று எந்தத் தடயமும் இல்லாமல் மறைத்து விட்டனர்.

- பு.ஜ. செய்தியாளர், கடலூர்.


படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

**தொகுதி: 20**

**இதழ் 7**

மே 2005

*உள்நாடு*
**தனி இதழ்: ரூ. 5.00**
**ஆண்டு சந்தா: ரூ. 60.00**

*வெளிநாடுகள்*
**(வான் அஞ்சலில்)**
**ஆண்டு சந்தா: US$ 10**

*படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்*



**புதிய ஜனநாயகம்,**
**110, இரண்டாம் தளம்,**
**63, என்.எஸ்.கே. சாலை,**
**(அ.பெ.எண்: 2355)**
**கோடம்பாக்கம்,**
**சென்னை - 600 024.**


# நாட்டை மறுகாலனியாக்குவதில் காங்கிரசின் நாலுகால் பாய்ச்சல்

**போ**லி கம்யூனிஸ்டுகளின் ஆதரவோடு நடந்துவரும் காங்கிரசு கூட்டணி ஆட்சி, அரசுத் துறையிலும், தனியார் துறையிலும் வேலை பார்த்துவரும் தொழிலாளர்களுக்கு மே தினப் பரிசாக, தொழிலாளர் ஓய்வூதிய வைப்பு நிதியைத் தனியார்மயமாக்கும் சட்டத்தைத் தரப் போகிறது. உலக வங்கி பத்தாண்டுகளுக்கு முன்பு ஓய்வூதியம் பற்றித் தயாரித்து அளித்த அறிக்கையின் ''ஜெராக்ஸ்'' காப்பிதான் இப்புதிய ஓய்வூதியச் சட்டம்.

இதற்கு முந்தைய ஓய்வூதியத் திட்டத்தின்படி, தொழிலாளர்கள் வகிக்கும் பதவி, அவர்களது பணிக்காலம் ஆகியவற்றைப் பொருத்து, அவர்கள் ஓய்வு பெற்ற பின், மாதா மாதம் குறிப்பிட்ட தொகை ஓய்வூதியமாகக் கொடுக்கப்பட்டது. ஆனால், தற்பொழுது கொண்டுவரப்பட்டுள்ள ஓய்வூதியத் திட்டத்தின்படி தொழிலாளர்கள் குறிப்பிட்ட தொகையை மாதாமாதம் வைப்பு நிதிக்குச் செலுத்த வேண்டும். இந்தத் தொகை, தொழிலாளர்களிடமிருந்து பெறப்படும் ஒப்புதலுக்கு ஏற்ப, முழுமையாகவோ, பகுதியளவோ பங்குச் சந்தையில் முதலீடு செய்யப்படும். அந்தச் சூதாட்டத்தில் கிடைக்கும் இலாபத்துக்கு ஏற்பத்தான் ஓய்வூதியம் வழங்கப்படும். பங்குச் சந்தை திடீரென கவிழ்ந்து போனால், தொழிலாளர்கள் ஓய்வூதியத்திற்குப் பதிலாக தூக்குக் கயிறைத்தான் தேட வேண்டியிருக்கும்.

அரசாணையாக இருந்து வரும் இப்புதிய ஓய்வூதியத் திட்டத்தைச் சட்டமாக்கும் நோக்கத்தோடு, மார்ச் மாத இறுதியில் நாடாளுமன்றத்தில் சட்ட நகலை தாக்கல் செய்துவிட்டது, காங்கிரசு கூட்டணி ஆட்சி. தற்பொழுது சனவரி 2004-க்குப் பின் பணியில் சேர்ந்த மைய அரசு ஊழியர்களுக்கு மட்டுமே பொருந்தக் கூடிய இப்புதிய ஓய்வூதியத் திட்டத்தை, மைய-மாநில அரசுகள் மற்றும் தனியார்துறையைச் சேர்ந்த அனைத்துத் தொழிலாளர்களுக்கும் விரிவாக்கி, பழைய ஓய்வூதியத் திட்டத்தை முற்றிலுமாக ஒழித்துக் கட்ட வேண்டும்; ஓய்வூதியத்திற்காகத் தொழிலாளர்களிடமிருந்து பிடிக்கப்படும் சேமநல நிதியை நிர்வகிக்கும் பொறுப்பில் இருந்து அரசைக் கழட்டிவிட்டு விட்டு, பன்னாட்டு நிறுவனங்களிடமும், தனியார் முதலாளிகளிடமும் அப்பொறுப்பை ஒப்படைக்க வேண்டும் என்பதுதான் ப.சிதம்பரத்தின் நோக்கம். இதுநாள்வரை தொழிலாளர்களிடமிருந்து பிடிக்கப்படும் சேமநல நிதியை அரசுக்குச் செலுத்தாமல் சட்டவிரோதமாகக் கொள்ளையடித்து வரும் முதலாளிகள், இனி, ப.சிதம்பரத்தின் தயவால் சட்டப்படியே கொள்ளையடிக்கலாம்.

தொழிலாளர்களின் எதிர்காலத்தின் மீது அணுகுண்டை வீசியுள்ள மைய அரசு விவசாயிகளையும் விட்டுவிடவில்லை. கடந்த சனவரி மாதம் மைய அரசால் கொண்டு வரப்பட்டுள்ள புதிய விதைச் சட்டம், ''விவசாயிகள் தங்களின் சொந்த உபயோகத்திற்காக விதைகளைச் சேமிப்பதை; தங்களின் சேமிப்பில் உள்ள விதைகளை விவசாயிகள் விற்பதை; ஒருவருக்கொருவர் பரிமாற்றம் செய்து கொள்வதை''த் தடை செய்கிறது. அதாவது, பன்னாட்டு நிறுவனங்கள் விற்கும் விதைகளைத்தான் இனி விவசாயிகள் பயன்படுத்த வேண்டும் என்பதுதான் இச்சட்டத்தின் பொருள்.

இச்சட்டத்தை மீறும் விவசாயிகள் மீது 50,000 ரூபாய் அபராதம் விதிக்கப்படுவதோடு, அவர்களுக்கு ஆறு மாதம் சிறைத் தண்டனையும் கிடைக்குமாம். இச்சட்டத்தை விவசாயிகள் மீறுகிறார்களா எனக் கண்காணிக்க தனிப்படை அமைக்கப்படும் என்பதோடு, அப்படையானது விவசாயிகளின் வீடுகளுக்குள் புகுந்து, நெல் குதிரைத் திறந்து பார்த்துச் சோதனை போடவும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

மேலும், அரசிடம் உள்ள நெல் / கோதுமை கொள்முதலையும் பன்னாட்டு நிறுவனங்களிடம் தாரை வார்க்கும் முகமாக, பன்னாட்டு நிறுவனங்கள் தானிய கிடங்குகளைத் திறந்து கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளன. இதற்காக, புதிய மாதிரி சந்தை சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.

உலக வர்த்தகக் கழக ஒப்பந்தப்படி, பன்னாட்டு நிறுவனங்களின் மேலாதிக்கத்திற்கு ஏற்றவாறு, இந்தியா, தனது பொருளாதாரத்தை இந்த ஆண்டிற்குள் முற்றிலுமாக மாற்றி அமைக்க வேண்டும். காப்புரிமை சட்டம் திருத்தப்பட்டிருப்பது; மதிப்புக் கூட்டுவரி நடைமுறைப்படுத்தப்பட்டிருப்பது; ஜவுளி - பின்னலாடை ஏற்றுமதிக்கு இருந்து வந்த ''கோட்டா'' முறை ரத்து செய்யப்பட்டிருப்பது; சேவை வரி விரிவுபடுத்தப்பட்டிருப்பது மற்றும் புதிய ஓய்வூதியச் சட்டம், புதிய விதைச் சட்டம், புதிய சந்தை சட்டம் ஆகிய இப்பொருளாதார சீர்திருத்தங்கள் அனைத்தும் உலக வர்த்தகக் கழக உத்தரவுப்படி நாடு மறுகாலனியாக்கப்படுவதைத்தான் எடுத்துக் காட்டுகின்றன. ●

படிப்பகம்

www.padippakam.com

# போப் ஜான் பால் - II

# ஆசி வழங்கிய கரங்களில் இரத்தக் கறை!

மரணமடைந்த போப் இரண்டாவது ஜான்பால் மற்றும் அவரிடத்துக்குப் புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள போப் பதினாறாம் பெனடிக்ட் ஆகிய இருவரின் துதிபாடும் வேலையில் உலகம் முழுவதும் உள்ள முதலாளித்துவ - ஏகாதிபத்திய செய்தி ஊடகங்கள் தீவிரமாக இறங்கியுள்ளன.

உண்மையில் இவர்கள் இருவருமே கத்தோலிக்கத் திருச்சபையில் சின்னஞ்சிறிய சீர்திருத்தத்தைக் கூடக் கடுமையாக எதிர்த்த மத அடிப்படைவாத, பழங்கோட்பாட்டுவாதிகள், மத வெறியர்கள், எதிர்ப் புரட்சியாளர்கள், கம்யூனிச எதிர்ப்பாளர்கள், பாசிஸ்டுகள். உலகின் பல்வேறு நாட்டு இராணுவ - பாசிச சர்வாதிகாரிகளை குறிப்பாக இட்லர்-முசோலினி ஆகிய நாஜி - பாசிசக் கொடுங்கோலர்கள் முதல் ஏகாதிபத்திய போர் வெறியர்களான அமெரிக்க அதிபர்கள் ரீகன், மூத்த - இளைய புஷ்கள் வரை ஆதரித்தவர்கள்.

போப் இரண்டாம் ஜான் பால் கருணையில் கர்த்தருக்கு அடுத்த இடத்தில் இருந்தவர்; மனித நேயத்தில் அன்னை தெரசாவுக்கும் மேலானவர்; மனித உரிமைப் போராளி என்றெல்லாம் செய்தி ஊடகங்கள் கதையளக்கின்றன. ஆனால், உலகம் முழுவதுமுள்ள நூறு கோடிக்கும் மேலான கத்தோலிக்கர்களுக்கு ஆசி வழங்கிய அவரது கரங்கள் இரத்தக் கறை படிந்தவை என்றே வரலாறு காட்டுகிறது.

சோவியத் ஒன்றியம் உட்பட கிழக்கு ஐரோப்பாவில் ''கம்யூனிச சர்வாதிகாரம்'' என்றழைக்கப்பட்ட போலி சோசலிசத்தின் கீழ் மனித உரிமைகள் மறுக்கப்படுவதாக கூறி, அந்த ஆட்சிகளை வீழ்த்துவதற்குக் கடும் முயற்சிகளை மேற்கொண்ட இரண்டாவது ஜான்பால் தனது ஆட்சியின் கீழிருந்த திருச்சபையில் மாற்றுக் கருத்துக்கான உரிமைகளை நசுக்கியவர்.

போப் இரண்டாம் ஜான் பால் என்றறியப்பட்ட கரோல் ஜோசப் வூஜ்தியா, தனது 58-வது வயதில் போப்பரசராக, அதாவது 1978 அக்டோபரில் தெரிவு செய்யப்பட்ட, முதலாவது கிழக்கு ஐரோப்பியராவார். 455 ஆண்டுகளுக்குப் பிறகு போப்பாகிய இத்தாலியரல்லாதவர். போலந்து நாட்டவர். போலந்தின் கிராக்செள நகருக்கு அருகிலுள்ள வாடோனவஸ் என்ற சிறு நகரத்தவர்.

இரண்டாம் உலகப் போரின் போது, போலந்து நாட்டை இட்லரின் நாஜிக்கள் ஆக்கிரமித்தபோது, சுரங்க வேலை செய்து கொண்டே, இரகசியமாக இயங்கிவந்த கிறித்துவப் பாதிரியாருக்கான பயிற்சிப் பள்ளியில் சேர்ந்து படித்து வந்தார். இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு ஏற்பட்ட ''கம்யூனிச ஆட்சி''க்கு எதிராக அவர் ஆற்றி வந்த இரகசிய மற்றும் நாசவேலைகளுக்குப் பரிசாகக் கிட்டியதுதான் போப்பரசர் பதவி.

இத்தாலியர் அல்லாத, கிழக்கு ஐரோப்பாவைச் சேர்ந்த ஒரு போலந்து நாட்டுத் தலைமை மதகுரு புதிய போப்பரசராக தெரிவு செய்யப்பட்டது, உலகம் முழுவதும் வியப்போடும் பரப்பரப்பாகவும் அப்போது பேசப்பட்டது. ஆனால், அதற்குக் காரணமாக அமைந்தது — போப்பரசரைத் தெரிவு செய்யும் ஆலோசனைக் கூட்டத்தில் அமெரிக்கப் பிரதிநிதிக் குழுவின் பங்கு அமைந்தது பலருக்கும் தெரியாது.

''போப் பதவிக்காக இத்தாலிய வேட்பாளர்களுக்கிடையில் ஏற்பட்ட போட்டி - நெருக்கடியைப் பயன்படுத்திக் கொண்டு போலந்து கார்டினலை அமெரிக்கப் பிரதிநிதிகள் குழு முன்மொழிந்தது'' என்று அப்போதைய ''அமெரிக்கன் போஸ்ட்'' நாளிதழ் எழுதியது. போலந்து நாட்டு கரோல் வூஜ்தியா தான் போப்பாகத் தேர்ந்தெடுக்கப்படுவார் என்று போலந்து குறித்த நிபுணரும், அமெரிக்காவின் ஹார்வர்டு இறையியல் பள்ளியின் தலைவருமான ஜார்ஜ் வில்லியம்ஸ் முன்கூட்டி அறிவித்தார். இவர் வாடிகன் உள் விவகாரங்களை நன்கு அறிந்தவர். 1978 போப் தேர்தலில் அமெரிக்காவின் பங்கு இருந்ததை

*ஊடகங்களால் ஊதிப் பெருக்கப்பட்ட போப்:* போப் ஜான் பால்-II -இன் கம்யூனிச எதிர்ப்பிற்காகத்தான் அவரை கர்த்தருக்கு அடுத்த இடத்தில் இருப்பவராக ஊடகங்கள் தூக்கிப் பிடித்தன. அமெரிக்காவின் ''டைம்'' இதழ் மட்டும் கடந்த 26 ஆண்டுகளில், 15 முறை போப் ஜான் பால்-II -ஐப் பற்றி அட்டைப்படக் கட்டுரை வெளியிட்டது.






பிரெஞ்சு கார்டினல் ஜீன் குயோட்டு லூஸ் உறுதி செய்தார்.

போப் பதவிக்கு இத்தாலியரையே தெரிவு செய்யும் நூற்றாண்டுக்கணக்கான மரபு மீறப்பட்டது, ஆக்கப்பூர்வமான, புதுமையான முயற்சி காரணமாக அல்ல. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கம்யூனிச எதிர்ப்பு, எதிர்ப்புரட்சி, போர்வெறிக்கு ஊழியஞ் செய்வதற்கு மிகவும் தகுதியானவர் என்று தீர்மானிக்கப்பட்டு, அமெரிக்க நிதி மூலதனத்தின் நிர்ப்பந்தம் காரணமாகவே கரோல் வூஜ்தியா போப்பாக்கப்பட்டார்.

இதை வாடிகனின் மிகப்பெரிய மேதமைமிக்க செயல் என்று மேற்குலகின், குறிப்பாக அமெரிக்காவின் செய்தி ஊடகங்கள் வானளாவப் போற்றின. கிழக்கு ஐரோப்பாவில் நிறுவப்பட்டிருந்த ''கம்யூனிச ஆட்சி''களைக் கலைப்பதில் புதிய போப் சிறப்பாக பங்காற்றுவார் என்று அப்போதே முதலாளித்துவ செய்தி ஊடகங்கள் மதிப்பீடுகளை எழுதின.

அமெரிக்கா மற்றும் சோவியத் ஒன்றியம் ஆகிய இரு மேல்நிலை வல்லரசுகளும் உலக மேலாதிக்கத்துக்கான கடும்போட்டியில் இறங்கி, ஐரோப்பாவில் கழுத்துவரை அணு ஆயுதங்களைக் குவித்து வைத்துக் கொண்டு, மூன்றாம் உலகப் போருக்குள் உலகை ஆழ்த்தும் தயாரிப்பில் ஈடுபட்டிருந்த சமயத்தில் இரண்டாம் ஜான்பால் போப்பரசராகியிருந்தார்.

''சோவியத் ஒன்றியத்துக்கு எதிராக அமெரிக்க அதிபர் ரொனால்டு ரீகனுடன் நெருக்கமான கூட்டணி அமைத்துக் கொண்ட போப் இரண்டாம் ஜான் பால், மேற்கு ஐரோப்பாவில் அணு ஆயுதங்களைக் குவிப்பதை ஆதரித்து ஆசி வழங்கினார்; இறுதியில் கம்யூனிசத்தை வீழ்த்துவதற்கு ரீகனுடன் சேர்ந்து வேலை செய்தார்'' என்று வாடிகனுக்கான அமெரிக்கத் தூதர் ஜிம் நிகல்சன் கூறினார்.

''சோவியத்துக்கள் எவ்வாறு மேலும் மேலும் மேற்கு நோக்கி அணு ஆயுதங்களைக் குவிக்கின்றன என்று காட்டும் நேரடி விண்கோள் புகைப்படங்களைப் போப்புக்குக் காட்டுவதற்கு அமெரிக்க இராணுவ தளபதி ஜெனரல் வெர்னோன் வால்டர்சை அனுப்புவதை ரீகன் வழக்கமாகக் கொண்டிருந்தார். அப்போது சோவியத்துக்களுக்கு எதிராக அமெரிக்காவின் குருயிசு ஏவுகணைகளைக் குவிப்பதை போப் ஆதரித்தார் என்ற முக்கியமான விசயம் ஒரு சிலருக்கே தெரியும்'' என்று அமெரிக்க தூதர் கூறியுள்ளார்.

''அமெரிக்காவின் இராணுவ நடவடிக்கைகள் குறித்து வாடிகனுக்குப் போய் விளக்குவதை போலிஷ் மொழி பேசும் தளபதி வால்டர்ஸ் வழக்கமாகக் கொண்டிருந்தார். அணு ஆயுதந்தாங்கிய குருயிசு ஏவுகணைகளை மேற்கு ஐரோப்பாவில் குவிப்பது குறித்து அந்நாடுகளின் தலைவர்கள் பயந்து நடுங்கிக் கொண்டிருந்தபோது போப்பின் ஆதரவு அமெரிக்காவுக்கு மிகவும் முக்கியமானதாக அமைந்தது'' என்கிறார் நிக்கல்சன்.


பனிப்போர் நடவடிக்கைகளில் மட்டுமல்ல, எதிர்ப்புரட்சி நடவடிக்கைகளில், குறிப்பாக கத்தோலிக்கப் பழமைவாதத்துக்கு எதிராகத் தோன்றிய ''விடுதலை இறையியல்'' என்ற பெயரில் நடந்த தென் அமெரிக்க எழுச்சியை ஒடுக்குவதில் போப் இரண்டாம் ஜான் பாலும் அமெரிக்க அதிபர் ரொனால்டு ரீகனும் கூட்டணி அமைத்துக் கொண்டு செயல்பட்டனர்.

தென் அமெரிக்காவில் கியூபன் புரட்சியின் எதிரொலியாகவும் வியத்நாம் - லாவோஸ் - கம்போடியாவில் அமெரிக்க ஏகாதிபத்தியம் அடைந்த படுதோல்வி மற்றும் தேசிய விடுதலைப் புரட்சியின் வெற்றி காரணமாகவும், பல்வேறு நாடுகளில் அமெரிக்க ஆதரவு இராணுவ-பாசிச சர்வாதிகாரிகளுக்கு எதிரான எழுச்சிகள் வெடித்தன. தென் அமெரிக்காவின் பல நாடுகளிலும் உழைக்கும் மக்கள் புரட்சிப் போராட்டங்களில் குதித்தனர். கத்தோலிக்கத் தொழிலாளிகள்-விவசாயிகளோடு, திருச்சபையின் கீழ்நிலைப் பாதிரியார்களும் பிஷப்புகளும் கூட இந்த எழுச்சியில் பங்கேற்றனர். கத்தோலிக்க மதச் செல்வாக்கில் இருந்து விலகிச் செல்லும் உழைக்கும் மக்களைத் தக்க வைத்துக் கொள்வதற்கு மதச் சீர்திருத்தம் அவசியமாயிருந்தது.

**பனிப்போர் நடவடிக்கைகளில் மட்டுமல்ல, எதிர்ப்புரட்சி நடவடிக்கைகளில், குறிப்பாக கத்தோலிக்கப் பழமைவாதத்துக்கு எதிராகத் தோன்றிய ''விடுதலை இறையியல்'' என்ற பெயரில் நடந்த தென் அமெரிக்க எழுச்சியை ஒடுக்குவதில் போப் இரண்டாம் ஜான் பாலும் அமெரிக்க அதிபர் ரொனால்டு ரீகனும் கூட்டணி அமைத்துக் கொண்டு செயல்பட்டனர்.**

ஐரோப்பாவில் நடந்த புராட்டஸ்டண்ட் புரட்சிகளுக்குப் பிறகு, தென் அமெரிக்காவில் கத்தோலிக்க மதம் கண்ட இந்த எழுச்சியின் விளைவுதான் ''விடுதலை இறையியல்'' ரொனால்டு ரீகனுடைய அதிபர் தேர்தலில் பணியாற்றிய அதே கும்பல் சாந்தா டீ என்ற நகரில் 1980-ஆம் ஆண்டு ஒரு மாநாட்டில் கூடி பின்வரும் அறிக்கையை வெளியிட்டது: ''விடுதலை இறையிய''லுக்கு எதிர் வினையாற்றுவதாக மட்டும் அமெரிக்க வெளிவிவகாரக் கொள்கை இருந்துவிடக் கூடாது. அதனுடன் மோதுவதைத்

www.padippakam.com



தொடங்கிவிட வேண்டும். தனியார் சொத்துடைமைக்கும் முதலாளிய உற்பத்தி முறைக்கும் எதிரான அரசியல் ஆயுதமாக திருச்சபையை மார்க்சிஸ்டு - லெனினிஸ்டு சக்திகள் பயன்படுத்திக் கொள்கிறார்கள். கிறித்துவத்தைவிட அதிக அளவில் கம்யூனிசக் கருத்துக்களால் கத்தோலிக்க மத சமூகத்துக்குள் அவர்கள் ஊடுருவுகிறார்கள்.''

இம்மாநாட்டுக்குப் பிறகு உடனடியாகவே விடுதலை இறையியலுக்கு எதிராக அதிபர் ரீகன், போப் இரண்டாம் ஜான் பாலுடன் கூட்டணி அமைத்துக் கொண்டார். போப் விடுதலை இறையியலோடு பழைமைவாதக் கத்தோலிக்க கோட்பாடுகளாலும் வாடிகனின் மத அதிகாரத்தாலும் சண்டையிட்டார் என்றால், ரீகன் நிர்வாகமும் அதன் இலத்தீன் அமெரிக்கக் கூட்டாளிகளும் விடுதலை இறையியலாளர்களைப் படுகொலை செய்தனர்.

போப் இரண்டாம் ஜான் பால் - ரீகன் கூட்டணியின் சதியால் பழிவாங்கப்பட்டவர்களில் முக்கியமானவர் எல் சால்வடோர் நாட்டு ஆர்ச் பிஷப் ஆஸ்கார் ரொமேரோ. இவர் பிரார்த்தனை நடத்திக் கொண்டிருந்த போதே, அந்நாட்டு வலதுசாரி மதவெறி கும்பலின் கொலைக் குழுவால் படுகொலை செய்யப்பட்டார். இக்கொலைக் குழுக்களின் சட்டபூர்வ அரசியல் இயக்கமான அரேனா கட்சி, படுகொலைக்கு ஒரு சில வாரங்கள் முன்பாகத்தான் வாடிகனுக்கு ஒரு தூதுக்குழுவை அனுப்பி, ரொமேரோ ஏழை-எளிய மக்களுக்கு ஆதரவாகச் செயல்படுவதைக் கண்டித்து போப்பிடம் புகார் செய்தனர். இதிலிருந்து, விடுதலை இறையியல் போராளி ரொமேரோ, போப்பின் ஆசியுடனே படுகொலை செய்யப்பட்டார் என்று தெரிகிறது.

கொல்லப்பட்ட ரொமேரோவை ஒரு புனிதத் துறவி என்று எல்சால்வடோர் நாட்டு மக்கள் போற்றும் அதேசமயம், அடுத்த 50 ஆண்டுகளுக்கு அவரைப் புனிதராக அறிவிக்கும் பிரச்சினை குறித்துப் பேசுவதற்கு போப் ஜான்பால் தடை விதித்தார். சால்வடோர் மக்களின் கடும் எதிர்ப்புக்குப் பிறகு அத்தடையை 25 ஆண்டுகளாகக் குறைத்தார்.

**கத்தோலிக்கப் பாதிரியார்களின் பாலியல் குற்றங்களை விசாரிக்க மறுத்து, போப் ஜான்பால் மூடிமறைத்தார். குறிப்பாக, சிறுவர்களிடம் ஓரினச் சேர்க்கை - பாலியல் வன்முறை குற்றம் புரிந்த பாதிரியார்களைப் பாதுகாத்தார்.**

முற்போக்குப் பாதிரியரான ரொமேராவை படுகொலை செய்வதற்கு ஆசி வழங்கிய போப் ஜான் பால், ஸ்பெயின் நாட்டு பாசிச பாதிரியான ஜோஸ் மரியா எஸ்கிரிவாவை அனைவரும் பின்பற்ற வேண்டிய முன்மாதிரியாகப் போற்றினார். இவர் கத்தோலிக்க மதவெறி பாசிச இரகசிய அமைப்பான ஓபஸ் டை (கடவுளின் பணிகள்)யை நிறுவியர். முற்போக்காளர்களுக்கு எதிரான ஆயுதமாக இந்த ஓபஸ் டை மற்றும் பிற இரகசியக் குழுக்களை போப் பயன்படுத்தினார்.

வாடிகனின் பழைமைவாதத்துக்கு உடன்பட்டுச் செயல்பட மறுத்த பிரேசில்-அமெரிக்க நாடுகளின் பிஷப்புகளுக்குப் பதிலாக இந்த பாசிச ஓபஸ் டை அமைப்பின் உறுப்பினர்களை போப் நியமித்தார். தனது சொந்த நாடான போலந்தில் ''கம்யூனிச'' ஆட்சியை வீழ்த்துவதற்காக அங்கு பிஷப்பாகவும் கார்டினலாகவும் இருந்த போது கூட அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த கரோல் வூஜ்தியா, போப்பரசரான பிறகு விடுதலை இறையியல் நோக்கில் பாதிரியார்கள் அரசியலில் ஈடுபடுவதைக் கடுமையாக எதிர்த்தார். நிகாரகுவோவில் சாண்டினிஸ்டா புரட்சியாளர்களோடு **(FSNL)** சேர்ந்து அமைச்சராகப் பதவியேற்றுப் பணியாற்றிய பாதிரியார் எனஸ்டோ கார்டினால் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

கத்தோலிக்கப் பாதிரியார்களின் பாலியல் குற்றங்களை விசாரிக்க மறுத்து, போப் ஜான்பால் மூடிமறைத்தார். குறிப்பாக, சிறுவர்களிடம் ஓரினச் சேர்க்கை - பாலியல் வன்முறை குற்றம் புரிந்த பாதிரியார்களைப் பாதுகாத்தார். அதேசமயம் பாதிரியார்கள் மணம் புரிந்து கொண்டு



படிப்பகம்

இயல்பான பாலியல் உறவு வைத்துக் கொள்வதற்கான உரிமைகளை மறுத்தார். பெண்கள் கருத்தடை சாதனங்கள் மற்றும் மருந்துகளைப் பயன்படுத்துவதையும் கருக்கலைப்பு உரிமையையும் கடுமையாக எதிர்த்தார்.

கத்தோலிக்கப் பாதிரியார்கள் முற்பாக்கு அரசியலில் ஈடுபடுவதைக் கடுமையாக எதிர்த்த போப் ஜான்பால், கிறித்துவ ஜனநாயக் கட்சிகள் மூலம் ஐரோப்பாவின் பல நாடுகளில் அரசியல் தலையீடு செய்தார். அக்கட்சிகளுக்கு ஏகாதிபத்தியங்களிடமிருந்து பல ஆயிரம் கோடி ரூபாய் நிதி உதவிகளை பெற்றுத் தந்தார். இரகசிய பாசிசக் குழுக்கள் மூலமாகவும் பல நாடுகளில் அரசியல் தாக்குதல் நடவடிக்கைகள் தொடர்வதற்கு ஆசி வழங்கினார். லெபனானின் பிளங்கிஸ் கட்சி அத்தகையவைகளில் ஒன்றாகும். கத்தோலிக்கக் கிறித்தவக் கட்சியான இதன் கொரில்லாக் குழுக்களுக்கு ஐரோப்பாவில் பயிற்சியளிப்பதற்கு வாடிகன் உதவி புரிந்தது.

இராணுவத்துடனான உறவுகளைக் கவனித்துக் கொள்ளும் பிஷப்புகளை விகார்கள் என்பார்கள். லெபனானில் கிறித்துவப் பிளங்கிஸ்டு கட்சியின் இராணுவ நடவடிக்கைகளில் பங்கேற்பதற்காக அமெரிக்க இராணுவத்துக்கான விகாரை போப் அனுப்பி வைத்தார்.

அர்ஜென்டினா நாட்டின் 1976 ஆட்சிக் கவிழ்ப்பின்போது இராணுவ சர்வாதிகாரிகளுடன் இராணுவ விகார்களும் கலந்தாலோசனைகளில் பங்கு பெற்றனர். இராணுவ ஆட்சியை எதிர்த்த கத்தோலிக்கப் பாதிரிகள் உட்பட பல போராளிகளை இரகசிய சித்திரவதைகள், படுகொலைகள் புரிந்து கொன்றது இராணுவ ஆட்சி. இந்தப் பாசிசக் கொடுங்கோலாட்சியைப் பகிரங்கமாகவே ஆர்ச் பிஷப் அல்டாப்போ டோர்டோலே ஆதரித்தார். இராணுவப் படுகொலைகளை நியாயப்படுத்தினார்கள் பாதிரிமார்கள். பிஷப் ஜோஸ் மெதினாவை விகாராக நியமித்தார் போப் ஜான்பால். 1980-இல் அர்ஜென்டினா பயணம் சென்ற போப் மனித உரிமை அமைப்பினரை சந்திக்க மறுத்ததோடு, ''நம்பிக்கை வையுங்கள், அமைதி - பொறுமையோடு காத்திருங்கள்'' என்று தன்னைக் காண வந்த தாய்மார்கள் குழுவிடம் உபதேசித்தார்.

போப் இரண்டாம் ஜான்பாலின் தூதராகப் பணியாற்றிய ஆர்ச் பிஷப் பியோ லாகி, அர்ஜென்டினா இராணுவ சர்வாதிகாரிகளை இராணுவ முகாமுக்குச் சென்று சந்தித்து ஆசி வழங்கினார். அர்ஜென்டினாவில் நடந்த சித்திரவதைகள், படுகொலைகள், ஆள் கடத்தல்களில் இந்த கார்டினல் லாகி உடந்தையாக இருந்தார். அர்ஜென்டினா, நிகாரகுவா, பாலஸ்தீனத்தில் போப்பின் தூதராகப் பணியாற்றிய பிறகு, அவர் அமெரிக்காவின் ரீகன் நிர்வாகத்துக்கு தூதராக அனுப்பப்பட்டார். அங்கு சி.ஐ.ஏ. இயக்குனரான வில்லியம் கேசே உட்பட பல பழைமைவாத கத்தோலிக்க அதிகாரிகளுடன் இணைந்து பணியாற்றினார்.



**புதிய போப்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ராத்சிங்கர் (பெணடிக்ட்-16), கம்யூனிச எதிர்ப்பில் ஊறியவர் மட்டுமல்ல; இட்லரின் நாஜி இளைஞர் அணியில் பணியாற்றிய 'பெருமை'யும் அவருக்கு உண்டு.**

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு பழைய நாஜி அதிகாரிகள் பலரும் தென் அமெரிக்காவில் தஞ்சம் அடைவதற்கு அங்குள்ள கத்தோலிக்கத் தொடர்புகளை சி.ஐ.ஏ. பயன்படுத்திக் கொண்டது. அமெரிக்க நிர்வாகத்தில் கத்தோலிக்க அதிகாரிகள் நியமிக்கப்படுவதற்கு நிர்பந்தித்தது. அமெரிக்காவின் அந்நிய உதவிகள் அனைத்தும் கத்தோலிக்க அமைப்புகள் மூலமாக ஒழுங்குபடுத்தும்படி பார்த்துக் கொண்டது. ஒரு நூற்றாண்டு எதிர்ப்பையும் மீறி ரீகன் நிர்வாகம் வாடிகனுடன் முழு அளவிலான தூதரக உறவை நிறுவியது.

இராணுவ பாசிச சர்வாதிகாரிகளின் மனித உரிமை மீறல்களுக்கு உடந்தையாக இருந்து ஆசி வழங்கிய போப் இரண்டாம் ஜான்பால், ''கம்யூனிச ஆட்சி'' என்று தான் கருதிய நாடுகளில் மனித உரிமை மீறல்கள் குறித்து பெருங்கூச்சல் போட்டார். போலந்தில் பிஷப்பாக இருந்தபோதே பல இரகசியக் கூட்டங்கள் நடத்தி ஆட்சிக் கவிழ்ப்புக்கான பிரச்சாரங்கள் நடத்தினார்.

போலந்தில் ஆட்சிக் கவிழ்ப்புப் போராட்டங்களுக்குத் தலைமையேற்ற ''சாலிடாரிட்டி தொழிற்சங்கத்'' தலைவர் லே வலேசாவுடன் கத்தோலிக்க திருச்சபை கூட்டணி அமைத்துக் கொண்டது. சாலிடாரிடி இயக்கத்திற்கு 50 மில்லியன் டாலர் வாடிகன் வங்கி மூலமாகவே நன்கொடை கொடுத்து தூண்டிவிட்டது.

கம்யூனிச எதிர்ப்பில் அதிதீவிரவாதம் காட்டியவரும் ஒவ்வொரு தொழுகைக் கூட்டங்களிலும் ஆட்சிக் கவிழ்ப்புக்காக பிரச்சாரம் செய்தவருமான பாதிரி ஜெர்சி பொப்பியூஸ்கோ 1984-இல் போலந்து இராணுவத்தால் கொலை செய்யப்பட்டார் இது ''கம்யூனிச எதிர்ப்பாள''ருக்கு வசதியாகப் போய் விட்டது.

''உண்மையைப் போதனை செய்யுங்கள், பகுத்தறிவு மற்றும் மனித உண்மைகளை அல்ல. கடவுள் அளித்த உண்மைகளை போதியுங்கள்'' என்று கூறி அரசியல் தலையீடுகளை எதிர்த்த போப், போலந்தில் மதவாத அரசியலுக்காக மடிந்த பாதிரி ஜெர்சியின் கல்லறையின் முன்பு முழங்காலிட்டு பிரார்த்தனை செய்தார். கம்யூனிச எதிர்ப்பையே வாழ்வின் இலட்சியமாகக் கொண்டிருந்த போல் இரண்டாம் ஜான்பால் இறுதியில் போலி கம்யூனிசத்தை வீழ்த்துவதில் வெற்றியும் கண்டார்.

போப் இரண்டாம் ஜான்பாலைப் போலவே கம்யூனிச எதிர்ப்பு, மத வெறி பழங்கோட்பாட்டுவாதம், எதிர்ப்புரட்சி ஆகியவற்றில் ஊறியவரும், இட்லரின் நாஜி இளைஞர் அணியில் பணியாற்றியவரும் வாடிகன் நிர்வாகத்தை நடத்தும் நால்வர் கும்பலில் ஒருவருமான ஜெர்மன் கார்டினால் ராத்சிங்கர் புதிய போப்பாக தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். இது கத்தோலிக்கத் திருச்சபை மேலும் மேலும் பழைமைவாதச் சேற்றில் மூழ்கிக் கொண்டிருப்பதையே காட்டுகிறது.

• ஆர்.கே.

www.padippakam.com

## தமிழ் சினிமா கதாநாயகர்கள்

# தமிழனின் இரத்தத்தை உறிஞ்சும் அட்டைகள்

"இந்த தமிழ்ப் புத்தாண்டில், 14 வருடங்களுக்கு பிறகு ரஜினி நடித்த 'சந்திரமுகி' படமும் கமல் நடித்த 'மும்பை எக்ஸ்பிரஸ்' படமும் நேரடியாகக் களத்தில் மோதுவதால்(?) ரசிகர்களிடையே எதிர்பார்ப்பு சூடு பிடிக்கத் தொடங்கி விட்டது. இந்த போட்டியில் விஜய் நடித்த 'சச்சின்' படமும் கலந்து கொள்வதால் மும்முனைப் போட்டியில் யார் வெற்றி பெறுவார்கள் என்ற ஆவலும் ரசிகர்கள் மத்தியில் எழுந்து இருக்கிறது" என்று வானொலி, வானொளி மற்றும் சந்தை ஏடுகள் அடங்கிய செய்தி ஊடகக் கும்பல் தமிழ் சினிமா கழிசடைகளுக்குப் பரிவட்டம் கட்டும் வேலையில் மும்முரமாக இறங்கி விட்டன.

"தியேட்டர்களில் திருவிழாக் கோலம். அலைமோதும் ரசிகர்கள் கூட்டம், கட்அவுட், பேனர், அலங்கார வளைவு, பாலபிஷேகம், தேங்காய் உடைப்பு, பட்டாசு வெடிப்பு, அதிகாலை 4 மணி காட்சியில் ரஜினி ரசிகர்களின் ஆர்வத்தால் ரகளை - கல்வீச்சு" என்று தமிழகத்தையே தங்களின் திறந்தவெளி கழிப்பிடமாக்கி நாறடித்தது, தமிழ் சினிமா ரசிகர்கள் என்ற பொறுக்கிகள் கூட்டம்.

மலத்தை தடவிவிட்டு பணத்தை பறித்து ஓடும் வழிப்பறி திருடர்கள் போல், பதற்றத்தை உருவாக்கி, படத்தை 'ரிலீஸ்' செய்து பணத்தைச் சுருட்டியது தமிழ் சினிமாவின் படைப்பாளிகள், முதலாளிகள் கூட்டம்.

'தமிழ் புத்தாண்டு ரிலீஸ்' என்று 30 ரூபாய் டிக்கெட்டை 50 ரூபாய் ஆக உயர்த்தியதோடு, அதையும் 500 ரூபாய் வரை 'பிளாக்' டிக்கெட்டாக விற்று, ஒரு காட்சியில் ஒரு லட்சம் ரூபாய் வரை சுருட்டி, வரலாறு காணாத வசூல் மழையில் நனைந்தனர். ரஜினி, கமல், விஜய் என்று மூன்று நடிகர்களின் படத்திற்கு மொத்தம் 600 'பிரிண்ட்டு'களுக்கு மேல் போட்டு ஒவ்வொரு பிரிண்ட்டுக்கும் நாளொன்றுக்கு 5 காட்சிகள் வீதம் மொத்தமாக ஒரே நாளில் 30 கோடி ரூபாய் கொள்ளையடித்தனர்.

இந்த பகற்கொள்ளைக்கார சினிமா கும்பலுக்குப் பூரண அரசு மரியாதை அளித்து கௌரவிக்கிறார், பார்ப்பன பாசிச ஜெயலலிதா.

சினிமா படப்பிடிப்புக் கட்டணம், கேளிக்கை வரி மற்றும் திருட்டு வி.சி.டி. இவற்றின் 'மரணப் பிடி'யிலிருந்து தமிழ் சினிமாவை மீட்ட ஜெயலலிதா, மேலும் அன்புக்கரம் நீட்டி அதை அரசு மடியில் ஏந்திக் கொண்டார். விழா, விருது மற்றும் பலகோடி ரூபாய் மானியம் என்று தமிழ் சினிமாவை ஊட்டி வளர்க்கிறார்.

மறுபுறம், தொழிலாளர்கள், விவசாயிகள், மாணவர்கள் மற்றும் இளைஞர்களின் வாழ்வுரிமைக்கான போராட்டங்களை ஈவிரக்கமின்றி ஒடுக்கும் பாசிச ஜெயலலிதா, 'இப்போராட்டங்கள் தமிழகத்தின் ஒட்டு மொத்த சமுதாய நலன்களுக்கு எதிரானது' என்று கொச்சையாக தாக்குகிறார். ஆனால், அரை நிர்வாண, ஆபாச, பிற்போக்கு, இரட்டை அர்த்த வசனங்கள் நிரம்பி வழியும் கழிசடை தமிழ் சினிமாவிற்கு சூடு சொரணை இல்லாமல் போலீசு பாதுகாப்பு கொடுக்கிறார்.

தமிழ் புத்தாண்டு அன்று வெளியான தமிழ் திரைப்படங்களின் யோக்கியதைகளை சந்தை செய்தி ஏடுகள் எச்சில் ஒழுக வர்ணிப்பதை கேளுங்கள்,

மும்பை எக்ஸ்பிரஸ், "நாசரின் சின்ன வீடாக இருந்து கமலஹாசனிடம் தாவுகிற 'ஜில்ஜில்' மனிஷா கொய்ராலா சூப்பர் ஜிகிடி"

ரஜினியின் சந்திரமுகி பற்றி, "வடிவேலுவின் அதிரடி (ஆபாசம்) 'காமெடி' கூடுதல் அம்சம். இவர் (வடிவேலு) மனைவியையும் ரஜினியையும் இணைத்து சந்தேகப்படும் காட்சிகளில் (நண்பன் மனைவியோடு ரஜினி, ஒரே போர்வையில் புகுந்து லூட்டி அடிப்பது) தியேட்டர் அதிர்கிறது.

விஜய்யின் 'சச்சின்' படம் பற்றி, "இளமைக்கு ஹரிணி, கவர்ச்சிக்கு மும்பை வரவான பிபாஷாபாசு" என்று, இரட்டை கதாநாயகிகளுடன் ஆபாச கூத்து!

- இப்படி திரைவிமர்சனங்களிலேயே ஆபாசம் சொட்டுகிறது!

தமிழ் புத்தாண்டு அன்று தமிழ் சினிமா கழிசடைகள் தமிழர்களுக்கு கொடுத்திருக்கும் புதிய சிந்தனை, நண்பனின் மனைவியிடம் 'கடலை போடு' அதாவது 'ஜொள்ளு விடு'! இதற்குதான், விடியற்காலை 4 மணிக்கே சென்று வரிசையில் நிற்கிறார்களா தமிழ் சினிமா ரசிகர்கள்? போதாக்குறைக்கு போலீசு உதையும் புத்தாண்டு பரிசாக அவர்களுக்குக் கிடைத்தது.

சினிமா நடிகர்கள், இயக்குநர்கள் மற்றும் சினிமா முதலாளிகளான தயாரிப்பாளர்கள், திரையரங்கு உரிமையாளர்கள், விநியோகஸ்தர்கள் என்ற கூட்டு களவாணி கும்பல் சினிமா ரசிகர்கள் என்ற இலவச குதிரைகள் மீது ஏறி திரைப்படங்கள் மூலம் சீரழிவு, ஆபாசம், பிற்போக்கு, மூடத்தனங்களை தமிழகம் முழுக்க விதைத்து, அமோக விளைச்சலை அறுவடை செய்கிறது. வரலாறு காணாத வசூல் மழையில் திளைக்கிறது.

இதில், சகல ஓட்டுப் பொறுக்கிக் கட்சிகளின் பிரபல தலைவர்கள் பலர் கூட்டு! போலீசு அதிகாரிகள், அரசு உயர் மட்ட அதிகாரிகள் சகலரும் தங்கள் பினாமிகள் மூலம் 'பிரபல' நடிகர்களின் திரைப்பட விநியோக உரிமைகளை வளைத்துப் போடுகிறார்கள்.

காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த திருச்சி அடைக்கல

"மும்பை எக்ஸ்பிரஸ்" ஓடும் திரையரங்கில் கமலஹாசனைத் துதிபாடி வைக்கப்பட்டுள்ள "கட்-அவுட்"டுகள்: இச்சீரழிவு கலாச்சாரத்தைப் பரப்புவதில் நடிகர்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் வேறுபாடே கிடையாது.






படிப்பகம்

ராஜ், தி.மு.க. கட்சியின் தற்போதைய மத்திய மந்திரி ரகுபதி, அ.தி.மு.க.வின் சசிகலா நடராசன் ஆகியோர் தமிழ் சினிமாவை இயக்கும் ரகசிய 'தாதா'க்கள்! இவர்கள், தமிழ் சினிமாவில் கொட்டை போட்ட பல ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பு கொண்ட 'ஏவிஎம்' நிறுவனத்தையே மிரட்டும் வல்லமை படைத்தவர்கள்.

பிரபல நடிகர்களின் படங்களுக்கு 'பைனான்ஸ்' வழங்குவது, அந்நடிகர்களின் 'கால் ஷீட்'களை மொத்தமாக கையில் வைத்திருப்பது, பினாமிகள் மூலம் தமிழகம் முழுக்க திரையரங்குகளை நடத்துவது வரை இவர்களது 'சினிமா சாம்ராஜ்ஜியம்' பரந்து விரிந்திருக்கிறது.

உள்ளூர் ரவுடி கும்பலும் போலீசு அதிகார வர்க்க கும்பல்களும் இந்த 'தாதா'க்களின் திரையரங்குகளில் உள்ள 'கேன்டீன்', 'பார்க்கிங்' உரிமங்களைப் பினாமிகள் பெயர்களில் குத்தகைக்கு எடுக்கின்றனர். இந்த உரிமைக்காக போலீசு - அதிகார வர்க்கத் துறைகளில் பெரும் போட்டியே நடக்கிறது.

நடிகர்கள் வெற்றியின் உச்சத்தில் இருக்கும் சமயங்களில் பினாமி பெயர்களில் தங்கள் படங்களின் தயாரிப்பு - விநியோக உரிமையை தாங்களே சுவைக்கத் துடிப்பார்கள். நடிகர் கமலஹாசன் கேரளா ஏரியாவுக்கும், நடிகர் விஜய் சென்னை நகரத்திற்கும், விஜயகாந்த் மதுரை ஏரியாவிற்கும், நடிகர் சரத்குமார் திருநெல்வேலி-கன்யாகுமரி ஏரியாவிற்கும் பினாமிகளை வைத்திருக்கிறார்கள். இதனால் நடிகர் மற்றும் தயாரிப்பாளர் - விநியோகஸ்தர்களுக்கிடையே பெரும் கலகங்களும் வெடிக்கும். 'பழம் தின்பதற்கு பினாமிகள்; கொட்டையைப் பொறுக்குவதற்கு மட்டும் நாங்களா?' என்று விநியோகஸ்தர்கள் கொதிப்பார்கள்.




ரஜினியின் ''கட்-அவுட்''டுக்குப் பாலாபிஷேகம் செய்யும் பிழைப்புவாத ரசிகர்கள்.

இந்த கொள்ளைக் கூட்டம்தான் சினிமா படைப்பாளிகள், முதலாளிகள் என்ற பெயரில் தமிழகத்தின் பண்பாட்டையும் பகுத்தறிவு பாரம்பரியத்தையும் சீரழிக்கிறது.

தமிழர்களின் பண்பாடு, நாகரீகம் அதன் தொன்மை பற்றி பேசும் திராவிடக் கட்சிகள்தான் சினிமா கழிசடைகளின் விசுவாசமான பாதுகாவலனாகத் திகழ்கின்றன. மறத் தமிழரான வைகோவின் ம.தி.மு.க. கட்சியின் முக்கிய தூண், தாணு. மிகப் பெரும் சினிமா தயாரிப்பாளர். கழிசடை சினிமாக்களை தமிழில் பிரம்மாண்டமாக எடுப்பதிலும் விளம்பரம் செய்வதிலும் 'புகழ்' பெற்றவர்.

அனைத்திற்கும் மேலாக, இதுநாள் வரையில் திரையரங்குக்குள்ளே செல்லும் ரசிகர்களுக்கு மட்டுமே காட்டப்பட்ட தமிழ் சினிமா, இன்று மின்னணு ஊடகங்கள் மூலம் தமிழகத்தையே ஆக்கிரமித்துக் கொண்டுள்ளன.

தனியார்மயம், தாராளமயத்தின் கீழ் சந்தை வெறி பிடித்து அலையும் ஏகாதிபத்திய நிறுவனங்கள், சினிமாவைவிட வேகமாக நடிகர்கள் - நடிகைகளை மக்களிடம் விற்கின்றன. சினிமா விளம்பரம் என்ற பெயரில் ஆபாச - சீரழிவுகளை மக்களிடம் கொண்டு சென்று நுகர்வுவெறியைப் பரப்பி சந்தைகளை ஆக்கிரமிக்கின்றன.

ரஜினியின் 'சந்திரமுகி' திரைப்படம், கமலஹாசனின் 'மும்பை எக்ஸ்பிரஸ்', விஜய்யின் 'சச்சின்' ஆகிய படங்களுக்காக, முறையே 'டாட்டா இண்டிகாம்', 'த்ரீ ரோசஸ்' மற்றும் 'ரிலையன்ஸ் இன்போகாம்' ஆகிய நிறுவனங்கள் சுமார் 2 லட்சம் சதுர அடிக்கும் அதிகமாக மின்னணு நவீன விளம்பரப் பலகைகளைத் தமிழகம் முழுக்க வைத்துள்ளன.

இதன்மூலம், நடிகர்களை தமிழர்களின் படுக்கையறைக்கு அழைத்து வரும் வேலையை பன்னாட்டு நிறுவனங்களும், பன்னாட்டு நிறுவனங்களின் நுகர்பொருட்களை தமிழர்களின் சமையல் அறையில் விற்கும் வேலையை நடிகர்களும் செய்கின்றனர். ஊடகங்களில் ஏற்றி இவர்களை சுமந்து வரும் முக்கிய வேலையை கருணாநிதியின் குடும்ப நிறுவனங்கள் செய்கின்றன.

'ரிலையன்ஸ்' நிறுவனத்தால் விளம்பரம் செய்யப்படும் விஜய் நடித்த ''சச்சின்'': தரகு முதலாளிகள் - தயாரிப்பாளர்கள் - நடிகர்களின் புதிய கூட்டணி.




தமிழ்ப் புத்தாண்டில், தங்களது ரசிகர்களுக்கு, சினிமா கழிசடைகளின் 'பன்சிங் டயலாக்கு' இதுதான்! 'சொந்த மனைவியை கூட்டிக் கொடுங்கள்! சொந்த நாட்டை காட்டிக் கொடுங்கள்!'

இதற்கு தமிழ் சினிமா ரசிகர்கள் என்ன பதில் சொல்லப் போகிறார்கள்?

• பச்சையப்பன்

www.padippakam.com

## நுண்கடன்–நுண்தொழில்:

# ஏழைகளைக் கொள்ளையிடும் ஏகாதிபத்திய சதி!

ஏகாதிபத்திய நிறுவனங்களின் பகற்கொள்ளைக்கும் சூறையாடலுக்கும் கதவை அகலத் திறந்துவிட்டுள்ள ஆட்சியாளர்கள், இதுவும் போதாதென்று கிராமப்புற நுண்கடன் திட்டங்கள் மூலம் கோடிகோடியாய்க் கொள்ளையடிக்க புதிய ஏற்பாடுகளைச் செய்துள்ளனர். 1997-இல் ஐ.நா மன்றத்தின் முன்னிலையில் நடந்த நுண்கடன் கருத்தரங்கில் 2005-ஆம் ஆண்டை நுண்கடன் ஆண்டாக அறிவித்துக் கொண்டாட முடிவு செய்யப்பட்டது. இதன்படி, ஐ.நாவின் மேற்பார்வை மற்றும் நிதியுதவியோடு பல ஏழை நாடுகளில் தேசிய அளவில் பல கருத்தரங்குகளும் ஆய்வரங்குகளும் நடந்த வண்ணம் உள்ளன. பல ஏழை நாடுகளின் அரசுகள், பல்வேறு நுண்கடன் திட்டங்களை அறிவித்தும் நுண்கடனை ஊக்குவிப்பதாகவும் உறுதியளித்துள்ளன. இந்தியாவில், நிதியமைச்சர் சிதம்பரம் இவ்வாண்டு பட்ஜெட்டில் நுண்நிதி வளர்ச்சிக்காக ரூ. 100 கோடி ஒதுக்கியுள்ளார். இந்நுண்நிதி வளர்ச்சிக்காக, நுண்நிதி நிறுவனங்கள், வங்கிகள் மற்றும் இதர நிதி நிறுவனங்களைக் கொண்ட கமிட்டி கட்டியமைக்கப்படும் என்றும் அறிவித்துள்ளார்.

**நுண்நிதி - நுண்கடன் - நுண்தொழில் என்றால் என்ன?**

தேசிய ஊரக மற்றும் விவசாய வளர்ச்சி வங்கியின் (நபார்டு NABARD) கூற்றுப்படி, ''நுண்நிதி என்பது கிராமப்புற - நகர்ப்புற ஏழை மக்களுக்குச் சிறு அளவில் சேமிப்பு, கடன் மற்றும் இதர நிதிச் சேவைகளை வங்கிகள்-நிதி நிறுவனங்கள் மூலம் அளித்து, அவர்களின் வருமானத்தையும் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துவதாகும். நுண்நிதிச் சேவைகளான சேமிப்பு, கடன் மற்றும் இதர நிதிச் சேவைகளைச் சுய உதவிக் குழுக்களுக்கு நுண்நிதி நிறுவனங்கள் மூலம் வங்கிகள் அளிக்கும்.''

இந்தியாவிலுள்ள ஆயிரத்துக்கும் மேற்பட்ட நுண்நிதி நிறுவனங்களில் ஆகப் பெரும்பாலானவை தன்னார்வக் குழுக்களால் (NGOs) நடத்தப்படுகின்றன. செக்யூரிட்டியாக கணிசமான சேமிப்பைப் பெற்றிருக்கும் சுய உதவிக் குழுக்களை அடையாளம் கண்டு, அக்குழுக்களுக்கு நுண்நிதிச் சேவைகளை இத்தன்னார்வக் குழுக்கள் வங்கிகளிடமிருந்து பெற்றுத் தருகின்றன. மேலும், வங்கிகளுக்கும் சுயஉதவிக் குழுக்களுக்குமிடையிலான கொடுக்கல் - வாங்கல் விவகாரங்களைக் கண்காணித்து ஒருங்கிணைக்கும் வேலைகளைச் செய்கின்றன.

இந்நுண் நிதிச் சேவையில் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கியின் மூலம் கிடைக்கும் கடனுதவியை நுண்கடன் என்றழைக்கின்றனர் சுய உதவிக் குழுக்கள் வங்கிகளிலிருந்து பெறும் கடனை ஊறுகாய், அப்பளம், மசாலா பொடி, சோப்பு, கைவினைப் பொருட்கள், வீட்டைச் சுத்தம் செய்வதற்கான கிருமி நாசினிகள், ஊதுபத்தி - மெழுகுவர்த்தி தயாரித்தல் முதலானவற்றில் குழுவாக முதலீடு செய்கின்றனர். இத்தகைய தொழில்களே நுண்தொழில் என்றழைக்கப்படுகிறது. இன்னொருபுறம், இத்தகைய நுண்கடன்களைத் தனிப்பட்ட சிலர் பெற்று விவசாயம், கால்நடை வளர்ப்பு போன்ற தொழில்களில் முதலீடு செய்வதாகவும் கூறப்படுகிறது.

''இத்தகைய நுண்கடன் - நுண்தொழில்கள் மூலம் சமூகத்தின் விளிம்பு நிலையிலுள்ள ஏழை - எளிய மக்கள், அதிலும் குறிப்பாக பெண்கள் கணிசமாகச் சம்பாதித்து, சொந்தக் காலில் நிற்பதன் மூலமாக ஏழ்மை, கல்லாமை, பெண்ணடிமை, சாதிய ஒடுக்குமுறை முதலான சமூக - பொருளாதாரப் பிரச்சினைகளிலிருந்து விடுபடுகின்றனர்; மேலும் தன்னம்பிக்கை, தொழில் முனைப்பு, குழு மனப்பான்மை, நிர்வாகத் திறன், கூட்டுறவு மற்றும் சமூக உணர்வுகள் வளர்த்தெடுக்கப்படுகின்றன'' என்று முதலாளித்துவ அறிவுஜீவிகளும் தன்னார்வக் குழுக்களும் தொடர்ந்து பிரச்சாரம் செய்து வருகின்றனர். ஆனால், உண்மையோ வேறானது.

1992-இல் ஊரக மற்றும் விவசாய வளர்ச்சி வங்கி துணையுடன் 225 சுய உதவிக் குழுக்களுடன் தொடங்கப்பட்ட நுண்கடன் - நுண்தொழில் திட்டம், இன்று பூதாகரமாக விரிவடைந்துள்ளது. ஏறத்தாழ ரூ. 45,000 கோடி புரளும் இந்திய நுண்நிதிச் சந்தையில், மார்ச் 2004 கணக்குப்படி, 48 வணிக வங்கிகள், 196 கிராம வங்கிகள், 360 கூட்டுறவு வங்கிகள் நுண்நிதி நிறுவனங்களின் உதவியுடன் 12 இலட்சத்துக்கும் மேற்பட்ட சுய உதவிக் குழுக்கள் மூலம், ஒரு கோடியே 67 இலட்சம் குடும்பங்களுக்கு நுண்கடன் சேவைகளை அளித்து வருகின்றன. வரும் 2008-ஆம் ஆண்டுக்குள் ஒரு கோடியே 80 இலட்சம் பெண்களுக்கு (குடும்பங்களுக்கு) இச்சேவை கிடைக்க வேண்டுமென இலக்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இப்படி அளிக்கப்படும் கடனில் 97%-க்கும் மேலாகப் பெறும் நுண்நிறுவனங்கள், கணிசமான வட்டியுடன் அவற்றை சுய உதவிக் குழுக்களுக்குத் தருகின்றன.

வங்கிகள், நுண்கடனை நுண்நிதி நிறுவனங்களுக்கு 8.5 முதல் 15 சதவீத வட்டியில் கொடுக்கின்றன. நுண்நிதி நிறுவனங்களோ, 3 முதல் 5 சதவீத இலாபம் வைத்து சுய உதவிக் குழுக்களுக்குக் கொடுக்கின்றன. சுய உதவிக் குழுக்களோ, மேலும் கணிசமான இலாபம் வைத்து, தமது உறுப்பினர்களுக்கோ வெளியாருக்கோ 28 முதல் 30 சதவீத வட்டிக்குக் (இரண்டே காலிலிருந்து இரண்டரை வட்டிக்கு) கொடுக்கின்றன. அண்மைக் காலமாக, நுண்நிதி நிறுவனங்களே 36 சதவீத வட்டியை (மூன்று வட்டியை) சுய உதவிக் குழுக்களுக்கு விதிப்பதாக ''பிசினஸ் லைன்'' ஏடு (மார்ச்15, 2005) கூறுகிறது.

சுய உதவிக் குழுக்களுக்குக் கிடைக்கும் நுண்கடனின் பெரும்பகுதி அன்றாடச் செலவுகளுக்குத்தான் பிரதானமாகப் பயன்படுத்தப்படுகிறது. குறிப்பாக உணவு, உடை, கல்வி, மருத்துவம் மற்றும் திருமணம் போன்ற குடும்ப நிகழ்ச்சிகளுக்குத்தான் செலவிடப்படுகிறது. மாறாக, நுண்தொழில்களிலோ அல்லது இதர தனிப்பட்ட தொழில்களிலோ முதலீடு செய்யப்படுவது மிகவும்



படிப்பகம்

www.padippakam.com

குறைவாகவே உள்ளது. ஒருசில சுய உதவிக் குழுக்கள் நுண்தொழில்களில் முதலீடு செய்து உற்பத்தி செய்தாலும், இன்றைய தாராளமய - உலகமயச் சூழலில் ஒரு அடி கூட முன்னேற முடியாமல், அவை விரைவிலேயே நசிந்து முடமாகி விடுகின்றன.

**மூச்சுத் திணறும் நுண்தொழில்கள்**

அனைத்து வகையான நுகர் பொருட்களையும் பன்னாட்டு நிறுவனங்கள் உற்பத்தி செய்து இந்தியாவின் மூலை முடுக்கெல்லாம் இப்போது விற்பனை செய்து வருகின்றன. அண்மைக் காலமாக மேட்டுக்குடி சந்தையின் தேக்கத்தாலும், மிதமிஞ்சிய உற்பத்தியாலும், இப்பன்னாட்டு நிறுவனங்கள் சாலையோ, மின்சாரமோ, கல்வியோ எட்டிப் பார்க்காத குக்கிராமங்களுக்குக் கூட தமது பொருட்களைக் கொண்டு சென்று விற்கத் தொடங்கி விட்டன. இப்படி கிராமங்கள் வரை சென்று விற்பதுதான், பன்னாட்டு நிறுவனங்களுக்கு இலாபத்தை மேலும் பெருக்குவதற்கான வழிமுறையாக உள்ளது. இன்று "ஃபேர் அண்டு லவ்லி" சிவப்பழகு கிரீம் பற்றி அறிந்திராத பெண்களே இல்லை எனுமளவுக்கு அது மூலை முடுக்கெல்லாம் விளம்பரப்படுத்தப்படுகிறது. பல கோடி ரூபாய்க்கு கவர்ச்சியான விளம்பரங்களினால் பன்னாட்டு நிறுவனங்களின் பொருட்களைப் பயன்படுத்துவதுதான் தரமானது, சமூக மதிப்பைக் கொடுக்கிறது என்ற அபிப்பிராயத்தையும் தோற்றுவித்திருக்கிறது. மேலும், தாராளமயத்தால் ஏகாதிபத்திய நாடுகளின் மலிவான நுகர்பொருட்களே இன்று சந்தையில் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன.



நுண்தொழிலின் அவலம்: சென்னை வர்த்தக மையத்தில் நடந்த கண்காட்சியில் கடைவிரித்து கவரிங் நகைகளை விற்கும் சுய உதவிக்குழு உறுப்பினர்.

"கேர்" என்ற தன்னார்வக் குழுவின் ஊழியரான லேப் என்பவர், "பன்னாட்டு நிறுவனங்கள் சந்தையைத் தமது ஏகபோகக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதால், நுண்தொழில்களும் நுண்உற்பத்திப் பொருட்களும் பன்னாட்டு நிறுவனங்களுடன் போட்டி போட முடியவில்லை" என்று வெளிப்படையாக ஒப்புக் கொள்கிறார். சுய உதவிக் குழுக்கள் நுண்தொழில் உற்பத்தி மூலம் உருவாக்கப்பட்ட குளியல் சோப்பை விற்கப் போனால், நுகர்வோர்கள் 'நேர்மை' சோப் ஹமாம் தான் வேண்டும் என்கிறார்கள். வீட்டுக் கிருமி நாசினியை விற்கப் போனால், இந்துஸ்தான் லீவரின் 'டோமக்ஷ்' தான் சிறந்தது என்கிறார்கள். வேறு வழியின்றி, அரசாங்க விழாக்களிலோ, கண்காட்சியிலோ கடைவிரித்து, சுய உதவிக் குழுக்களிடம் கரிசனம் காட்டுபவர்களிடம் இக்குழு உறுப்பினர்கள் விற்க முயற்சிக்கிறார்கள். அதுவும் இப்போது தோல்வியடைந்து, பன்னாட்டு நிறுவனங்களின் பொருட்களையே பல சுய உதவிக் குழுக்கள் விற்பனை செய்து வருகின்றன.

தாராளமயமாக்கலின் விளைவாக, பல லட்சம் முதலீடு செய்து நடத்தப்படும் சிறு தொழில்களே நசிந்து முடமாக்கப்படும் நிலையில், சில ஆயிரம் ரூபாய்களை முதலீடு செய்து நடத்தப்படும் நுண் தொழில்கள் முன்னேறவோ, தாக்குப் பிடிக்கவோ அடிப்படையே இல்லை. ஆனாலும், தாராளமயம் - உலகமயம் எனும் மறுகாலனியாதிக்கத் தாக்குதலால் ஏற்படும் சமூக கொந்தளிப்புகளுக்கு வடிகால் வெட்டி, சாந்தப்படுத்தும் நோக்கத்துடன் ஆட்சியாளர்கள் நுண்கடன், நுண்தொழில் பற்றி ஆரவாரம் செய்கின்றனர். மறுகாலனிய தாக்குதலுக்கு எதிராக உழைக்கும் மக்களுடன் இணைந்து போராட வேண்டும்' என்ற உணர்வை மழுங்கடித்து, நுண்தொழில் மூலம் நாம் எப்படியாவது முன்னேறி விடலாம் என்ற குறுகிய - சுயநல சிந்தனையை ஊட்டி வளர்க்கின்றனர்.

**பண உறவு - பண உணர்வு**

தனியார்மயம் - தாராளமயம் - உலகமயம் எனும் மறுகாலனியாதிக்கப் புதிய பொருளாதாரக் கொள்கையாலும், தொடர் வறட்சியின் விளைவாலும் கிராமப்புற விவசாயமும் கைத்தொழில்-குடிசைத்தொழில், கால்நடை வளர்ப்பு முதலானவையும் நலிவடைந்து, கிராமப்புற மக்கள் வறுமைப் படுகுழியில் பரிதவிக்கின்றனர். இத்தகைய சூழலில் 10-20 பேர்களாகத் திரட்டப்படும் சுய உதவிக் குழுக்கள், முதற்கட்டமாக செக்யூரிடி தொகைக்காக மாதந்தோறும் கணிசமான தொகையைச் சேமிக்க வேண்டியுள்ளது.

செக்யூரிடி தொகையுடன் உத்திரவாதமுள்ள சுய உதவிக் குழுக்களுக்குத்தான் நுண்நிதி நிறுவனங்கள் மூலம் நுண்கடன் கிடைக்கும். எனவே சுயஉதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் வறுமையின் நடுவே அத்தியாவசியத் தேவைகளுக்கான செலவை மேலும் குறைக்க நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள் என்று "நிரந்தர்" என்ற மகளிர் அமைப்பு கூறுகிறது. சுய உதவிக் குழுக்களால் பெறப்படும் நுண் கடன்கள் 36 சதவீதம் வரை (3 வட்டிக்கு) உறுப்பினர்களிடம் கடனாக வட்டிக்கு விடப்படுகிறது. மேலும் புதிய கடன்களைப் பெற வேண்டுமானால், வாங்கிய கடனை சுய உதவிக் குழுக்கள் முறையாக திருப்பி அடைக்க வேண்டும். இதனால் கடன் வாங்கிய உறுப்பினர்களைக் கண்காணிப்பவர்களாகவும், கடன் தவணையை வட்டியுடன் முறையாகச் செலுத்த நிர்ப்பந்திப்பவர்களாகவும் குழுவின் இதர உறுப்பினர்கள் மாறி விடுகிறார்கள். சில இடங்களில், கடனை அடைக்கத் தவறிய உறுப்


படிப்பகம்

www.padippakam.com

பினர்கள் வீட்டில் உள்ள பொருட்களை ஜப்தி செய்வதும் நடக்கிறது.


பணமே வாழ்க்கையாகிவிட்ட இன்றைய நிலையில், சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கிடையே கூட்டுறவோ, கூட்டுத்துவ சிந்தனையோ இருப்பதில்லை. வெறும் பண உறவு தான் நீடிக்கிறது. அதுவும் கந்து வட்டிக்காரனுக்கும் கடன்காரனுக்குமிடையிலான உறவாகவே உள்ளது. குழு மனப்பான்மை என்பது சுரண்டுவதில்தான் இருக்கிறது. குழு உறுப்பினர்களின் அடிப்படைத் தேவைகளை மேலும் குறைக்க நிர்பந்திப்பதன் விளைவாக, ஏழ்மை மேலும் தீவிரமாகிறது. அதன் காரணமாக, கல்லாமை, பெண்ணடிமைத்தனம் முதலான சமூக பொருளாதாரப் பிரச்சினைகள் தொடரவே செய்கிறது.

இதுவொருபுறமிருக்க, பெரும்பாலான சுய உதவிக் குழுக்கள் சாதிவரியாகவே கட்டியமைக்கப்படுகின்றன என்பதை ஆய்வுகள் நிரூபித்துக் காட்டுகின்றன. மேலும் சாதிய கட்டுமானத்தையும் சாதிய உணர்வையும் தக்க வைப்பதாகவே சுய உதவிக் குழுக்களும் அவற்றுக்கான நுண் கடன் ஏற்பாடுகளும் அமைந்துள்ளன. இதுமட்டுமின்றி தெலுங்குதேசம், அ.தி.மு.க. போன்ற ஓட்டுக் கட்சிகளின் ஓட்டு வேட்டைக்கான பகடைக் காய்களாக சுய உதவிக் குழுக்கள் பயன்படுத்தப்படுகின்றன.

**விரியும் வஞ்சகவலை கொழிக்கும் பன்னாட்டு நிறுவனங்கள்**

உள்ளூர் அளவில் ஆதிக்கம் செலுத்தும் கந்துவட்டிக்காரர்கள், நிலப்பிரபுக்களைப் போலவே, அதே தன்மையுடன் புதிய வடிவில் ஏழை - எளிய மக்களைச் சுரண்டும் கொள்ளைக் கூட்டமாக வங்கிகளும், நுண்நிதி நிறுவனங்களும், தன்னார்வக் குழுக்களும் புதிய பரிணாம வளர்ச்சியை அடைந்துள்ளன. நுண்நிதிச் சேவையில் ஈடுபடும் வங்கிகளும் நுண்நிதி நிறுவனங்களும் அண்மைக் காலமாக கொழுத்த இலாபத்தை ஈட்டி வருகின்றன. இவ்வங்கிகளின் ஓட்டு மொத்த இலாபத்தில் 10 சதவீதத்துக்கும் மேலான தொகை நுண்நிதிச் சேவையிலிருந்து கிடைப்பதாகப் புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. ஆந்திர மாநிலத்தில் செயல்படும் ''காகேதிய கிராமின் வங்கி''யின் இரண்டு கிளைகள், 1,90,000 ரூபாயாக இருந்த இலாபத்தை, நுண்நிதிச் சேவையில் இறங்கி ரூ. 15 லட்சத்துக்கு உயர்த்தியுள்ளன. இதர கிராமப்புற கடன் - நிதிச் சேவைகளை ஒப்பிடும் போது, நுண்கடன் - நுண்நிதிச் சேவைகளே வங்கிகளுக்கு கூடுதலாக இலாபத்தைக் கொடுக்கின்றன என்று ஆய்வாளர்கள் அறுதியிடுகின்றனர்.

பல்லாயிரம் கோடிகள் புரளும் இந்திய நுண்நிதிச் சந்தையில், அரசு வங்கிகள் கிராமப்புற ஏழைகளைச் சுரண்டி கோடி கோடியாய் இலாபத்தைக் குவிக்கும்போது, பன்னாட்டு ஏகபோக வங்கிகளும் நிதி நிறுவனங்களும் சும்மாவா



**ஏழை - எளிய மக்களைச் சுரண்டும் கொள்ளைக் கூட்டமாக வங்கிகளும், நுண்நிதி நிறுவனங்களும், தன்னார்வக் குழுக்களும் புதிய பரிணாம வளர்ச்சியை அடைந்துள்ளன. நுண்நிதிச் சேவையில் ஈடுபடும் வங்கிகளும் நுண்நிதி நிறுவனங்களும் அண்மைக் காலமாக கொழுத்த இலாபத்தை ஈட்டி வருகின்றன.**

இருக்கும்? தாராளமயமாக்கலைத் தொடர்ந்து டாய்ஷே, ரேபே வங்கி, ஒககோ கிரடிட், சிட்டிகுருப், ஐ.என்.ஜி., விசா, ஐ.சி.ஐ.சி.ஐ., ஹெச்.டி.எப்.சி., ஏ.பி.என். அம்ரோ முதலான பன்னாட்டு வங்கிகளும் நிதி நிறுவனங்களும் களத்தில் குதித்துள்ளன. சன் மைக்ரோ சிஸ்டத்தின் உரிமையாளர்களில் ஒருவரான கோசலா, இத்தகைய நுண்நிதிச் சந்தையில் முதலீடு செய்து இலாபம் பெறும் வழிமுறைகளைப் பற்றி ஆய்வு செய்து வருகிறார். இன்னொருபுறம், மான்சாண்டோ விதைக் கம்பெனி, நுண்நிதி மாநாடுகள் - கருத்தரங்குகளுக்கு நிதியுதவி செய்து தன்னார்வக் குழுக்களை ஊக்குவித்து வருகிறது.

ஆந்திராவில் தொடங்கி படிப்படியாகத் தென்னிந்திய மாநிலங்களில் விரிவாக்கப்பட்ட நுண்கடன் - நுண்நிதிச் சேவைகள் இப்போது நாடு முழுவதும் பற்றிப் படர்ந்து வருகிறது. அதற்கேற்ப கைக்கூலிகளான தன்னார்வக் குழுக்களும் பார்த்தீனியச் செடி போல வேகமாகப் பரவி வருகின்றன. அமெரிக்காவின் கருப்பினச் சேரிகளில் பாயும் நுண்நிதிச் சேவைகளைப் போலவே, இந்தியாவிலும் எங்கெல்லாம் ஏழைகள் குமுறிக் கொண்டிருக்கிறார்களோ, அங்கெல்லாம் நுண்நிதி நிறுவனங்களும் தன்னார்வக் குழுக்களும் வேகமாக நுழைந்து வருகின்றன. பிச்சை எடுத்தாராம் பெருமாளு, அதைப் பிடுங்கித் தின்றாராம் அனுமாரு என்ற கதையாக, ஏற்கெனவே வறுமையில் தத்தளித்துக் கொண்டிருக்கும் மக்களை மயக்கி, நுண்கடன் வலையில் சிக்க வைத்து, எஞ்சியிருப்பதையும் நூதனமுறையில் பறித்துக் கொள்ள பன்னாட்டு நிறுவனங்கள் கிளம்பிவிட்டன.

1960-ஆம் ஆண்டில் ஒட்டு மொத்த உலக வருமானத்தில் 70 சதவீதத்தைப் பெற்றிருந்த, மக்கள் தொகையில் 20 சதவீதமான பணக்காரர்கள், 2000-வது ஆண்டில் சுருட்டிய வருமானம் 83 சதவீதமாக அதிகரித்துள்ளது. மறுபுறம் இதே காலத்தில் மொத்த வருமானத்தில் 2.3 சதவீதத்தைப் பெற்றிருந்த 20 சதவீத ஏழைகளிலும் ஏழைகளானவர்கள் 2000-வது ஆண்டில் வெறும் 1.3 சதவீத வருமானத்தைத்தான் பெற்று மேலும் ஏழைகளாகியுள்ளனர் என்கிறது ஐ.நா. மன்ற அறிக்கை. மலைக்கும் மடுவுக்குமான இடைவெளியாக விரிவடைந்து கொண்டே போகும் இந்த ஏற்றத்தாழ்வை மேலும் விரைவுபடுத்தவும் அதிகப்படுத்தவும் நுண்நிதி நிறுவனங்களும் தன்னார்வக் குழுக்களும் தீவிரமாகச் செயல்பட்டு வருகின்றன. வஞ்சக வலை விரிக்கும் தன்னார்வக் குழுக்களையும் நுண்கடன் - நுண்தொழில் முதலான பசப்பல்களையும் உழைக்கும் மக்களிடம் அம்பலப்படுத்தி முறியடிக்க புரட்சிகர - ஜனநாயக சக்திகள் இன்னும் விரைவாகச் செயலாற்ற வேண்டியுள்ளது.

• செஞ்சுடர்



படிப்பகம்

# தமிழர் கண்ணோட்டத்தின் ஒழுக்க நெறி கள்ளச் சாராய வியாபாரியைக் காப்பாற்றவா?

''மெட்ரிக்குலேசன் பள்ளியை இழுத்து மூடு'' என்று போராட்டம் நடத்திய 'கொள்கை ஏறுகள்' மெட்ரிகுலேசன் தொட்டியிலேயே கழுநீர் குடிக்கலாமா?'' என்ற கேள்விக்கு யோக்கியமாகப் பதில் சொல்ல முடியாததால், 'அறிவார்ந்த' எதிர்க்கேள்வி ஒன்றை எழுப்பியிருக்கிறது, தமிழர் கண்ணோட்டம்.

''விநோதகன் மருத்துவமனையைக் கைப்பற்றும் போராட்டம் நடத்திய ம.க.இ.க.வினர், உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த தோழர் பீட்டரை அதே மருத்துவமனையில் சேர்த்தது எப்படி?'' என்பது தமிழர் கண்ணோட்டத்தின் கேள்வி.

எப்பேர்ப்பட்ட தருக்க அறிவு! நள்ளிரவில் தனது வீட்டின் மொட்டை மாடியில் தன்னந்தனியாகச் சாராய ரவுடிகளுடன் மோதிய தோழர் பீட்டர் அங்கிருந்து அவர்களால் அடித்துத் தூக்கி வீசப்பட்டார். குற்றுயிராகக் கீழே விழுந்தவரை அவரது மனைவியும் அண்டை வீட்டாரும் ஒரு ஆட்டோவில் தூக்கிச் சென்று அருகாமையிலிருந்த விநோதகன் மருத்துவமனையில் சேர்த்தனர். அடிதடி-போலீசு கேஸ் என்று அறிந்தால் தனியார் மருத்துவமனையில் சேர்க்க மறுப்பார்கள் என்று அஞ்சி, 'மாடியிலிருந்து கீழே விழுந்துவிட்டதாக'க் கூறிச் சேர்த்தனர். இதில் இரகசியம் ஒன்றுமில்லை.

ஜெயலலிதாவின் ஆட்சிக் காலத்தில் தமிழகம் தழுவிய அளவில் நடத்தப்பட்டது திடீர் பணக்கார அரசியல் ரவுடிகளுக்கெதிரான இயக்கம். சட்டபூர்வமான வழிகளில் இந்த மக்கள் விரோதிகளைத் தண்டிப்பதோ, அவர்களது சொத்துக்களைப் பறிமுதல் செய்வதோ இயலாது என்ற உண்மையை மக்களுக்கு உணர்த்தும் முகமாக நடத்தப்பட்ட போராட்டமே விநோதகன் மருத்துவமனையைக் கைப்பற்றும் போராட்டம். இப்போராட்டத்தை நடத்திய காரணத்தினாலேயே அங்கே சிகிச்சை பெறக்கூடாது என்பது என்ன வகை ஒழுக்கம்?

ஒருவேளை த.தே.பொ.க.வினரின் ஒழுக்கநெறி அவ்வளவு கடுமையானதோ? நினைத்தாலே நெஞ்சு நடுங்குகிறதே! இப்பேர்ப்பட்ட அந்தச் சீற்றம், கேவலம் ஒரு பக்க விளம்பரத்துக்காக வாலைக் குழைத்திருக்கிறதே!

புதிய ஜனநாயகம், விநோதகன் மருத்துவமனையிடம் விளம்பரம் வாங்கி பொங்கல் மலர் வெளியிட்டதா? அல்லது நேர்மையற்ற முறையில் அவ்வாறு கைநீட்டி விட்டு, பிறகு தன்-திறனாய்வு செய்து 'கவனக் குறைவு' என்று காரணம் கண்டு பிடித்ததா?

சலுகை கோரி தலை சொரிந்து நிற்காமல், மருத்துவக் கட்டணத்தை எமது தோழர்கள் கவனமாகச் செலுத்தியிருக்கின்றனர்.' தமிழர் கண்ணோட்டம் 'கவனக்குறைவாக' பணம் வாங்கியிருக்கிறது. கவனக்குறைவாக பணத்தைத் தவறவிடுவதைத்தான் நாம் அறிந்திருக்கிறோம். கவனக்குறைவாக வாங்கிவிட்டார்களாம்!

தமிழர் கண்ணோட்டம் இதே பாணியில் பு.ஜ.வை விமர்சனம் செய்ய விரும்பினால், கீழ்க்கண்ட கேள்விகளையும் கேட்டுத் தனது மேதா விலாசத்தை வெளியிடலாம்.

''அரசு எந்திரத்தை நொறுக்க வேண்டுமெனக் கூறிக் கொள்ளும் ம.க.இ.க.வினர், பொதுக்கூட்ட அனுமதிக்கு போலீசிடம் எழுதிக் கொடுப்பது ஏன்? நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்வது ஏன்? ம.க.இ.க. தோழர்கள் அரசுத் துறையில் வேலை பார்ப்பது என்ன வகைப் புரட்சி?'' என்றெல்லாம் கேள்வி எழுப்பட்டும்.

தன்னுடைய நடத்தை தவறென்று உண்மையிலேயே உணர்ந்திருப்பின், அதை யார் சொன்னாலும் ஏற்றுக் கொள்ளும் பண்பு வேண்டும். பிடிபட்ட கள்வனின் மனநிலையில் தமிழர் கண்ணோட்டம் குமுறிக் கொண்டிருக்கிறது. அதனால் தான், ''நீ மட்டும் பத்தினியா?'' என்று சேறடிக்கிறது. ''தவறி விழுந்து செத்தவரை தியாகியாக்கி விட்டார்கள்'' என்று கூறி தோழர் பீட்டரின் தியாகத்தைக் கொச்சைப்படுத்துகிறது.

தோழர் பீட்டர் தவறிவிழுந்து இறந்தாரா, அல்லது சாராய ரவுடிகளுடன் மோதி உயிர் விட்டாரா என்பதை ம.க.இ.க.வினரிடம் கேட்டு அறிந்து கொள்வதை விட, அவரை மருத்துவமனையில் கொண்டு சேர்த்த அண்டை வீட்டாரிடம் தமிழர் கண்ணோட்டம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். அல்லது மறுநாள் காலையிலேயே வழக்குப் பதிவு செய்த போலீசிடம் போய்க் கேட்கலாம். 'விபத்தைக் கொலையென்று நம்பி ஏமாந்து' இறுதி ஊர்வலத்தில் நூற்றுக்கணக்கில் வந்து கலந்து கொண்ட தொலைபேசி ஊழியர்களிடமும் கேட்டறியலாம்.

'இது கொலையல்ல' என்று தமிழர் கண்ணோட்டம் உறுதிபட நம்புவதால், கொலைக்குற்றம் சாட்டப்பட்டுள்ள சாராய ரவுடி மார்ட்டினுக்கு ஆதரவாக சாட்சியளிக்க வருமாறு த.தே.பொ.க.-வின் தலைவரை அழைக்கிறோம்.

ஒரு 'இந்திய தேசியரை'க் கொன்றதாக 'கள்ளச்சாராயத் தமிழர்' ஒருவர் அபாண்டமாகக் குற்றம் சாட்டப்படும்போது, தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி அதைப் பார்த்துக் கொண்டு வாளாவிருக்க முடியுமா? வாருங்கள்!

நாங்கள் ''மெட்ரிகுலேசன் பள்ளியில் காசு வாங்கலாமா?'' என்று மட்டும்தான் கேட்டோம். இந்தக் 'கள்ளச் சாராயத் தோழமை' ரகசியம் நீங்கள் சொல்லித்தான் தெரியும். இதற்காக எங்கள் மீது பாயவேண்டாம்.

— ஆசிரியர் குழு

தோழர் பீட்டர் சாராய ரௌடிகளால் தாக்கப்பட்டு 'மாடியிலிருந்து வீசியெறியப்பட்ட கோரத்தையும், மறைந்த தோழர் பீட்டரது துணைவியாரின் கண்ணீர் பேட்டியையும் ''ஜூனியர் விகடன்'' கூட செய்தியாக வெளியிட்டுள்ளது. (ஆதாரம்: ஜூ.வி. 6.4.03) ஆனால், கிணற்றுத் தவளைகளான தமிழினப் பிழைப்புவாதிகள் தோழர் பீட்டரின் தியாகத்தையும் வீரத்தையும் கொச்சைப்படுத்தி அவதூறு செய்து சுயஇன்பம் காண்கின்றனர்.



www.padippakam.com

# ஆர்.எஸ்.எஸ்.இன் ஆக்கிரமிப்புக்கு தமிழக போலீசு உடந்தை

## எஸ்.பி.பட்டினத்தில் பொது நிலத்தை ஆக்கிரமிக்க சதி செய்யும் ஆர்.எஸ்.எஸ்.ஐ எதிர்த்து நிற்கும் புரட்சிகர அமைப்புகள் மீது மதக் கலவரத்தைத் தூண்டியதாகப் பொய் வழக்கு

இராமநாதபுரம் மாவட்டத்தின் கடற்கரை நகரான தொண்டியை அடுத்து அமைந்துள்ள சிற்றூர்தான் எஸ்.பி.பட்டினம். தாழ்த்தப்பட்டோர், முசுலீம்கள், கிறித்தவர்கள், மேல்சாதி இந்துக்கள் எனப் பல்வேறு சமூக மக்களும் கலந்து வாழும் பகுதி அது.

இரண்டு மாதங்களுக்கு முன்பு எஸ்.பி.பட்டினத்தில் உள்ள ஏகாம்பரேஸ்வரர் கோவிலின் பின்புறமுள்ள அரசுக்குச் சொந்தமான நிலத்தை சோழகன் பேட்டையைச் சேர்ந்த எம்.முனியசாமி, எ.கணேசன் ஆசாரி, பாலகிருஷ்ணன் ஆகியோர் கூட்டாகச் சேர்ந்து கொண்டு ஆக்கிரமித்துக் கொள்ள முயன்றனர். எஸ்.பி.பட்டினத்தைச் சேர்ந்த பொதுமக்கள் சாதி, மத பேதமின்றி ஒன்றாகத் திரண்டு, அந்தக் கும்பலின் சட்டவிரோத ஆக்கிரமிப்பு முயற்சியை முளையிலேயே கிள்ளியெறிந்தனர்.

ஆனாலும், அக்கும்பல் "கோயில் பாதுகாப்பு" என்ற பெயரில் இந்து மத வெறியைத் தூண்டி, சோழகன் பேட்டையைச் சுற்றியுள்ள கிராம மக்களை "இந்து" மத அடிப்படையில் திரட்டிக் கொண்டு நிலத்தை ஆக்கிரமித்துக் கொள்ளச் சதி செய்தது.

அப்பகுதியில் இயங்கி வரும் ம.க.இ.க. தோழர் ஜான் பிரிட்டோ, "இந்து மதவெறியர்களின் சுயநலத் திட்டத்திற்குப் பலியாக வேண்டாம்; மதரீதியாகப் பிளவுபடாமல், உழைக்கும் மக்களாய் ஒன்று திரள்வோம்" எனப் பிரச்சாரம் செய்து, இந்து மத வெறியர்களின் சதித் திட்டத்தை அம்பலப்படுத்தினார். உடனே, இந்து மத வெறி பிடித்த சுயநலக் கும்பல், தனது சதி திட்டத்தை நிறைவேற்றிக் கொள்ள போலீசின் உதவியை நாடியது. அக்கும்பல், தோழர் ஜான் பிரிட்டோ மீது கொடுத்த புகார் மீது விசாரணை கூட நடத்தாமல், எஸ்.பி.பட்டினம் துணை ஆய்வாளர் சண்முகம், தோழர் ஜான் பிரிட்டோவை போலீசு நிலையத்திற்கு இழுத்துப் போய் மிருகத்தனமாகத் தாக்கியதோடு, "ஊரைவிட்டு ஓடிவிடு" என மிரட்டினார்.

ஆர்.எஸ்.எஸ்.காரன் போல நடந்து கொண்ட துணை ஆய்வாளர் சண்முகம் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி இராமநாதபுரம் மாவட்ட போலீசு கண்காணிப்பாளரிடம் ம.க.இ.க. - வி.வி.மு. சார்பில் புகார் கொடுக்கப்பட்டது. மேலும், "அரசு நிலத்தை ஆக்கிரமிப்பு செய்யும் இந்து மதவெறியர்களை விரட்டியடிப்போம்" என்ற துண்டு பிரசுரத்தையும் பகுதி மக்கள் மத்தியில் விநியோகித்து, ஆர்.எஸ்.எஸ். - போலீசு கூட்டணியை தோழர்கள் அம்பலப்படுத்தினர்.

அம்பலப்பட்டு போன ஆத்திரத்தில் அறிவிழந்த போலீசு, தனது அடக்குமுறையை மேலும் தீவிரப்படுத்தியது. ம.க.இ.க. - வி.வி.மு. சார்பில் வெளியிடப்பட்ட பிரசுரத்தில், மதக் கலவரத்தைத் தூண்டும்படியான வாசகங்கள் இருப்பதாக ஒரு பொய்ப் புகாரை இந்து மதவெறிக் கும்பலின் உதவியோடு தயாரித்த துணை ஆய்வாளர் சண்முகம், எஸ்.பி.பட்டினம், நம்புதாளை பகுதியைச் சேர்ந்த ஐந்து தோழர்களைப் பிணையில் வெளிவராத வழக்குகளின் கீழ் கைது செய்தார்.

அப்பிரசுரத்தை ஒருமுறை படித்துப் பார்த்தாலே, அதில் மதக் கலவரத்தைத் தூண்டும்படியான ஒரு வார்த்தைக் கூட கிடையாது என்பதையும்; இந்து மதவெறிக் கும்பலின் சதித்திட்டத்தையும், அதற்குத் துணைபோகும் போலீசையும்தான் அப்பிரசுரம் அம்பலப்படுத்தியிருக்கிறது என்பதையும் எழுத்துக் கூட்டிப் படிக்கத் தெரிந்தவர்கள் கூடப் புரிந்து கொள்ள முடியும். ஆனால், மகாகனம் பொருந்திய உள்ளூர் நீதிபதியோ கருப்பு அங்கிக்குப் பதில் காவி அங்கியை அணிந்து கொண்டிருக்கிறார் போலும். பிரசுரம் வெளியான மறுநாளே- 8.4.05 அன்று - கைது செய்யப்பட்ட தோழர்களுக்கு, இச்செய்தி அச்சேறும் நாள்வரை பிணை வழங்க நீதிமன்றம் மறுத்து வருகிறது.

எஸ்.பி.பட்டினம் போலீசின் பழி வாங்கும் நடவடிக்கை இதோடு முடிந்து விடவில்லை. மதுரையில் எஸ்.எஸ்.காலனி பகுதியில் அமைந்துள்ள உதயம் அச்சகம் மீதும் போலீசு பாய்ந்தது.

அந்தப் பிரசுரம் மதுரை உதயம் அச்சகத்தில்தான் அச்சடிக்கப்பட்டதென்றும், அந்த உண்மையைக் கைது செய்யப்பட்ட தோழர் சாதிக் ஒப்புக் கொண்டு விட்டார் என்றும் ஒரு பொய்யான வாக்குமூலத்தைத் தயாரித்துக் கொண்டு, தொண்டி போலீசு நிலைய ஆய்வாளர் ராஜா தலைமையில் ஒரு பெரும் போலீசு பட்டாளம், 8.4.05 அன்று உதயம் அச்சகத்தில் சட்ட விரோத சோதனை வேட்டையை நடத்தியது.

மனித உரிமை பாதுகாப்பு மையத்தின் மதுரை மாவட்டக் கிளையில் இயங்கி வரும் தோழர் லயோனல் அந்தோணிராஜ்தான் இப்பிரசுரத்தைத் தயாரித்து, தனது உதயம் அச்சகத்தில் அச்சடித்துக் கொடுத்ததாகப் பொய் குற்றச்சாட்டை போலீசார் சுமத்தினர். அச்சகத்தில் அந்தோணிராஜ் இல்லை எனத் தெரிந்ததும், அவரது மனைவியிடம் "இப்பிரசுரத்தால் தொண்டியில் மிகப் பெரிய மதக் கலவரம் ஏற்பட்டு, கொலைவரை போய்விட்டது" எனப் புளுகிப் பீதியூட்டினர்.

அச்சகத்தின் உரிமத்தை மிரட்டி வாங்கிப் பார்த்து, அச்சகத்தின் உரிமையாளர் அந்தோணிராஜின் மனைவி லில்லி அம்மணிதான் எனத் தெரிந்து கொண்ட போலீசார், "உன் புருசனோடு உன்னையும் கைது செய்வோம்" என அவரை மிரட்டினர். அச்சகத்துக்கு வருவோரைக் காட்டி, "இவன் தான் உன் புருசனா?" எனக் கொச்சையாகக் கேட்டு அவமானப்படுத்தினர்;

அன்று காலை தொடங்கி இரவு வரை, லில்லி அம்மணியை இருக்கையை விட்டுக்கூட எழுந்திருக்க விடாமல் மிரட்டியும் அச்சுறுத்தியும் வந்த போலீசார், இரவு 8 மணி அளவில் லில்லி அம்மணியைக் கைது செய்யப் போவதாகக் கூறினார்கள். போலீசின் விசாரணையாலும் உடல் நலக் குறைவாலும் ஏற்கெனவே சோர்ந்து போயிருந்த அவர், போலீசின் கைது மிரட்டலால் அதிர்ச்சியடைந்து மயக்கமடைந்தார். மயங்கிய நிலையில் இருந்த அவரை, அக்கம் பக்கத்தைச் சேர்ந்தவர்கள்தான் தூக்கிக் கொண்டு போய் தனியார் மருத்துவமனையில் சேர்த்தனர்.



படிப்பகம்

மறுநாள் அத்தனியார் மருத்துவமனைக்கு வந்த ஆய்வாளர் ராஜா, லில்லி அம்மணியைக் கைது செய்யும் நோக்கத்தோடு, அவரை உடனே விடுவிக்குமாறு மருத்துவர்களை மிரட்டினார். இம்மிரட்டலுக்கு அம்மருத்துவர்கள் மசியாது போகவே, மதுரை நீதிமன்ற நடுவர் - 1 அவர்களை மருத்துவமனைக்கு அழைத்து வந்து, கைது செய்து கொண்டு போக முயன்றார். ஆனால், லில்லி அம்மணியின் நிலையை நேரில் பார்த்த அந்நீதிபதி 15.04.05 வரை, அவரை மருத்துவமனையிலேயே வைத்திருந்து சிகிச்சையளிக்க அனுமதியளித்தார். அதன்பின் திருவாடனை நீதிமன்றம், மருத்துவர்கள் அளித்த சான்றிதழின் அடிப்படையில் லில்லி அம்மணிக்குப் பிணை வழங்கி உத்திரவிட்டது.




மதக் கலவரத்தைத் தூண்டும் பிரசுரத்தை அச்சிட்டதாக பொய்க்குற்றம் சாட்டி மதுரை - உதயம் அச்சகத்தில் சோதனை நடத்தும் போலீசு.

உதயம் அச்சகத்தை மீண்டும் சோதனையிட, நீதிமன்ற உத்திரவோடு 15.04.05 அன்று அச்சகத்திற்கு தனது படை பட்டாளத்தோடு ஆய்வாளர் ராஜா வந்தார். தோழர் லயோனல் அந்தோணிராஜுக்கு ஆதரவாக மனித உரிமை பாதுகாப்பு மையத்தைச் சேர்ந்த வழக்குரைஞர்களும், புதிய ஜனநாயகத்தின் மதுரை பகுதி நிருபர் வீடியோ கேமிராவோடும் நிற்பதை பார்த்து அரண்டு போன அவர், ''சோதனையை ஒளிப்பதிவு செய்ய விடமாட்டேன்'' என அதிகாரம் கொப்பளிக்க கூறினார். ''ஒளிப்பதிவு செய்வது எங்கள் உரிமை; முடிந்தால் தடுத்துப் பாருங்கள்'' என வழக்குரைஞர்கள் எதிர்த்து நின்றவுடன், அதிரடிப் படையை அழைத்து வருவதாக மிரட்டி விட்டுச் சென்றார்.

பிறகு உள்ளூர் போலீசை அழைத்து வந்த ஆய்வாளர் ராஜா, சோதனையை ஒளிப்பதிவு செய்ய சம்மதித்தார். இதன்பிறகுதான் அவரை அச்சகத்துக்குள் நுழையு மனித உரிமை பாதுகாப்பு மைய வழக்குரைஞர்கள் அனுமதித்தனர். இரண்டு மணி நேரம் சோதனை நடத்திய போலீசு பட்டாளம், வெறுங்கையோடு திரும்பிப் போகக் கூடாது என்பதற்காகச் சில பிரசுரங்களை அள்ளிக் கொண்டு போனது. சோதனை ஒளிப்பதிவு செய்யப்பட்டதால், போலீசு கும்பலால் அச்சகத்திற்குள் ''எதையும்'' வைக்கவும் முடியவில்லை.

தோழர் அந்தோணிராஜையும், அவரது மனைவி லில்லி அம்மணியையும் பயங்கரவாத இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் எனப் பகுதி மக்களிடம் பீதியூட்டி, தனிமைப்படுத்த போலீசு எடுத்துக் கொண்ட முயற்சிகள் படுதோல்வியில் முடிந்தன. போலீசு சோதனைக்கு அத்தாட்சி கையெழுத்திட அப்பகுதி மக்களில் ஒருவர் கூட முன் வரவில்லை. உள்ளூர் போலீசார்தான் இரண்டு ஆட்டோ ஓட்டுநர்களை தாஜா செய்து கையெழுத்திட வைத்தனர்.

''இந்து'' என்றால் அதற்குத் திருடன் என்ற பொருளும் உண்டு என தி.மு.க. தலைவர் கருணாநிதி ஒரு முறை சுட்டிக் காட்டினார். உடனே, இந்துமதவெறி அமைப்புகள் அனைத்தும் அவர் மீது எகிறிப் பாய்ந்தன. ஆனால், இப்பொழுது இவர்கள் எஸ்.பி.பட்டிணத்தில் என்ன செய்கிறார்கள்? உள்ளூர் மக்களின் எதிர்ப்பையும் மீறி, பொது நிலத்தை இந்து மதவெறி கொண்ட சுயநல கும்பல் திருடிக் கொள்ளத் துடிக்கிறது. அதை எதிர்த்து உறுதியோடு நிற்கிறார்கள் என்பதற்காகவே, போலீசின் துணையோடு புரட்சிகர அமைப்புகள் மீது அடக்குமுறை ஏவிவிடப்படுகிறது.

மேலும், இராமநாதபுரம் மாவட்டம் கணிசமாக முசுலீம்கள் வாழும் பகுதியாகும். எனவே, எப்படியாவது இப்பகுதியில் இந்து மதவெறிக் கலவரத்தைத் தூண்டிவிட்டு நடத்தி, அதன் மூலம் காலூன்றத் திட்டம் போடுகிறது, ஆர்.எஸ்.எஸ். கும்பல். இதற்காகவே, தாழ்த்தப்பட்டவர்களைத் தனது அடியாட்களாகப் பயன்படுத்திக் கொள்ளும் நோக்கத்தோடு அணிதிரட்டி வருகிறது. ம.க.இ.க., வி.வி.மு., ஆகிய புரட்சிகர அமைப்புகள் இப்பகுதியில் செயல்படும் வரை, ஆர்.எஸ்.எஸ்.இன் இந்த நயவஞ்சகக் கனவு பலிக்காது. அதனால்தான் இவ்வமைப்புகள் மீது பொய் வழக்கு போட்டு, இப்பகுதி வாழ் மக்களிடமிருந்து அப்புறப்படுத்த முயலுகிறது. இதற்காகவே, காரைக்குடி சட்டமன்ற தொகுதி பா.ஜ.க. உறுப்பினர் ஹெச். ராஜாவின் உறவினராகக் கூறப்படும் போலீசு ஆய்வாளர் ராஜா தொண்டிக்கு மாற்றப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

கைது, பொய்வழக்கு, சித்திரவதைகளை எதிர்கொள்வது புரட்சியாளர்களுக்குப் புதியதல்ல. அவர்கள் இராமநாதபுரம் மாவட்ட மக்களின் துணையோடு, ஆர்.எஸ்.எஸ். - தமிழக போலீசின் சதித்திட்டத்தை முறியடிக்கும் நாளும் வெகு தொலைவில் இல்லை!

**தகவல்:**
**ம.க.இ.க. - வி.வி.மு.,**
**இராமநாதபுரம் மாவட்டம்.**

www.padippakam.com

# இந்திய மக்களே, எச்சரிக்கை! மீண்டும் வருகிறது என்ரான்

## வாங்கிய கடனை அடைக்க முடியாமல் விவசாயிகள் தற்கொலை செய்து கொள்ளும் நாட்டில், மக்களின் வரிப் பணத்தில் இருந்து என்ரானின் அந்நியக் கடனை அடைக்கத் துடிக்கிறது காங்கிரசு ஆட்சி.

"என்ரான்" என்ற பெயரை இந்திய மக்கள் அவ்வளவு எளிதில் மறக்க முடியாது. தாராளமயத்தால் இந்தியாவிற்குக் கிடைக்கப் போகும் நன்மைகளின் குறியீடாக, என்ரான் இந்திய மக்களிடம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால், என்ரானின் கதையோ, ஆமை புகுந்த வீடும் அமீனா புகுந்த வீடும் உருப்படாது என்பார்களே, அந்தப் பழமொழிக்கேற்ப அவலமாக முடிந்து போனது.

அமெரிக்கப் பன்னாட்டு நிறுவனமான என்ரான், மகாராஷ்டிரா மாநிலத்தில் ஆரம்பித்த தபோல் மின் உற்பத்தி நிலையம் மிகப் பெரும் அந்நிய முதலீட்டில் ஆரம்பிக்கப்பட்ட நிறுவனம் என இந்திய ஆட்சியாளர்கள் பீற்றிக் கொண்டார்கள். ஆனால், என்ரான் இந்தியாவில் போட்ட 9,000 கோடி ரூபாய் முதலீட்டில் ஏறத்தாழ 40 சதவீதம் (3,600 கோடி ரூபாய்) இந்திய நாட்டு வங்கிகளிடமிருந்து கடனாகப் பெறப்பட்டது. கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைத்த கதையாகத்தான், என்ரான் இந்தியாவில் தொழில் தொடங்கியது.

மேலும், என்ரான் தயாரிக்கும் மின்சாரம் முழுவதையும் மகாராஷ்டிரா மாநில மின்சார வாரியம் வாங்கிக் கொள்ளும்படி ஒப்பந்தம் போடப்பட்டு, அந்நிறுவனத்திற்கு உத்திரவாதமான சந்தை ஏற்படுத்தித் தரப்பட்டது. என்ரான் போட்ட 'மூலதனத்திற்கு' 16 சதவீத இலாபம் கட்டாயம் கிடைக்கும்படி ஒப்புக் கொண்டு, மைய அரசு பத்திரத்தில் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தது. இதற்கு ஏற்ப, அந்நிறுவனம் தயாரித்த மின்சாரம், யூனிட் ஒன்றுக்கு ரூ. 7.00 என்ற விலையில் மகாராஷ்டிரா அரசின் தலையில் கட்டப்பட்டது. அதேசமயம், டாடா போன்ற தனியார் நிறுவனங்கள் யூனிட் ஒன்றுக்கு ரூ. 2.00 என்ற விலையில்தான் மின்சாரத்தைத் தயாரித்து, மகாராஷ்டிரா அரசிற்கு விற்று வந்தன. என்ரானின் இந்தக் கட்டணக் கொள்ளை ஒருபுறமிருக்க, திறன் கட்டணம் என்ற பெயரில் மாதாமாதம் 95 கோடி ரூபாயை மானியமாக மகாராஷ்டிரா அரசு என்ரானுக்குக் கொடுத்து வந்தது.

இந்தப் பகற்கொள்ளையின் ஒரு கட்டத்தில், 920 கோடி ரூபாய் வருமானம் பெற்று வந்த மகாராஷ்டிர மின்சார வாரியம், அதில் ஏறத்தாழ 80 சதவீதத்தை - 725 கோடி ரூபாயை என்ரானுக்கு மின் கட்டணமாகவும், மானியமாகவும் கொடுக்க வேண்டிய நிலை வந்தபொழுது, அம்மின்சார வாரியமே திவாலாகிவிடும் அபாயத்தை எட்டியது. இந்த நிலையில்தான் மகாராஷ்டிரா அரசு என்ரானிடமிருந்து மின்சாரம் வாங்குவதில்லை என முடிவெடுத்தது. இதே சமயத்தில், என்ரான் அமெரிக்கப் பங்குச் சந்தையில் நடத்திய மோசடியின் காரணமாகத் திவாலாகிவிட, என்ரானின் துணை நிறுவனமான தபோல் மின் உற்பத்தி நிலையம் இழுத்து மூடப்பட்டது.


"மம்மி ரிடர்ன்ஸ்" என்ற திரைப்படக் கதையைப் போல, இப்பொழுது மீண்டும் என்ரானின் மின்சார நிறுவனத்திற்கு உயிர் கொடுக்கும் முயற்சியில் இறங்கியிருக்கிறது, மைய அரசு. என்ரான், தபோல் மின்சார நிலையத்தை அமைப்பதற்கு அந்நிய நிதி நிறுவனங்களிடம் வாங்கிய கடனை முதலில் அடைப்பது; பிறகு, ஒரு 1,500 கோடி ரூபாயை மீண்டும் மூலதனமாகப் போட்டு, மூடிக் கிடக்கும் மின் நிலையத்தைத் திறந்து நடத்துவது என்ற திட்டம் இதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ளது.

எத்தனையோ பொதுத்துறை நிறுவனங்கள் போதிய மூலதனம் கிடைக்காமல், அரைகுறையாக இயங்கி வருகின்றன; அல்லது இழுத்து மூடப்பட்டுக் கிடக்கின்றன. அந்த அரசு நிறுவனங்களை மீண்டும் இயக்குவது பற்றி அக்கறை காட்டாத மைய அரசு, தனியார் நிறுவனமான என்ரானின் மீது திடீர் கரிசனம் காட்டும் பின்னணியைக் கேட்டால், காங்கிரசு கும்பலின் மீது காறி உமிழத்தான் தோன்றும்.

என்ரானுக்குக் கடன் கொடுத்த அந்நிய நிதி நிறுவனங்கள், அசலையும், வட்டியையும் கேட்டு மைய அரசை நிர்பந்தித்து வருகின்றன. தேசிய ஜனநாயக முன்னணி ஆட்சியின் கடைசி நாட்களில், அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ் பிரதமர் வாஜ்பாயிடம் என்ரானின் அந்நியக் கடன் பிரச்சினை குறித்துப் பேசியிருக்கிறார். வாஜ்பாயால் செய்ய முடியாமல் போனதை, காங்கிரசு ஆட்சி நிறைவேற்றத் துடிக்கிறது.

நியாயமாகப் பார்த்தால், மைய அரசு கடன் கொடுத்த நிறுவனங்களி

மகாராஷ்டிரா மாநில மின்வாரியத்தைப் போண்டியாக்கும் நிலைமைக்குத் தள்ளிய என்ரானின் தபோல் மின் உற்பத்தி நிலையம்.




படிப்பகம்

www.padippakam.com





நிதியமைச்சர் ப.சிதம்பரம்: திவாலாகிப்போன என்ரானின் முன்னாள் வக்கீல்; விவசாயத் துறை அமைச்சர் சரத்பவார்: என்ரான் மகாராஷ்டிராவிற்குள் நுழைய அனுமதி கொடுத்தவர்; திட்டக் கமிசனின் துணைத் தலைவர் மாண்டேக் சிங் அலுவாலியா: என்ரான் மின் உற்பத்தி தொடங்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்த மின்சார ஆணையத்தின் முடிவைக் குப்பையில் வீசியெறிந்தவர். இந்த மும்மூர்த்திகள் இப்பொழுதும் என்ரானுக்காகத் தரகு வேலை பார்க்கிறார்கள்.

டம், "உங்க கடனை என்ரான் முதலாளியின் கூட்டாளி ஜார்ஜ் புஷ்ஷிடம் கேட்டு வாங்கிக் கொள்" என்று கூறியிருக்க வேண்டும்; என்ரானுக்கு கடன் கொடுத்த இந்திய அரசு வங்கிகளின் அசலையும், வட்டியையும் திருப்பிக் கொடுக்கும்படி அமெரிக்க அரசிற்கு நிர்பந்தம் கொடுத்திருக்க வேண்டும். ஆனால், காங்கிரசு கும்பலோ ஊரான் கடனை நம் தலையில் சுமத்தப் பார்க்கிறது.

இந்திய அரசிற்கும், என்ரானுக்குக் கடன் கொடுத்த அந்நிய நாட்டு வங்கிகளுக்கும் இடையே சிங்கப்பூரில் கடந்த சனவரி மாதம் நடந்த இரகசிய பேச்சு வார்த்தைகளின்படி, இந்த வங்கிகளுக்குத் தர வேண்டிய 1,150 கோடி ரூபாய் அசலை ஏப்ரல் மாத இறுதிக்குள் திருப்பித் தருவதாக ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

"சர்வதேசக் கூட்டுறவுக்கான ஜப்பானிய வங்கி" உள்ளிட்ட சில அந்நிய நிதி நிறுவனங்களுக்குத் தர வேண்டிய 2,250 கோடி ரூபாய் கடனை டிசம்பர் முதல் தேதிக்குள் அடைத்துவிட இந்திய அரசு சம்மதித்திருக்கிறது.

அமெரிக்க அரசுக்குச் சொந்தமான "ஓ.பி.ஐ.சி." என்ற நிதி நிறுவனம் என்ரானுக்குக் கொடுத்துள்ள 690 கோடி ரூபாய் கடனில், 103.5 கோடி ரூபாயை ஜூலை மாத முதல் வாரத்திற்குள் கொடுப்பதாகவும், மீதிக் கடனை அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் அடைப்பதாகவும் இந்திய அரசு ஒப்புக் கொண்டுள்ளது.

இந்தக் கடன்கள் ஒருபுறமிருக்க தபோல் மின் நிலையத்தின் பங்குகளை இப்பொழுது ஜி.இ. மற்றும் பெக்டேல் என்ற இரு அமெரிக்கப் பன்னாட்டு நிறுவனங்கள் வாங்கியுள்ளன. இந்த இரண்டு நிறுவனங்களும், "மகாராஷ்டிரா மாநில அரசு தபோல் மின் நிலையத்தில் இருந்து மின்சாரம் வாங்கும் ஒப்பந்தத்தை திடீரென ரத்து செய்ததால், தங்களுக்கு நட்ட ஈடாக 26,000 கோடி ரூபாய் வழங்க வேண்டும்" எனக் கோரி இலண்டன் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளன. இந்த இரண்டு நிறுவனங்களுக்கும் இந்திய அரசுக்கும் மார்ச் 17 ஆம் தேதியன்று நியூயார்க் நகரில் நடந்த பேச்சு வார்த்தையில் 1,750 கோடி ரூபாய் வரை நட்டஈடாகத் தர இந்திய அரசு சம்மதித்துள்ளது.

மொத்தமாகப் பார்த்தால், திவாலாகிப் போன என்ரானுக்காக இந்திய அரசு 5,250 கோடி ரூபாயை அந்நிய நிறுவனங்களுக்குத் தூக்கிக் கொடுக்கப் போகிறது. ஏற்கெனவே பற்றாக்குறை பல்லவி பாடிக் கொண்டிருக்கும் ப.சிதம்பரம், இவ்வளவு பெரிய தொகையை எங்கிருந்து சுடப் போகிறார் தெரியுமா? மைய அரசிடம் உள்ள தொழிலாளர் வைப்பு நிதியில் இருந்தும், ஆயுள் காப்பீட்டுக் கழக சேமிப்பு நிதியில் இருந்தும் பணத்தை எடுக்கத் திட்டம் போட்டுள்ளனர்.

தொழிலாளர் வைப்பு நிதிச் சட்டத்தின்படி, அந்நிதியை அரசுத்துறை பொதுத்துறை நிறுவனங்களில்தான் முதலீடு செய்ய முடியும்; என்ரான் போன்ற தனியார் நிறுவனங்களில் முதலீடு செய்ய முடியாது. அதனால் தொழிலாளர் வைப்பு நிதியைத் தனியார்மயமாக்கும் சட்டத் திருத்தத்தை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது, காங்கிரசு ஆட்சி. தொழிலாளர் வைப்பு நிதிக்கு வழங்கி வரும் வட்டியை உயர்த்துவதை எதிர்த்து ஆயிரம் நொண்டிக் காரணங்களை அடுக்கிய காங்கிரசு ஆட்சி, முதலாளிகளுக்காக சட்டத்தையே மாற்றுகிறது.

இது ஒருபுறமிருக்க, தேசிய அனல் மின் நிலைய கார்ப்பரேசன், இந்திய இயற்கை எரிவாயு ஆணையம், பொதுத்துறை வங்கிகள் இணைந்து, தபோல் மின் நிலையத்தை மீண்டும் நடத்துவதற்கு 1,500 கோடி ரூபாய் மூலதனம் போட வேண்டும் என மைய அரசு சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறது. தபோல் மின் நிலையத்தில் உற்பத்தி தொடங்கிவிட்டால், போட்ட பணத்தை சீக்கிரமே எடுத்துவிடலாம் என நப்பாசை காட்டுகிறது, காங்கிரசு ஆட்சி.

ஆனால், இந்தியாவில் என்ரானின் 'தொழில் திறமையை' ஆய்வு செய்துள்ள நிபுணர்களோ, தபோல் மின் நிலையத்தில் பணத்தைப் போடுவதும்; பணத்தைக் கிணற்றுக்குள் போடுவதும் ஒன்றுதான் என்கிறார்கள். தபோல் மின் நிலையத்தை இயக்குவது என்பது யானையைக் கட்டித் தீனி போடுவதற்குச் சமமானது என்பதால்தான், மூடிக் கிடக்கும் இம்மின்நிலையத்தை எந்தவொரு தனியார் முதலாளியும் வாங்கி இயக்க முன் வராமல், அதை நைச்சியமாக அரசின் தலையில் கட்டப் பார்க்கிறார்கள் என இவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள்.

என்ரானின் அந்நியக் கடனை அடைத்துவிட்டு, தபோல் மின் நிலையத்தை மீண்டும் இயக்குவதற்காக ஒரு கமிட்டியை அமைத்திருக்கிறது, மைய அரசு. இக்கமிட்டியில் திட்டக் கமிசனின் துணைத் தலைவர் மாண்டேக் சிங் அலுவாலியாவும், விவசாயத் துறை

www.padippakam.com

அமைச்சர் சரத் பவாரும் இடம் பெற்றுள்ளனர்.

பல்வேறு அமைப்புகளின் எதிர்ப்பையும் மீறி, என்ரான் தபோல் மின் நிலையத்தை அமைக்கவும்; அதற்குப் பல்வேறு சலுகைகளை வாங்கித் தரவும் தரகனாகச் செயல்பட்டவர் சரத்பவார்.

மைய அரசின் கீழுள்ள மின்சார ஆணையம், தபோல் மின் நிலையம் மின்சார உற்பத்தியைத் தொடங்குவதற்கு அனுமதி கொடுக்க மறுத்த பொழுது, அம்முடிவுக்கு எதிராக வரிந்துக் கட்டிக் கொண்டு வேலை செய்தவர், உலக வங்கி கைக்கூலியான மாண்டேக் சிங் அலுவாலியா.

இந்த கமிட்டியில் நேரடியாகப் பங்கு பெறாமல், மறைமுகமாக இக்கமிட்டியை இயக்கிக் கொண்டிருக்கிறார், நிதியமைச்சர் ப.சிதம்பரம். அவர் திவாலாகிப் போன என்ரானின் முன்னாள் வக்கீல் என்பது குறிப்பிடத்தக்கது.

தனியார்மயம் - தாராளமயத்தின் பின், அரசிடம் உள்ள மக்களின் வரிப்பணத்தை, வங்கிகளில் உள்ள மக்களின் சேமிப்பை தனியார் முதலாளிகள் சூறையாடுவது அடுத்தடுத்து நடக்கத் தொடங்கியுள்ளன. அர்சத் மேத்தா தலைமையில் நடந்த பங்குச் சந்தை ஊழலில் ஒரு இலட்சம் கோடி ரூபாய்க்கும் மேலான பொதுப் பணம் சூறையாடப்பட்டது.

பங்குச் சந்தை மோசடியால் யூனிட் டிரஸ்ட் நிறுவனம் கவிழ்ந்த பொழுது, அந்நிறுவனம் திவாலாவதைத் தடுக்க, மக்களின் வரிப் பணத்தில் இருந்து 15,000 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது;

தரகு முதலாளி டாடா, "வீ.எஸ்.என்.எல்." நிறுவனத்தை வாங்கி, அந்நிறுவனத்தில் இருந்த 1,200 கோடி ரூபாய்க்கும் மேலான சேமிப்பை, தனது சொத்துக் கணக்கில் சேர்த்துக் கொண்டார்.

ரிலையன்ஸ் நிறுவனம், பி.எஸ்.என்.எல். நிறுவனத்தை ஏமாற்றி, 1000 கோடி ரூபாய்க்கு மேலாகச் சுருட்டிக் கொண்டது.

ஏற்கெனவே 3,600 கோடி ரூபாய் வங்கிப் பணத்தை விழுங்கிவிட்ட என்ரான், இப்பொழுது 7,000 கோடி ரூபாயைச் சுருட்டப் பார்க்கிறது. பொதுப் பணத்தை, பொதுச் சொத்தைச் சட்டபூர்வமாகச் சூறையாடுவதன் மறுபெயர் தான் தனியார்மயம் - தாராளமயம் என்பதற்கு இன்னுமா ஆதாரங்கள் வேண்டும்?

• ரஹீம்

## மூன்றாவது மொழிப்போர்:

# சண்டை தொடங்கும் முன்பே சரணாகதி!

"ஏப்ரல் 14 முதல் தமிழகமெங்கும் மும்பை எக்ஸ்பிரஸ்" திரையிடப்படும் என்ற விளம்பரத்தை ராமதாசின் முதுகில் மட்டும்தான் கமலஹாசன் ஒட்டவில்லை. தமிழகம் முழுக்க, எல்லா இடங்களிலும் விளம்பரங்கள் பளிச்சிட்டன.

அதற்கு முன்னரே, தமிழ்ப் புத்தாண்டு கொண்டாட்டங்கள் என்ற பெயரில் கருணாநிதி குடும்ப நிறுவனங்கள் உள்பட வானொளி, வானொலி மற்றும் தினசரிகள், சந்தை ஏடுகள் அனைத்தும் சினிமா நடிகைகள், நடிகர்கள் பின்னால் ரசிகர்களாக ஓடின.

புத்தாண்டு படங்களில் நடித்த புதிய நடிகைகளின் தொடைகளையும் மார்பகங்களையும் பல வண்ணங்களில் தங்கள் ஊடகங்கள் மூலம் சுடச் சுட விற்றுத் தீர்த்தன.

தமிழ்ப் புத்தாண்டில் திரையிடப்பட்ட ரஜினியின் 'சந்திரமுகி' கமலின் 'மும்பை எக்ஸ்பிரஸ்' மற்றும் விஜய்யின் 'சச்சின்' போன்ற புதிய படங்களைப் பற்றிய "பரபரப்பு" விளம்பர மழையில் தமிழகமே தொப்பலாக நனைந்தது.

இதில் ஜன்னி கண்டு உளர ஆரம்பித்தார், 'தமிழ் குடிதாங்கி' 'மருத்துவர் ஐயா' அவர்கள். "சினிமா படங்களுக்குத் தமிழில் பெயர் வைக்கக் கோரி போராட்டம் நடத்தமாட்டோம். வேண்டுகோள் விடுப்பதுடன் நிறுத்திக் கொள்வோம்!" என்று திடீர் அறிவிப்பு செய்தார்.

தமிழ் சினிமாவில் குரூர வில்லன் படம் முடிவதற்கு முன் கதாநாயகனிடம் பாவ மன்னிப்பு கேட்பது போல் கேட்டு, தமிழ் குடிதாங்கி நிஜக் கலைஞர்களை, குறிப்பாக கமலஹாசனைக் கலங்க வைத்து விட்டார்.

"வன்முறையில்(?) ஈடுபடும் உத்தேசம் எங்களுக்கு இல்லை. திருந்தினால் திருந்தட்டும் (தமிழ் திரைப்பட தயாரிப்பாளர்கள்). சிறு பிரச்சினைக்கு (!) போராட்டம் நடத்தி எங்கள் சக்தியை வீணடிக்க மாட்டோம். மக்களுக்காகப் போராட வேண்டியது உள்ளிட்டு அதிகமான வேலை (?) எங்களுக்கு உள்ளது. புலி வேட்டைக்குப் புறப்பட்டவர்கள் எலி வேட்டையில் இறங்க மாட்டார்கள்" என்று எலி, புலி கதையைச் சொல்லி, எலி வேட்டைக்காக இவ்வளவுநாள் தாங்கள் யானை மீது வலம் வந்த கதையை மறைக்கப் பார்த்தார்.

25.1.05 அன்று சென்னையில் ராமதாசு தலைமையில் நடந்த தமிழ்ப் பாதுகாப்பு இயக்கத்தின் உயர்நிலை குழுக் கூட்டத்தின் தீர்மானத்தில் "மும்பை எக்ஸ்பிரஸ்", "பெஸ்ட் பிரண்ட்" என்ற பெயர்களை மாற்றி, உடனடியாக தமிழ்ப் பெயர்களைச் சூட்ட வேண்டும். இதையும் மீறினால் அந்தப் படங்கள் தமிழகத்தில் எங்குமே திரையிட முடியாது" என்றனர்.

மேலும், "தமிழ் உணர்வாளர்களின் எதிர்ப்பையும் மீறி, 2 படங்களையும் ஆங்கிலப் பெயருடன் வெளியிட்டால், என்ன விலை (தண்டனை) கொடுத்தாலும் அதைத் தடுப்போம்" என்று தோள் தட்டிக் கொண்டு தமிழகத்தின் 4 திசைகளிலிருந்தும் "பயணம்" புறப்பட்டனர்.

ஆக, எலி வேட்டைக்கு யானை மீது சென்றவர்கள், எலியைப் பார்த்தவுடன், "நாங்கள் புலி வேட்டைக்குதான் போகிறோம்" என்று சிதறி ஓடினார்கள்.

ராம்தாசு, திருமா தலைமையிலான "தமிழ் பாதுகாப்பு" படை எலியைப் பார்த்து மிரண்டு ஓடியது வேடிக்கையல்ல! வேதனையான உண்மை!

காரணம், எலிகளின் வாழ்விடமும் இவர்களின் வசிப்பிடமும் ஒரே இடம்! ஊடகங்கள் என்ற வானொளி, வானொலி மற்றும் சந்தை பத்திரிக்கைகள் அடங்கிய சுயவிளம்பரம் என்ற பொந்து அது! எனவே, தங்கள் சவக் குழிக்குத் தாங்களே யாராவது பள்ளம் பறிப்பார்களா? பாவம்! அதை மறைக்கத்தான் புலி வேட்டைக்குப் போவதாக இப்போது புதிய 'கிலி'யைக் கிளப்புகி


படிப்பகம்

www.padippakam.com

றார்கள். ''இதற்கு பத்திரிக்கைகள்தான் உதவ வேண்டும்'' என்று வெட்கங்கெட்ட முறையில் கோரிக்கை வைத்துள்ளார், ராமதாசு. 'கூரை ஏறி கோழி பிடிக்க முடியாதவன் வானம் ஏறி வைகுந்தம் போன கதை' இதுதான்!



மூன்றாவது மொழிப்போர் அறிவிப்பு மாநாட்டையொட்டி, தமிழ்ப் பாதுகாப்பு இயக்கம் நடத்திய ஊர்திப் பிரச்சாரத்தை, சென்னையில் தொடங்கி வைத்த தி.மு.க. தலைவர் மு.கருணாநிதியுடன் பா.ம.க. தலைவர் இராமதாசு.

வாரம் ஒரு 'மெகா ஹிட்' திரைப்படம் வெளியிடுவது போல் 'தமிழ்ப் பாதுகாப்பு' இயக்கத்தின் பெயரால் அறிக்கை வெளியிட்டுக் கொண்டிருந்த திருமாவளவன், திடீரென ''தமிழ் பாதுகாப்பு இயக்கம் தனிப்பட்ட கமலஹாசனுக்கு எதிரானது அல்ல.' அவர் நடிக்கும் படங்களுக்கு நட்டம் ஏற்படுத்தும் எண்ணமும் எங்களுக்கு இல்லை'' என்று 13.4.05 அன்று மதுரையிலிருந்து அறிக்கை வெளியிட்டார். அதே அறிக்கையில் ''மும்பை எக்ஸ்பிரஸ் படத்தை மக்கள் புறக்கணிக்க வேண்டும்'' என்ற கோரிக்கையையும் முன்வைத்தார். ஏன் இந்த சுய முரண்பாடு? இது முரண்பாடு இல்லை! சுத்தமான அக்மார்க் மற்றும் அய்.எஸ்.ஓ தரச் சான்றிதழ் பெற்ற பிழைப்புவாத அரசியல்!

சினிமா கிசுகிசு என்ற போதையில் உயிர் வாழும் சந்தை ஊடகங்களும் ரசிகர்களும் 'சினிமா எதிர்ப்பு' என்று தமிழ்ப் பாதுகாப்பு இயக்கத்தை தீண்டத்தகாதவர்களாக ஒதுக்கி வைத்து விடுவார்களோ என்று பதற்றமடைந்து, ''திரையுலகில் யாரையும் அச்சுறுத்துவது எங்கள் நோக்கமல்ல'' என்று 'அப்ரூவர்'களாக மாறினர். இதுநாள் வரையில் ஆங்கிலப் பெயர் கொண்ட தமிழ் சினிமாக்களைப் பற்றி ''காம'', ''வக்கிர'', ''அசிங்கமான'', ''நடத்தை கெட்ட'' என்று ஏராளமான தமிழ் வார்த்தைகளில் தாங்கள் திட்டியது, ''அச்சுறுத்துவதற்கு'' அல்ல, சும்மா விளையாட்டுக்குத்தான் என்றனர். இருந்தாலும் அந்த விளையாட்டைக் கூட இனி தொடரமாட்டோம்! இனி ''சினிமா படங்களுக்கு தமிழ் பெயர்களை வைக்க அமைதியான முறையில் (இவ்வளவு நாள் ரத்தம் சிந்தியா போராடினார்கள்?) வலியுறுத்துவோம்'' என்று ஆங்கில பெயர் எதிர்ப்புகளுக்கு ''வணக்கம்'' போட்டு முடித்து விட்டனர், தமிழ்ப் பாதுகாப்பு இயக்கத்தினர்.

இதில் வேடிக்கை என்னவென்றால் தங்கள் ''போராட்ட''ப் பணியை முடித்துக் கொண்டதாக அறிவித்தப் பிறகும், 'தமிழ் பாதுகாப்பு' இயக்கத்தினரை தமிழ் தேசியம் கடை நடத்தும் தமிழ் ரசிகர்கள் விடவில்லை. போராட்டத்தை

## ''மூன்றாவது மொழிப்போர் மாநாடு''
## — சில துளிகள்

• ''மயிரை ஒட்ட வைத்துக் கொண்டு (wig-விக்) முகத்திற்குச் சாயம் பூசி நடிப்பவர்களுடன் இனி மோதுவதில்லை'' என்று கூறி தன் சவடால் சாயத்தைக் கலைத்தார், தொல்.திருமாவளவன். பிறகு, ''தமிழ்ப் பாதுகாப்பு கூட்டணி, அரசியல் கூட்டணியாக மாறினாலும் மகிழ்ச்சி'' என்று கொள்கை அறிவிப்பு செய்தார்.

• ''தமிழ் உணர்வாளர்கள்'', ''தமிழ் அறிஞர்கள்'' என்று கூட்டிய கருத்தரங்கத்தில் கடைசிவரை அதில் 100 பேர் கூட அமர்ந்து கவனம் செலுத்தவில்லை.

• மாலையில் நடந்த பொதுக்கூட்டத்தில் பேச 'தமிழ் அறிஞர்கள்' ஒவ்வொருவருக்கும் 10 நிமிடம் ஒதுக்கப்பட்டது. அதில், தொல்.திருமாவளவன் மற்றும் 'அய்யா' இராமதாசைப் புகழவே அவர்களுக்கு நேரம் போதவில்லை. 'தந்தை பெரியாருக்குப் பிறகு ''அய்யா'' என்ற தகுதி இராமதாசுக்கு தான் உண்டு' என்று பரவசமடைந்தனர் பல அறிஞர்கள்.

• மாநாட்டை வந்தடைந்த ஊர்திப் பயணத்தின்போது பல இடங்களில் பா.ம.க. கொடியையும் வன்னிய சாதி கொடியையும் ஏற்றியதைப் பட்டியலிட்டு பரவசமடைந்தார், தொல்.திருமாவளவன். ''இதை, அய்யா இராமதாசிடம் தொலைபேசியில் தெரிவித்த போது, அய்யா இராமதாசுக்கு நா எழ மறுத்து, கால் மணிநேரம் வார்த்தையே வரவில்லை'' என்று உணர்ச்சியுடன் கூறித் தொண்டர்களின் இதயத்தைப் பிசைந்தார்.

• 'தமிழ் அறிஞர்கள்' மேடையில் தொல்.திருமாவளவனைப் பற்றிப் புகழ்ந்தபோது கூட்டம் பேரலை போல் இரைச்சலை ஏற்படுத்தியது. ஆனால், இராமதாசைப் பற்றி புகழ்ந்தபோது மட்டும் கைதட்டல், இங்கொன்றும் அங்கொன்றுமாகத்தான் கேட்டது. இதனால் பதற்றமடைந்த தங்கர்பச்சான், அறிவுமதி போன்றோர் மேடையிலிருந்து எழுந்து, கூட்டத்தினருக்கு உபதேசம் செய்தனர். ''இரு தலைவர்கள் பற்றி 'அறிஞர்கள்' பேசும்போது சமமாக ஒலி எழுப்ப (பாராட்ட) வேண்டும்'' என்றும் மேலும், ''அய்யா இராமதாசை அறிஞர்கள் பாராட்டும் போது சிறுத்தைகளும்; வன்னிய சொந்தங்கள் தொல்.திருமாவளவனுக்கும் மாறி மாறி கைதட்டி தங்கள் ஒற்றுமையைக் காட்டும்படி'' கேட்டுக் கொண்டனர்.

• கூட்ட முடிவில் தமிழ்ப் பண் பாடலுக்கு கூட்டத்தினரை எழுந்து நிற்கச் சொன்னார், தொல்.திருமாவளவன். ஆனால், கூட்டத்தினருக்கும் முன்பாக 'தமிழறிஞர்கள்' அவசரமாகக் கலைந்து சென்றனர். கடைசிவரை அனாதையாக தமிழ் பண் மட்டும் ஒலித்துக் கொண்டிருந்தது.

'அய்யா' இராமதாசு, தொல்.திருமாவளவன் கூட்டணியால், மொழிப் போர் அறிவிப்பு மாநாடுதான் நடத்த முடியும்; மொழிப் போர் நடத்த முடியாது என்று மாநாட்டின் நடைமுறை நிரூபித்தது.

*— இ. கரிகாலன், பு.மா.இ.மு., தஞ்சை.*


படிப்பகம்

www.padippakam.com




திருச்சியில் நடந்த மூன்றாவது மொழிப்போர் அறிவிப்பு மாநாட்டு மேடையில், தமிழ் அறிஞர்கள், தமிழினத் தலைவர்கள் என்ற போர்வையில் அமர்ந்திருக்கும் காக்காய் கூட்டம். (நன்றி: இந்தியா டுடே)

நடத்துமாறு, 'ஒன்ஸ்மோர்' கேட்கிறார்கள்!

''அதில் (தமிழ் பாதுகாப்பு இயக்கத்தில்) தமிழ் உணர்வு நீறு பூத்த நெருப்பாய்க் கனன்று கொண்டிருக்கிறது'' என்று அதை விசுறும் வேலையில் இறங்கிவிட்டனர். அதற்காக, தங்களையே ''தமிழ் அறிஞர்கள்'', ''தமிழ் உணர்வாளர்கள்'' என்று பாராட்டி கொள்கின்றனர். ''தமிழ்ப் பாதுகாப்பு'' போன்ற பிழைப்புவாத கூடாரங்கள் காலியானால் ''வேறு போக்கிடம் ஏது?'' என்று கலக்கமடைகிறது, ஒட்டுண்ணி ''தமிழ் அறிஞர்கள்'' கூட்டம்.

தமிழ்ப் பாதுகாப்பு இயக்கத்தின் மொழிப் போர் அறிவிப்பு மாநாட்டின் தீர்மானத்தின்படி ராமதாசு புலி வேட்டை என்று அர்த்தப்படுத்துவது எது தெரியுமா? சொன்னால் வெட்கக் கேடு!

மே 23-இல் தமிழகமெங்கும் கடைகளில் இருக்கும் விளம்பர பலகைகளில் உள்ள பிறமொழி எழுத்துக்களின் மீது 'தார்' பூசுதல்!

நவம்பர் 1-இல் 10 கோரிக்கைகளை வலியுறுத்தி மைய, மாநில அலுவலகங்களின் முன் ஆர்ப்பாட்டம்!

''சினிமா படங்களுக்கு தமிழ் பெயர் வைக்க போராட்டம் நடத்த மாட்டோம்'' என்பவர்கள், ''கடைகளில் உள்ள பிறமொழி எழுத்துக்களின் மீது தார் பூசுவோம்'' என்று ஆர்ப்பரிக்கிறார்கள். ஏன்? தமிழ் சினிமாக்களுக்கு தமிழ் பெயர் வைக்க மறுக்கும், நடிகர்கள், சினிமா முதலாளிகள் முகத்தில் தார் பூச வேண்டியதுதானே? யார் தடுத்தது? தமிழன் கடையின் தகரப் பலகைகளில் தார் பூசுவதுதான் புலி வேட்டையா?

அப்படியானால் இவர்கள் மட்டும் தமிழகத்தின் தேசிய நெடுஞ்சாலை முழுக்க இந்தியை எழுதலாமா? மத்திய ஆட்சியில் தேசிய நெடுஞ்சாலைத் துறை பொறுப்பு வகிக்கும் கருணாநிதி கட்சியின் தி.மு.க.தானே அதற்கு முழு பொறுப்பு! ராமதாசும் அதற்கு உடந்தை தானே! அதற்கு இவர்கள் முகத்தில் எதைப் பூசுவது?

செத்துப்போன சமஸ்கிருத மொழிக்கு தேசிய கல்வித்துறையில் முதல் தர தகுதி! செம்மொழி என்று அறிவித்த பிறகும் தமிழுக்கு அத்தகுதியை மறுக்கும் மைய அரசின் துரோகத்திற்கு ராமதாசும் கருணாநிதியும் தானே முழு பொறுப்பு! தன்னுடைய ஆட்சியில், தாய் தமிழ் வழிக் கல்வியை மறுத்த முதல் குற்றவாளி கபட வேடதாரி கருணாநிதிதானே? தன் ஆட்சியில் பெரும்பான்மை இருந்தும் தமிழ் வழிக் கல்விக்காக சட்டம் இயற்றாமல் அதிகாரமற்ற அரசாணையைப் பிறப்பித்து ஏமாற்றியது, கருணாநிதி தானே!

திருமாவளவன், ராமதாசு, நெடுமாறன், சேதுராமன் போன்றோர் இவற்றுக்கெல்லாம் என்ன பதில் சொல்லப் போகிறார்கள்? என்ன தண்டனை வழங்கப் போகிறார்கள்?

அதிகார பீடங்களுக்கு எதிரான இக் கேள்விகளை எல்லாம் தவிர்த்து விட்டு, அப்பாவி தமிழனின் கடையில் தார் பூசுவதைத்தான் ''மூன்றாவது மொழிப் போர்'' என்று ஏமாற்றுகிறார்கள். போராட்டம் என்ற பெயரில் தங்கள் அரசியல் பிழைப்புக்கு எவ்விதத்திலும் ஆபத்தில்லாத உளுத்துப் போன, செத்துப்போன பாம்புகளை அடிப்பதில்தான் வீரம் காட்டுகிறார்கள். தமிழின அரசியல் பிழைப்புவாதிகள், இதை ஒரு நுண்கலை போன்றே மரபு வழியாக பின்பற்றுகிறார்கள்! தங்களுடைய சாதிய ஓட்டு வங்கியை அடைகாத்துக் கொண்டு தங்கள் சாதிக்கு அப்பாற்பட்ட பல சாதி ஓட்டுக்களையும் வேட்டையாடும் கலை இது! அதற்கு வசதியாக 'தமிழ்ப் பாதுகாப்பு' என்ற ஒளி வட்டத்தோடு வேட்டைக்கு கிளம்புகிறார்கள்!

ஆனால் தமிழகத்தின் இன்றைய வேலைவாய்ப்பில் உள்ள உண்மை நிலை என்ன? ஆங்கிலம் தெரிந்தவர்களுக்கு மட்டும்தான் தனியார் நிறுவனங்களின் கதவுகள் திறக்கின்றன. ராமதாசு அங்கம் வகிக்கும் மத்திய அரசின் புள்ளிவிவரப்படி இந்தியாவில் வேலை வாய்ப்பு உள்ள ஒரே துறை, தகவல்-தொடர்பு துறை மட்டும்தான். அதிலும் நான்காம்தரமான 'கால் சென்டர்' வேலைகள்தான் காலியாக இருக்கின்றன. அதற்கு படிப்புத் தகுதியாக செந்தமிழையா கேட்கிறார்கள்? மாறாக, அமெரிக்காவின் 'டெக்சாஸ்' மாநிலத்தில் பேசும் ஆங்கில நடையும் 'புளோரிடா' மாநிலத்தில் பேசும் ஆங்கில நடையும் பேச முடியுமா? என்று தானே கேட்கிறார்கள்.

இப்படி தமிழ் மண்ணிலேயே புகுந்து, தமிழ் மொழியை விரட்டும், தமிழனை வெளியே தள்ளும் உலகமயத்திற்கு எதிராக இவர்கள் எப்படித் தனியாக தாய் தமிழையும் தமிழ் பண்பாட்டையும் காப்பாற்றப் போகிறார்கள்? அதற்கு என்ன திட்டம் வைத்திருக்கிறார்கள்? உள்ளூர் தமிழன் கடைகளில் தார் பூச விரிவாகத் திட்டம் வைத்திருக்கும் இவர்கள், தாய்மொழியையும் தமிழகத்தையும் விழுங்கும் உலகமயத்தை எதிர்க்க என்ன திட்டம் வைத்திருக்கிறார்கள்? தொடர்ந்து, மத்திய மந்திரிகளாகி காட்டிக் கொடுக்கும் வேலையைத் தவிர!

• குணசேகரன்


படிப்பகம்

www.padippakam.com

# ஞான சூனிய பீடம்!



**''வர்ண வேறுபாடுகள் இருக்க வேண்டும். ஏற்றத்தாழ்வுகள் இருந்தால்தான் வாழ்க்கை சுவாரஸ்யமாக இருக்கும்.''**

**''தமிழைவிட சமஸ்கிருதம் உயர்வானது.''**

**''பிறமொழிக் கலப்பில்லாமல் தமிழில் எழுதவேண்டும், பேசவேண்டுமென்கிற தமிழறிஞர்கள் தம்மைத்தாமே நக்கிக் கொள்கிற நாய்கள்.''**

**''சமஸ்கிருதம் இங்கே ஆதரித்து வளர்க்கப்பட்டிருந்தால் ஆங்கிலம் இப்படி நுழைந்திருக்காது.''**

— இவை தற்போது கொலைவழக்கில் வாய்தாவுக்கு அலைந்து கொண்டிருக்கும் காமகோடி பீடம், ஸ்ரீ ஜெயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் திருவாய் மலர்ந்த அருள்வாக்குகள் அல்ல; ஞானபீடம் ஸ்ரீ **ஜெயகாந்த** ஸரஸ்வதி ஸ்வாமிகள் சமீபத்தில் அருளிச் செய்த திருவாசகங்கள்.

23.4.05 அன்று சென்னையில் 'ஸம்ஸ்கிருத ஸேவா ஸமிதி' இந்தத் 'தமிழ்' எழுத்தாளருக்கு நடத்திய பாராட்டுக் கூட்டத்தில் ஜெயகாந்தன் உதிர்த்த முத்துக்கள் இவை. ஞானபீட விருது வாங்கிய ஜெயகாந்தனுக்கு 'தத்வ ஸிந்தாமணி' என்ற இன்னொரு விருதை போனஸாக அதே மேடையில் வழங்கியது கூட்டத்தை ஏற்பாடு செய்த பார்ப்பனக் கும்பல்.

''தமிழைவிட சமஸ்கிருதம்தான் மேன்மையான மொழி'' என்று கூறுவதற்கு ஜெயகாந்தனுக்கு உள்ள உரிமையை நாம் தடுக்கவில்லை. மேற்படி ஞானம் கைவரப்பெற்ற சமஸ்கிருத விற்பன்னரான ஜெயகாந்தன் ஒன்றிரண்டு இலக்கியங்களையாவது அந்த தேவ பாஷையில் ஸ்ருஷ்டித்திருக்கலாமே? துட்டு கொடுத்துப் படிக்கத் தமிழ் வாசகன்; பட்டம் பவிசுக்குப் பார்ப்பனத் துதியா?

''சமஸ்கிருதக் கலப்பினை எதிர்க்கும் தமிழறிஞர்கள் தம்மைத்தாமே நக்கிக் கொள்ளும் நாய்கள்'' என்றால் சமஸ்கிருதத்தை நத்தும் ஜெயகாந்தன் வகையறாக்களை ''மற்ற நாய்களை நக்கும் நாய்கள்'' என்று உவமானம் கூறலாமா?

ஜெயகாந்தனின் 'நாய்' என்ற வசவு தமிழறிஞர்களை மட்டும் குறிக்கவில்லை; சமஸ்கிருதக் கலப்பிற்கு எதிராகப் போராடி தனது தனித்தன்மையைப் பேணிக் கொண்டிருக்கும் ஒரே மொழியான தமிழ் மொழியின் வரலாற்றையும் அதன் இலக்கிய மரபையும் சேர்த்துதான் தூற்றியிருக்கிறார் ஜெயகாந்தன். சமஸ்கிருதத்தின்மீது ஆதிக்கம் செய்ய தமிழ் என்றும் முயன்றதில்லை. சமஸ்கிருதத்தின் ஆதிக்கத்தைத்தான் எதிர்த்துப் போராடியிருக்கிறது. இது பார்ப்பன ஆதிக்க எதிர்ப்பின் ஓர் அங்கம் என்பது ஞானசூனியங்களுக்கும் புரிந்த உண்மை. ஆனால் ஜெயகாந்தன் இதைப் புரட்டுகிறார்; சமஸ்கிருதத்தை பார்ப்பனர்களுக்கு மட்டுமான சாதிமொழியாக மாற்றி விட்டதாகத் திராவிட இயக்கத்தைக் குற்றம் சாட்டுகிறார்.

அம்பேத்கர் சமஸ்கிருதம் கற்க முனைந்தபோது அவரைத் தடுத்தது திராவிட இயக்கமா, ஆரிய இயக்கமா? இன்றளவும் கருவறைக்கு வெளியே தமிழை எட்ட நிறுத்தி வைத்திருப்பது யாருடைய துவேஷ உணர்ச்சி? சமஸ்கிருதம் மக்கள் மொழியாக நாடெங்கும் வழங்கி வருவதைப் போலவும், இங்கேதான் 'தமிழ் வெறியர்கள்' அதைத் தடுத்து விட்டது போலவும் ஜெயகாந்தன் கூறுவது பித்தலாட்டமில்லையா? 'ஞானகங்கை'யில் கோல்வால்கரே பேசத் துணியாத பொய்யைப் பேசும் **துணிச்சல்** இருக்கிறதே, அதற்காகத் தான் இவருக்கு ஞானபீட விருது.

வெண்மணி முதல் கீரிப்பட்டி வரையிலான தீண்டாமைக் கொடுமைகளையும் கொலைகளையும் பார்த்துக் கொண்டிருக்கிற ஒரு மனிதன் ''ஏற்றத்தாழ்வுகள் இருந்தால்தான் வாழ்க்கை சுவாரஸ்யமாக இருக்கும்'' என்று பேச முடியுமா? ஜெயேந்திரன் மனுதர்மத்தின் பெயரால் எதை ***நியாயம்*** என்று சொல்கிறாரோ, அதையே ***சுவாரஸ்யம்*** என்கிறது ஜெயகாந்தனின் இலக்கிய தர்மம்.

ஒடுக்கப்படும் வர்ணத்தாரின் துன்பங்களை சுவாரசியமானதாகக் கருதும் 'ஞானபீடத்'துக்கு காமகோடி பீடத்தின் 'துன்பம்' மட்டும் சுவாரசியமானதாக இல்லை. ''ஒரு ஆழமான நம்பிக்கை வீழ்த்தப்படும்போது சந்தோஷப்படுவது இலக்கிய தர்மம் ஆகாது'' என்கிறார் ஜெயகாந்தன். அந்த நம்பிக்கையால் வீழ்த்தப்பட்ட சங்கரராமன் குடும்பத்தைத் தேடி அல்ல, நம்பிக்கையை வீழ்த்திய சங்கராச்சாரியைத் தேடி ஓடுகிறார்; பல பார்ப்பனர்களாலேயே காறி உமிழப்பட்ட ஜெயேந்திரனுக்குக் காணிக்கையாக இலக்கியமும் படைக்கிறார்.

போலி கம்யூனிஸ்டு அரசியலின் பார்ப்பன அடிவருடித்தனம் முதல், சந்தை சோசலிசம் ஈறான அனைத்தையும் 'முந்திக் கருக்கொண்டு தந்தைக்கே மந்திரம் சொன்ன' தத்துவச் சிந்தாமணியல்லவோ இவர்! இந்திராவின் அவசர நிலைப் பாசிசத்துக்கு ஆதரவு, இந்திய இராணுவத்தின் ஈழ ஆக்கிரமிப்புக்கு ஆதரவு என, வில்லுப்பாட்டு சுப்பு ஆறுமுகத்தை மிஞ்சும் வகையில் தமிழகமெங்கும் வலம் வந்த அரசின் பிரச்சார பீரங்கியல்லவோ இவர்! இந்த தேசிய பீரங்கி தற்போது உலகமய பீரங்கியுமாகிவிட்டது. நேற்றுவரை மாஸ்கோ, இன்று வாஷிங்டன்! அமெரிக்கா, சோசலிசத்தை நோக்கி முன்னேறுகிறதாம்! மார்க்சின் கனவை ஜார்ஜ்புஷ்ஷின் உலகமயம் நிறைவேற்றுகிறதாம்! அப்புறமென்ன, அடுத்த குறி இலக்கியத்துக்கான நோபல் பரிசுதான்.

தமிழறிஞர்கள் நாய்கள்! வர்ண ஏற்றத்தாழ்வு சுவாரஸ்யம்! அமெரிக்காவே சோசலிசம்! கருப்பு வெள்ளையெனப் பளிச்சென்று சொல்லியிருக்கிறார் ஜெயகாந்தன். அதற்காகத்தான் அவருக்கு டெல்லியின் ஞானபீட விருது. இத்தனையும் கேட்டுக் கொண்டு அவருக்குப் பாராட்டு விழாவும் நடத்தும் அறிஞர் பெருமக்களை எந்தப் பீடத்தில் அமர வைப்பது? தமிழ் கூறும் நல்லுலகில் புதிய பீடமொன்றை நிறுவ வேண்டியிருக்கிறது - ***ஞான சூனிய பீடம்!***

•

(ஞான பீட விருது பெற்ற எழுத்தாளர் ஜெயகாந்தனுக்கு ''தமிழ் சேவா சமிதி'' என்ற அமைப்பினர் 28.4.05 அன்று சென்னையில் நடத்திய பாராட்டுக் கூட்டத்தில் ம.க.இ.க.; பு.ஜ.தொ.மு. ஆகிய அமைப்புகள் விநியோகித்த பிரசுரத்திலிருந்து...)



படிப்பகம்

# சி.பி.எம்.இன் 18–வது அகில இந்திய மாநாடு

## தாராளமயத்திற்கு ஏற்ப மறுவார்ப்பு

“சி.பி.எம். கட்சியின் 18-வது அனைத்திந்திய மாநாடானது, கட்சி வரலாற்றில் தனி முத்திரையைப் பதித்துள்ளது” என்று பெருமையுடன் பத்திரிகைகளுக்குப் பேட்டியளித்துள்ளார், அக்கட்சியின் அரசியல் தலைமைக் குழு உறுப்பினரான சீத்தாராம் யெச்சூரி. உண்மைதான்! பித்தலாட்டத்திலும் சந்தர்ப்பவாதத்திலும் புதிய எல்லைகளைத் தொட்டு, சி.பி.எம். கட்சியானது இம்மாநாட்டின் மூலம் தனி முத்திரையைப் பதித்து விட்டது. "ஒடுக்கப்பட்ட நாட்டைச் சேர்ந்த ஒரு கம்யூனிஸ்ட் கட்சி, உலகமயமாக்க சூழலில், உலகமயமாக்கத்துடன் இசைந்து செயல்படுவதற்கான பொருத்தமான வழிமுறைகளை வகுத்திருப்பது இதுவே முதல் தடவையாகும்" என்று முதலாளித்துவப் பத்திரிகைகளே பாராட்டுமளவுக்கு சி.பி.எம். கட்சி மாநாடு தனி முத்திரையைப் பதித்து விட்டது.

"ஏகாதிபத்தியத்தை எதிர்த்து முறியடிப்போம்; அந்நிய ஏகபோக மூலதனத்தை வேரோடு பிடுங்கி மொத்தமாகத் தூக்கியெறிவோம்!" என்றெல்லாம் சவடால் அடித்து வந்த சி.பி.எம். கட்சி, இப்போது வெளிப்படையாகவே அந்நிய நேரடி மூலதனத்தை வரவேற்கக் கிளம்பிவிட்டது. அந்நிய நேரடி மூதலீடானது தற்போதைய உற்பத்தித் திறனை மேம்படுத்துவதாக இருக்க வேண்டும்; தொழில்நுட்ப ரீதியாக பொருளாதாரத்தை முன்னேற்ற உதவுவதாக அமைய வேண்டும்; வேலை வாய்ப்பைப் பெருக்குவதாக இருக்க வேண்டும் என்ற மூன்று நிபந்தனைகளுடன் அந்நிய நேரடி முதலீட்டை சி.பி.எம். கட்சி வரவேற்கிறது. "சில கொள்கை விவகாரங்கள் பற்றி" என்ற ஆவணத்தில் உள்ள இந்த அம்சங்கள் குறித்து மாநாட்டில் விவாதித்து இறுதியாக்கியுள்ளனர்.

இன்றைய தாராளமய - உலகமய சூழலில் ஒரு ஏழைநாட்டில் நுழையும் ஏகாதிபத்திய மூலதனமானது, அந்நாட்டின் பொருளாதாரத்தை நாசமாக்கி, இயற்கை மூலவளங்களையும் மக்களையும் சூறையாடி, அந்நாட்டை மீண்டும் காலனியாக்கும் ஒரு ஏற்பாடாக இருக்கும்போது, வேலை வாய்ப்பைப் பெருக்கி - தொழில்நுட்ப ரீதியாகப் பொருளாதாரத்தை மேம்படுத்தி - உற்பத்தித் திறனை வளர்க்கக்கூடிய அந்நிய முதலீடு என்று ஏதாவது இருக்க முடியுமா? இப்படி பசப்பு வார்த்தைகளுக்குப் பின்னே, அந்நிய முதலீட்டை வரவேற்கும் தமது பச்சைத் துரோகத்தை சி.பி.எம். கட்சி மூடி மறைக்க முயற்சி செய்கிறது.

இதற்காக, பருண்மையான நிலைமைக்கேற்ப - சந்தர்ப்ப சூழ்நிலைக்குத் தகுந்தவாறு செயல்படுவது அவசியமாகும் என்று பீடிகை போடும் இத்துரோகிகள், அந்நிய முதலீடுகளை முற்றாக நிராகரிப்பதற்குப் பதிலாக, தாராளமய - உலகமய சூழலில் செயலுத்தி அடிப்படையில் அவற்றைப் பொருத்தமாகப் பயன்படுத்திக் கொள்ள முயற்சிக்க வேண்டும் என்கின்றனர்.

"இன்றைய தாராளமய - உலகமய சூழலின் யதார்த்த நிலைமையை உணராமல், அதிலிருந்து விலகி தப்பித்து விட முயற்சிப்பது நமது அகநிலை விருப்பமாகவே இருக்கும். உலகமய - தாராளமயக் கொள்கைகளையும் அதன் தீய விளைவுகளையும் எதிர்த்துப் போராடும் அதேசமயம், கிடைத்துள்ள சில வாய்ப்புகளையும் நாம் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். வங்கி, காப்பீடு துறை, சில்லறை வியாபாரம் முதலானவற்றில் அந்நிய நேரடி முதலீட்டை எதிர்க்கும் அதேநேரத்தில், வேலை வாய்ப்பை உருவாக்கக் கூடிய தொழில்களில் அந்நிய நேரடி முதலீட்டை நாம் அனுமதிக்கலாம். மேலும், மாநில அரசுகளை மத்திய அரசு பிச்சைக்காரத்தனமாக நடத்தி, நிதியில்லை என்று புறக்கணித்து வரும் சூழலில், மக்கள் நலனை முன் வைத்து ஊறு ஏற்படாத வகையில் ஒரு சில தொழில்களில் அந்நிய முதலீட்டை அனுமதிப்பது தவறல்ல" என்று துரோகத்தனத்திற்கு சித்தாந்த விளக்கமளிக்கிறார், சி.பி.எம். கட்சியின் புதிய பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பிரகாஷ் காரத்.

இதேபோல, ஏகாதிபத்திய கைக்கூலிகளான தன்னார்வக் குழுக்களுடனும் ஒத்திசைந்து செயல்பட சி.பி.எம். கட்சியினர் தீர்மானித்துள்ளனர். நேரடியாக ஏகாதிபத்திய நிதியுதவியுடன் இயங்கும் குழுக்களை நிராகரித்துவிட்டு, அறிவொளி இயக்கம் போன்ற சமூக சேவைகளில் ஈடுபடும் தன்னார்வக் குழுக்கள் - சுய உதவிக்குழுக்களுடன் இணைந்து செயல்பட சி.பி.எம். கட்சியினர் தீர்மானித்துள்ளனர். ஏகாதிபத்தியங்கள், அறக்கட்டளைகள், மத நிறுவனங்களிடமிருந்து நிதியுதவி பெறாத தன்னார்வக் குழு எது என்பதை சி.பி.எம். கட்சியினர்தான் விளக்க வேண்டும். ஏற்கெனவே, மும்பையில் நடந்த உலக சமூக மன்ற (WSF) மாநாட்டில் தன்னார்வக் குழுக்களுடன் கூட்டுச் சேர்ந்து 'புரட்சி' செய்த இவர்கள், இப்போது அதையே புரட்சிக்கான கூட்டணியாக மாற்றிவிட்டனர்.

தமிழகத்தில் பாசிச ஜெயா கும்பலும், ஆந்திராவில் சந்திரபாபு நாயுடுவும் தமது ஓட்டு வேட்டைக்கான பகடைக் காய்களாகத் தன்னார்வக் குழுக்களைப் பயன்படுத்திக் கொண்டுள்ள நிலையில், சி.பி.எம். கட்சியினர் மட்டும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியுமா? எனவேதான், ஏகாதிபத்திய கைக்கூலிகளுடன் புதிய கூட்டணி கட்டிக் கொண்டு 'புரட்சி' செய்யப் புறப்பட்டுள்ளனர்.

இதுவொருபுறமிருக்க, நிலப்பிரபுக்களின் சொத்துக்கள் அனைத்தையும் நட்டஈடின்றிப் பறிமுதல் செய்வது என்ற முந்தைய நிலைப்பாடு அடியோடு நீர்த்துப் போகும் வகையில், அவசியமான நிலைமைகளில் பண்ணை நிலங்களுக்கு நட்டஈடு கொடுத்து, விலைக்கு வாங்கி கூலி-ஏழை விவசாயிகளுக்கு இலவசமாக விநியோகிப்பது என்று சி.பி.எம். கட்சி மாநாடு தீர்மானித்துள்ளது. நிலப்பிரபுக்களின் பிற சொத்துக்களைப் பறிமுதல் செய்வது பற்றி அக்கட்சி மௌனம் சாதிக்கிறது. அடிப்படையான இந்த மாற்றம், ஏற்கெனவே 2000-மாவது ஆண்டில் நடந்த திருவனந்தபுரம் சிறப்பு மாநாட்டில் நிறைவேறிய புதிய மேம்படுத்தப்பட்ட கட்சித் திட்டத்தில் இடம் பெற்றுள்ளது என்றும், இதையொட்டி தற்போதைய மாநாட்டிலும் விவாதிக்கப்பட்டுள்ளது என்றும், புதிய மத்தியக் கமிட்டி இறுதி முடிவு செய்யும் என்றும் பிரகாஷ் காரத் கூறுகிறார்.

www.padippakam.com




சி.பி.எம்.இன் 18-வது அனைத்திந்திய மாநாட்டில் முன்னணித் தலைவர்கள்: சந்தர்ப்பவாத அரசியல் சாணக்கியர்கள்.

தனியார்மயம் - தாராளமயம் - உலகமயம் என்னும் மறுகாலனியாதிக்கக் கொள்கைகளை ஆட்சியாளர்கள் தீவிரமாகச் செயல்படுத்திவரும் வேகத்திற்கேற்ப, போலி கம்யூனிஸ்டுகளும் தமது சிவப்பு முகமூடிகளை வேகமாகக் கழற்றி எறிந்துவிட்டு திருத்தல்வாத திருமுகத்தைக் காட்டி வருகின்றனர். இந்த இலட்சணத்தில் வகுப்புவாதம், நவீன தாராளமயம் மற்றும் ஏகாதிபத்தியத்துக்கெதிராக தொடர்ந்து விடாப்பிடியாகப் போராடப் போவதாக மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர். அது என்ன போராட்டம்? ''மீன்காரனுக்குத் தூண்டில் மிதவை மீதுதான் கண்'' என்பதைப்போல, நாற்காலியைக் குறிவைத்து நாடாளுமன்ற அரசியல் தரகு வேலைகளையே விளக்குகிறது அக்கட்சி. பா.ஜ.க. தலைமையிலான வகுப்புவாத சக்திகளை மீண்டும் அதிகாரத்துக்கு வரவிடாமல் தடுப்பது; இதற்காக காங்கிரசு தலைமையிலான கூட்டணி ஆட்சியை ஆதரிப்பது; இடதுசாரி - மதச்சார்பற்ற ஜனநாயக கட்சிகளைக் கொண்ட மூன்றாவது அணியையும் அதன் தலைமையிலான மாற்று அரசாங்கத்தையும் நிறுவப் பாடுபடுவது; இந்தி பேசும் மாநிலங்களிலும் நாடாளுமன்றத்திலும் இடதுசாரி சக்திகளின் பலத்தை அதிகரிக்கச் செயலாற்றுவது - என்பதே அக்கட்சி வகுத்துக் கொண்டுள்ள கடமைகள்.

இந்த மூன்றாவது அணி என்பது நொண்டிக் குதிரையின் மீது பந்தயம் கட்டுவதுதான் என்பது சி.பி.எம். தலைவர்களுக்கு நன்கு தெரியும். ஆனாலும், கல்லறையில் உறங்கும் மூன்றாவது அணிக்கு மீண்டும் ஆவியெழுப்புகிறார்கள். மறுபுறம், சி.பி.எம்.மின் நடைமுறையோ பா.ஜ.க.வுக்கு எதிராகக் காங்கிரசுடன் கூட்டணி சேர்ந்து வால்பிடித்துச் செல்வதாக உள்ளது. மதச்சார்பற்ற கூட்டணி என்ற பெயரில் காங்கிரசோடு சி.பி.எம். அணிசேரும் அதேசமயத்தில், காங்கிரசோ தாராளமயமாக்கலில் பா.ஜ.க.வுடன் அணி சேருகிறது. இந்நிலையில் வகுப்புவாதம், தாராளமயம் இரண்டையும் எதிர்த்துப் போராட ஓட்டுக் கட்சிகளின் புதிய அணியைச் சேர்க்க முயற்சிப்பது பகற்கனவுதான். இந்த மூன்றாவது அணியின் மூலகர்த்தாக்களான வி.பி.சிங், குஜ்ரால், தேவேகவுடா, சந்திரசேகர் முதலானோர் தாராளமயமாக்கலை ஓரணியில் நின்று ஆதரிக்கும்போது, யாரை வைத்து மூன்றாவது அணி கட்ட முடியும்? ஆக, சி.பி.எம்.-இன் தாராளமய - வகுப்புவாத எதிர்ப்பு என்பது வெறும் பித்தலாட்டம்தான். அண்மைக் காலங்களில் தாராளமயத் தாக்குதலுக்கு எதிராக உழைக்கும் மக்களைத் திரட்டி எந்தவொரு போராட்டமும் நடத்த முன்வராத சி.பி.எம்., விடாப்பிடியாகப் போராடும் என்பதை அக்கட்சியின் அணிகளே கூட நம்பமாட்டார்கள்.

சி.பி.எம்.இன் பித்தலாட்டங்கள் இதோடு நின்றுவிடவில்லை. அந்நிய மூலதனக் கொள்ளைக்கும் ஆதிக்கத்துக்கும் கதவை அகலத் திறந்துவிட்டுள்ள முதலாளித்துவ சீனாவை, சோசலிசம் பூத்துக் குலுங்கும் நாடு என்றும், மார்க்சிய - லெனினியத்தை மண்ணுக்கேற்ப நடைமுறைப்படுத்திவரும் நாடென்றும் கூசாமல் புளுகுகிறது. ஏகாதிபத்திய நாடுகளின் போலி கம்யூனிஸ்டு கட்சிகளைப் போலவே, உலகின் எல்லா வகையான கம்யூனிச துரோகக் கட்சிகளையும் அங்கீகரித்து அதிகாரபூர்வ உறவை சி.பி.எம். கட்சி மேற்கொண்டுள்ளது. இலங்கையின் பாசிச - சிங்கள இனவெறி பிடித்த சந்திரிகா அரசையும் தாராளமயக் கொள்கைகளையும் ஆதரித்துக் கூட்டணி சேர்ந்துள்ள ஜனதா விமுக்தி பெரமுனா (ஜே.வி.பி.) கட்சியைக் கூட சகோதரக் கட்சியாக சி.பி.எம். பாவிக்கிறது.

மூத்த தலைவர்கள் வழிவிட்டு, புதிய தலைமுறையினர் தலைமைக்கு வந்துள்ளதையும், முதன்முதலாக தலைமைக் குழுவுக்கு ஒரு பெண் உறுப்பினர் (பிருந்தா காரத்) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதையும் குறிப்பிட்டு, இம்மாநாடு சி.பி.எம். கட்சியில் ஒரு திருப்புமுனையைக் காட்டுவதாக முதலாளித்துவப் பத்திரிகைகள் பரபரப்பூட்டுகின்றன. செக்குமாட்டுப் பாதையில் எப்போதுமே திருப்பம்தான்!

கடந்த மார்ச் - ஏப்ரல் மாதங்களில் இந்தியாவின் இரு பெரும் போலி கம்யூனிஸ்ட் கட்சிகளான வலது கம்யூனிஸ்ட் கட்சியும் (சி.பி.ஐ) 'இடது' கம்யூனிஸ்ட் கட்சியும் (சி.பி.எம்.) தமது மாநாடுகளை நடத்தி, புதிய நிலைமைகளுக்கேற்ப தம்மைத் தகவமைத்துக் கொண்டு ஓட்டுக்கும் சீட்டுக்குமான தமது வழக்கமான புரட்டல்வாத செக்குமாட்டுப் பாதையில் பீடுநடைபோடக் கிளம்பி விட்டன. மறுகாலனியாதிக்கம், இந்துவெறி பாசிசம் எனும் இரு பெரும் சுமைகளோடு இப்போது போலி கம்யூனிஸ்டுகளின் துரோகச் சுமையும் உழைக்கும் மக்களின் தோள்களில் சுமத்தப்பட்டுள்ளது என்பதையே இக்கட்சிகளின் மாநாடுகள் மீண்டும் நிரூபித்துக் காட்டுகின்றன.

● குமார்


படிப்பகம்

www.padippakam.com

## இந்தியா-பாகிஸ்தான்: சமாதானமும் ஆயுதப் போட்டியும்

# இந்த முரண்நிலையின் பொருள் என்ன?

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு பாகிஸ்தான் மீது போர் தொடுக்கத் துடியாய்த் துடித்துக் கொண்டிருந்த இந்திய ஆட்சியாளர்கள், இன்று, "இந்தியா - பாகிஸ்தான் இடையே உருவாகிவரும் சமாதான முயற்சிகளில் இருந்து யாரும் பின்னோக்கிப் போக முடியாது" என வெள்ளைக் கொடியைப் பறக்க விட்டுள்ளனர்.

இந்தியா - பாகிஸ்தான் இடையே நடந்த கிரிக்கெட் போட்டியைப் பார்க்க 8,000 பாகிஸ்தானியர்களுக்கு விசா வழங்கியதில் ஆரம்பித்த இந்த நல்லிணக்க முயற்சிகள், "இந்தியா வசமுள்ள ஜம்மு-காசுமீர் தலைநகர் சிறீநகருக்கும், பாக். வசமுள்ள ஆசாத் காசுமீர் தலைநகர் முசாபராபாத்துக்கும் இடையே மீண்டும் பயணிகள் போக்குவரத்தை நடத்துவது; இரு தரப்பு வர்த்தகத்திற்காக எல்லைக் கட்டுப்பாடு கோட்டைத் திறப்பது; கராச்சியில் இந்திய தூதரகத்தையும், மும்பையில் பாகிஸ்தான் தூதரகத்தையும் இந்த வருட இறுதிக்குள் திறப்பது; இந்தியா - பாக். கூட்டு வர்த்தக கவுன்சிலை அமைப்பது; எல்லைக் கட்டுப்பாடு கோட்டையொட்டி பிரிந்து வாழும் குடும்பங்கள் சந்தித்துக் கொள்ள ஏற்பாடு செய்வது" எனத் தொடர்கிறது.

இந்தியாவிற்கும், பாகிஸ்தானுக்கும் இடையே நடந்து வரும் 2,500 கோடி ரூபாய் மதிப்பு கொண்ட வர்த்தகம், இந்தச் சமாதான ஒப்பந்தத்தால், அடுத்த ஆண்டிற்குள் 25,000 கோடி ரூபாயாக அதிகரிக்கும் எனக் கணக்குப் போட்டுக் காட்டுகிறது, "ஹிந்து" நாளிதழ். இந்தியா - பாகிஸ்தானைச் சேர்ந்த முதலாளிகளின் கைகளுக்குப் போகும் இந்த இலாபக் கணக்குக்கு அப்பால், இந்தச் சமாதான ஒப்பந்தம் காசுமீர் மக்களுக்குத் தரப் போவது என்ன என்பதுதான் கேள்வி.

சுயநிர்ணய உரிமை கோரிப் போராடி வரும் காசுமீர் மக்களுக்கு மாநில சுயாட்சி வழங்குவதற்குக் கூட இந்திய அரசு தயாராக இல்லை. இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கும், பாக். அதிபர் முஷாரப்புக்கும் இடையே நடந்த பேச்சு வார்த்தையில் இதுபற்றி ஒரு வார்த்தை கூடப் பேசப் படவில்லை.

பேச்சு வார்த்தையில் காசுமீரைச் சேர்ந்த போராளிக் குழுக்கள், ஹுரியத் அமைப்பினர் கலந்து கொள்வதை பாகிஸ்தான் வாய்வார்த்தை அளவிலாவது ஏற்றுக் கொள்கிறது. ஆனால், இந்தியாவோ காசுமீர் பிரச்சினை குறித்து முத்தரப்பு பேச்சுவார்த்தை நடத்த இன்று வரை மறுத்தே வருகிறது.

இந்தியா வசமுள்ள ஜம்மு-காசுமீரிலும்; பாக். வசமுள்ள ஆசாத் காசுமீரிலும் உள்ள இந்திய-பாக். படைகளைத் திரும்பப் பெறுவது குறித்தோ; அப்பட்டமான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டுள்ள இராணுவ - துணை இராணுவப் படைகளைத் தண்டிப்பது குறித்தோ இப்பேச்சுவார்த்தைகளில் ஆலோசிக்கப்படவில்லை.

காசுமீர் மக்களின் நியாயமான ஜனநாயகக் கோரிக்கைகள் அனைத்தையும் புறக்கணித்துவிட்டு, இந்தியா - பாக். இடையே மீண்டும் ஒரு சமாதான நாடகம் அரங்கேற்றப்பட்டுள்ளது.

இந்தியா-பாக். இடையே நல்லுறவைப் பேணி, வர்த்தக-தொழில் உறவை நிலைநாட்டுவதுதான் இந்தச் சமாதானத்தின் நோக்கம். இந்த இலாப நோக்கம் பச்சையாகத் தெரிந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் பிரிந்த குடும்பங்கள் சந்திக்க ஏற்பாடு செய்வது; பயணிகள் போக்குவரத்து என இந்தச் சமாதானத்தின் மீது "சென்டிமெண்ட்" சாயம் பூசப்பட்டுள்ளது.

இந்தியா-பாக். இடையே இந்தச் சமாதான பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டிருந்த பொழுதே, பாகிஸ்தானுக்கு

இந்தியா-பாகிஸ்தான் இடையே கையெழுத்தான கூட்டறிக்கையை வெளியிட்டு, சமாதானத் தூதுவர்களாகக் காட்டிக் கொள்ளும் பாகிஸ்தான் அதிபர் முஷாரப், இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்.




படிப்பகம்

www.padippakam.com

எஃப் 16 இரக போர் விமானங்களை விற்கப் போவதாக அமெரிக்கா அறிவித்தது. இந்த அறிவிப்பு வெளிவந்த மறு நிமிடமே தனது விமானப் படைக்குப் புதிதாக 126 போர் விமானங்களை வாங்கும் திட்டத்தை இந்தியாவும் அறிவித்தது.



அமெரிக்காவுக்குப் போய் "இந்தியாவையும் கவனிக்கும்படி" கேட்டுக் கொண்ட வெளியுறவுத்துறை அமைச்சர் நட்வர்சிங், அமெரிக்க வெளியுறவுத்துறைச் செயலருடன் இணைந்து பத்திரிகைகளுக்கு அளிக்கும் பேட்டி.

இந்தியா-பாக். இடையே போர் மூளுவதற்கு உடனடி வாய்ப்புகள் இல்லை என்றாலும், இரு நாடுகளும் ஆயுதங்களை வாங்கி குவிக்கும் போட்டியில் ஒன்றையொன்று விஞ்சி நிற்கின்றன. ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு ஆயுதங்களை வாங்குவதற்கு 25,141 கோடி ரூபாய் செலவழித்த இந்தியா, 2004-இல் 49,127 கோடி ரூபாய்க்கு ஆயுதங்களை வாங்கிக் குவித்திருக்கிறது.

பாகிஸ்தான், தற்பொழுது அமெரிக்காவிடமிருந்து இறக்குமதி செய்யவுள்ள போர் விமானங்களின் மதிப்பு மட்டும் ஏறத்தாழ 15,000 கோடி ரூபாய். இதனால் மிகப் பெரும் இலாபமடையப் போவது, "எஃப்" இரக போர் விமானங்களைத் தயாரிக்கும் "லாக்ஹீட்" என்ற அமெரிக்க நிறுவனம்தான். இந்நிறுவனத்தின் வியாபாரம் படுத்துவிட்டதால், கடந்த சனவரி மாதம் இந்நிறுவனத்தைச் சேர்ந்த 800 தொழிலாளர்கள் வேலையில் இருந்து நீக்கப்பட்டனர்; மேலும், 1,000 தொழிலாளர்களை நீக்கவும் இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இப்படிப்பட்ட நிலையில்தான், அமெரிக்க அதிபர் புஷ் பாகிஸ்தானுக்கு போர் விமானங்களை விற்க அனுமதியளித்து, இந்த நிறுவனத்திற்கு உயிர் தண்ணி ஊற்றியிருக்கிறார். இந்தியாவும் இந்த நிறுவனத்திடமிருந்து எஃப் 18 இரக போர் விமானங்களை வாங்க பேச்சு வார்த்தை நடத்தி வருகிறது.

இடது-வலது போலி கம்யூனிஸ்டுகள் மட்டுமின்றி, முதலாளித்துவ அரசியல் நிபுணர்கள் கூட, அமெரிக்கா தெற்காசியாவில் ஆயுதப் போட்டியை ஊக்குவிப்பதாகவும், இதன் மூலம் இந்தியா-பாக். இடையே ஏற்பட்டுள்ள சமாதானத்தைச் சீர்குலைக்கச் சதி செய்வதாகவும் அமெரிக்கா மீது குற்றஞ்சுமத்தியுள்ளனர்.

ஆனால் அமெரிக்கவோ, "தெற்காசியாவில் தாம் புதிய வியூகம் வகுத்திருப்பதாகவும்; அதற்கு ஏற்ற வகையில் தான் பாகிஸ்தானுக்கு போர் விமானங்களை விற்க முன் வந்திருப்பதாக"வும் கூறி இந்த ஆயுதப் போட்டியை நியாயப்படுத்துகிறது.

தீவிரவாதத்துக்கு எதிரான போர் என்ற பெயரில் ஏற்கெனவே ஆப்கானிஸ்தானையும் ஈராக்கையும் ஆக்கிரமித்துள்ள அமெரிக்காவின் அடுத்த குறி ஈரான். இதற்காகவே ஈரான் இரகசியமாக அணு ஆயுதங்களைத் தயாரித்து வைத்துள்ளதாக அமெரிக்காவும், இசுரேலும் குற்றஞ்சுமத்தி வருகின்றன. வாய்ப்பு கிடைத்தால் ஈரானின் இராணுவத் தளங்கள் மீது அதிரடித் தாக்குதலை நடத்தவும், இதற்கு ஈரானின் அண்டை நாடான ஆப்கானிஸ்தானைத் தளமாகப் பயன்படுத்தவும் அமெரிக்கா திட்டமிடுகிறது.

ஆனால் ஆப்கானிஸ்தானிலோ, அமெரிக்கா நிறுவியுள்ள பொம்மையாட்சியின் அதிகாரம் தலைநகர் காபூலைத் தவிர, அந்நாட்டின் பிற பகுதிகளில் செல்லுபடியாகவில்லை. ஆப்கானிஸ்தானிலும், பாகிஸ்தானிலும் தலைமறைவாக இயங்கும் தாலிபான் மற்றும் அல்-கொய்தா தீவிரவாதிகளைத் தேடி அழிக்கும் பொறுப்பை பாகிஸ்தான் தலையிலும் சுமத்தியிருக்கிறது, அமெரிக்கா. இதற்காகவே அமெரிக்காவின் இராணுவம் பாகிஸ்தானின் ஐந்து இராணுவத் தளங்களையும், மூன்றில் இரண்டு பங்கு விமானப் படையினையும் பயன்படுத்தி வருகிறது.

இந்த அடியாள் வேலைக்குப் பரிசாகத்தான் முஷாரப்பின் இராணுவ சர்வாதிகார ஆட்சிக்கு அமெரிக்கா, "நேடோ" அணியில் இல்லாத நட்பு நாடு தகுதியினையும்; போர் விமானங்களையும், ஆயுதத் தளவாடங்களையும் வாரி வழங்குகிறது. பாகிஸ்தானின் இராணுவ சர்வாதிகாரக் கும்பலை இப்படிக் குளிப்பாட்டுவதன் மூலம், பாகிஸ்தானின் அணு ஆயுதங்களையும் தனது கண்காணிப்பின் கீழ் கொண்டு வர முயலுகிறது, அமெரிக்கா. இதன் மூலம், ஈரான் பாகிஸ்தானிடமிருந்து தான் இரகசியமாக அணு ஆயுத தொழில்நுட்பத்தைப் பெற்றுள்ளது என நிரூபிக்க முயலுகிறது.

இது ஒருபுறமிருக்க, மத்திய ஆசியாவின் காஸ்பியன் கடல் பகுதியில் கிடைக்கும் எண்ணெய் வளத்தைத் தனது செல்வாக்கின் கீழ் கொண்டு வரவும் அமெரிக்கா திட்டம் போடுகிறது. இப்பகுதியில் இன்றும் செல்வாக்கோடு இருக்கும் ரசியாவை ஓரங்கட்டுவதோடு, இங்கு கிடைக்கும் கச்சா எண்ணெயை மேற்கு ஐரோப்பாவுக்குக் கொண்டு செல்வதன் மூலம் ரசியாவின் எண்ணெய் சந்தையைக் கைப்பற்றிக் கொள்ளுவதும் அமெரிக்காவின் நோக்கம்.

காஸ்பியன் கடல் பகுதி எண்ணெய் வளத்தை உறிஞ்ச 1,50,000 கோடி ரூபாய் மூலதனமிட்டுள்ளது அமெரிக்கா. இப்பகுதியில் தனது மேலாதிக்க நோக்கங்களைக் காத்துக் கொள்வதற்காக, முன்னாள் சோவியத் ஒன்றியத்தைச் சேர்ந்த ஜார்ஜியா, உக்ரைன், உஸ்பெகிஸ்தான், அஜர்பெய்ஜான், மால்டோவா ஆகிய நாடுகளை இணைத்து, பிராந்திய இராணுவக் கூட்டணி அமைக்கவும் முயன்று வருகிறது. மேலும், தாஜிகிஸ்தான் நாட்டில் இராணுவத் தளம் அமைத்துள்ள இந்தியாவையும் தனது ரசிய எதிர்ப்புக் கூட்டணிக்குள் கொண்டுவரத் திட்டம் போடுகிறது.

மேற்காசியாவில் ஈரானைக் குறி வைப்பது; காஸ்பியன் கடல் பகுதியில் ரசியாவை ஓரங்கட்டுவது என்ற நோக்கங்களின் பின்னணியில்தான், ஈரானில் இருந்து பாகிஸ்தான் வழியாக இயற்கை எரிவாயுவை இறக்குமதி செய்யும் இந்தியாவின் திட்டத்தை அமெரிக்கா எதிர்த்து வருகிறது. இந்தியாவின் எதிர்கால எரிசக்தி தேவையைப் பூர்த்தி செய்ய இந்தியாவும் அமெரிக்காவும் ஒப்பந்தம் போட்டுக் கொள்ளலாம் என ஆசை காட்டி இந்தியாவைத் தன் பக்கம் இழுத்துவிட முயலுகிறது.

அமெரிக்க இராணுவத் தலைமை நிலையம் "பெண்டகன்" தயாரித்துள்ள


படிப்பகம்

www.padippakam.com

அறிக்கையொன்றில், "போர்த் தந்திர ரீதியாகப் பார்த்தால், சீனா அமெரிக்காவுக்கு மட்டுமல்ல, இந்தியாவுக்கும் எதிரிதான்" எனக் குறிப்பிட்டுள்ளது. எதிரிக்கு எதிரி நண்பன் என்ற முறையில் இந்தியாவுடன் கூட்டுச் சேர்ந்து, ஆசியாவில் சீனாவின் செல்வாக்கைக் கட்டுப்படுத்தலாம் என்பது அமெரிக்காவின் இன்னொரு திட்டம். ஏற்கெனவே சீன எதிர்ப்பில் ஊறிப் போயிருக்கும் இந்திய ஆளும் கும்பலுக்கு இந்தத் திட்டம் கசக்கவா செய்யும்? இந்தியாவுக்கு எஃப் 18 இரக போர் விமானங்களை விற்கவும்; இந்தியாவுடன் கூட்டுச் சேர்ந்து போர் விமானங்களைத் தயாரிக்கவும்; உள்நாட்டுத் தேவைக்குப் பயன்படும் அணு அறிவியல் தொழில்நுட்பத்தை இந்தியாவிற்குத் தரவும் அமெரிக்கா முன்வந்திருப்பதை இந்தப் பின்னணியில் வைத்துதான் பார்க்க வேண்டும்.

"இந்தியா வல்லரசாக வளருவதற்கு நாங்கள் உதவுவோம்" என அமெரிக்கா சொல்லுவதைப் பச்சையாக மொழி பெயர்த்தால், அமெரிக்காவின் ஒற்றைத் துருவ மேலாதிக்கத் திட்டத்திற்கு இந்தியா அடியாளாகச் செயல்பட வேண்டும் என்பது தவிர வேறில்லை. ஆசிய கண்டத்தில் அமெரிக்காவின் கங்காணியாக வேலை பார்ப்பதற்கு இந்திய ஆளுங் கும்பலுக்குக் கொஞ்சமும் தயக்கம் கிடையாது. மாறாக, பாகிஸ்தானுக்குத் தரும் முக்கியத்துவத்தை, அமெரிக்கா தனக்குத் தருவதில்லை என்பது மட்டும்தான் இந்தியாவின் ஆதங்கம். பாகிஸ்தானைக் காட்டி வாங்கிக் குவிக்கப்படும் ஆயுதங்களோ, இந்தியா அமெரிக்காவின் மறுகாலனி ஆக்கப்படுவதை எதிர்த்துப் போராடி வரும் நக்சல்பாரி புரட்சியாளர்களுக்கு எதிராகவும், சுயநிர்ணய உரிமை கேட்டுப் போராடும் தேசிய இனப் போராளிகளுக்கு எதிராகவும் பயன்படுத்தப்படுகிறது.

• செல்வம்

# கில்லாடி வசூல் ராஜாக்கள்

"பொதிகை கலா மன்றம் நடத்தும் பிரபல திரைப்பட இசை அமைப்பாளர் கங்கை அமரன் இன்னிசைத் திருவிழா மார்ச் 13 அன்று திருநெல்வேலி சாப்டர் பள்ளி மைதானத்தில் நடைபெறுகிறது; நன்கொடை:- ரூ. 1000, ரூ. 500, ரூ. 200, ரூ. 100" என்ற விளம்பரம் திருநெல்வேலி நகர், முழுவதும் தட்டி போர்டுகளிலும் சுவரொட்டிகளிலும் நிரம்பியிருந்தது. இதைப் பார்த்த எனக்கு, 'பொதிகை கலா மன்றம் என்ற பெயரை இதுவரையில் நெல்லையில் கேள்விபட்டதே இல்லையே! இந்த அமைப்பை யார் தோற்றுவித்தார்கள்? கோயில் திருவிழாக்களிலும் திருமணம் போன்ற இதர நிகழ்ச்சிகளிலும் இசை நிகழ்ச்சிகள் இலவசமாக நடத்தப்படும்போது, ஏன் பொதிகை கலா மன்றத்தினர் மட்டும் கட்டணம் வசூலிக்கிறார்கள்?' என்ற எண்ணம் எனக்குள் தோன்றியது. ஒருவேளை, உடல் ஊனமுற்றோருக்கு உதவி செய்வதற்காக இப்படி கட்டணம் வசூலித்து நிகழ்ச்சி நடத்துகிறார்கள் போலும் என்று கருதிக் கொண்டேன். குறைந்தபட்சக் கட்டணமாக ரூ. 100 கொடுத்து இந்நிகழ்ச்சியைக் கண்டுகளிக்க என்னால் இயலாததால், நான் இந்த இன்னிசைத் திருவிழாவிற்குச் செல்லவில்லை.

ஆனால், எதிர்பாராத விதமாக அந்நிகழ்ச்சி நடந்த அன்று அவ்வழியாகச் சென்று கொண்டிருந்த போது நான் கேட்ட பாடல், எனக்குத் தெரிந்த ஒருவரால் பாடப்படுவதை அறிந்து கொண்டேன். "தமிழா, நீ பேசுவது தமிழா?" என்ற அந்தப்பாடலைப் பாடிக் கொண்டிருந்தவர், சி.பி.எம். கட்சியின் கலை - இலக்கிய அமைப்பான தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டுள்ள திருவுடையான். அவர் இந்தத் திருவிழாவில் பாடுவது ஏன் என்று அறிந்து கொள்ள முயற்சித்தேன். அதில் கிடைத்த முதல் தகவலே எனக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது. கங்கை அமரனின் இன்னிசைத் திருவிழாவை பொதிகை கலா மன்றத்தின் பெயரால் நடத்தியது போலி கம்யூனிஸ்டுகளான சி.பி.எம். கட்சியினர்தான்!

சி.பி.எம். கட்சி நேரடியாகவே உழைக்கும் மக்களிடம் போய் பிரச்சாரம் செய்து நன்கொடை திரட்டலாமே! ஏன் அப்படிச் செய்யவில்லை? ஏனென்றால், அக்கட்சி அரசியல் ரீதியாக ஊனமடைந்து, அதன் சந்தர்ப்பவாதம் மக்களிடம் அம்பலப்பட்டுப் போய்விட்டது. எனவேதான் பொதிகை கலாமன்றம் என்ற லெட்டர் பேடு அமைப்பின் பெயரால் பார்ப்பன கலாச்சாரமும் பாலியல் வக்கிரமும் நிறைந்த டப்பாங்குத்து சினிமா பாடல்களைப் பாட வைத்து கட்சிக்கு நிதி திரட்டும் புரட்சிகர வேலையில் இறங்கி விட்டனர்.

சி.பி.எம். கட்சித் தலைவர்கள் கார்களில் சொகுசாய் பறந்து முதலாளிகளிடமும் தன்னார்வக் குழுக்களிடமும் நன்கொடை திரட்டுவதைத் தொடர்ந்து செய்து வருகின்றனர். இதுதவிர, த.மு.எ.ச. மூலம் கலைவிழாக்கள் நடத்தி வசூல் செய்து பார்த்து, அந்த வியாபாரம் போணியாகாததால் கடையை மூடிவிட்டனர். பின்னர், பெரியாரின் 125-வது பிறந்தநாளை முன்னிட்டு பெரியார் கொள்கைகளைப் பரப்புவதாகக் கூறிக் கொண்டு "கலகக்காரர் தோழர் பெரியார்" நாடகம் நடத்தி - அதற்கான வசூல் என்று பெரியார் வியாபாரத்தை கடந்த ஆண்டில் மேற்கொண்டனர். இப்போது மீண்டும் அதே வியாபாரத்தை நடத்தினால் எதிர்பார்த்தபடி வசூலாகாது என்பதால், இப்போது பினாமி பெயரில் இன்னிசைத் திருவிழா நடத்தி வசூல் செய்து கொழுத்த ஆதாயமடைந்துள்ளனர்.

கோயில் திருவிழாக்களில் நடத்தப்படும் இன்னிசைக் கச்சேரிகளில் முதலில் ஓரிண்டு பக்திப் பாடல்களுக்குப் பிறகு ரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஆபாச - வக்கிர சினிமா பாடல்கள் பாடப்படுவதைப் போல, இங்கேயும் ஓரிரண்டு முற்போக்கு பாடல்களைப் பாடிவிட்டு ஆபாச சினிமா பாடல்களின் திருவிழாவை அரங்கேற்றியுள்ளனர். கோயில் திருவிழாக்களின் பக்தியின் பெயரால் ஆபாசப் பாடல்கள். சி.பி.எம். கம்பெனியின் கலை விழாக்களில் முற்போக்கின் பெயரால் ஆபாச இன்னிசைப் பாடல்கள். இந்த வியாபாரத் தந்திரம் வெற்றி பெற்றதும், நெல்லை மட்டுமின்றி இப்போது தூத்துக்குடியிலும் இத்தகைய இன்னிசைத் திருவிழா எனும் புதிய கடையை விரித்துள்ளனர்.

கட்சியின் பெயரைச் சொல்லி, வெளிப்படையாக அரசியலை முன்வைத்து, மக்களிடம் ஏன் நிதி வசூலிக்க முடியவில்லை என்பதை புரட்சியை நேசிக்கும் சி.பி.எம். கட்சியின் அணிகள் ஒருகணம் யோசித்துப் பார்க்கட்டும். பின்னர் அக்கட்சியில் இன்னமும் நீடிப்பதா, அல்லது புரட்சிகர அமைப்புகளில் அணிதிரளுவதா என்பதை முடிவு செய்யட்டும்!

– ஃபிரடரிக் டக்ளஸ், நெல்லை.

❍ "நீதிமன்ற அக்கிரமம்; ஏழைகள் மீதான போர்" என்ற கட்டுரையானது, மண்ணின் மைந்தர்களை நகர்ப்புறங்களிலிருந்து பிடுங்கியெறிந்து நகருக்கு வெளியே துரத்தும் கொடுஞ்செயலை உணர்வோடு எடுத்துரைத்தது. ஏகாதிபத்தியங்களின் - மேட்டுக்குடியினரின் அடியாளாக ஆட்சியாளர்கள் செயல்படுவதை உண்மை விவரங்களிலிருந்து கூறி, போராட அறைகூவுவதாக அமைந்துள்ளது.

**- இந்துமதி, திருச்சி.**

❍ போலி கம்யூனிஸ்டுகளான சி.பி.எம்-இன் சித்தாந்தம், ஆளும் வர்க்க சித்தாந்தத்துடன் சங்கமித்து விட்டதை சி.பி.எம். முதலாளித்துவ கம்பெனியா? என்ற கட்டுரை எடுப்பாக உணர்த்தியது. மேடைக்கு ஏகாதிபத்திய எதிர்ப்பு; பிழைப்புக்கு அந்நிய முதலீடுகளுக்கு வரவேற்பு என்று சந்தர்ப்பவாத சகதியில் புரளும் சி.பி.எம். கட்சியை அம்பலப்படுத்தி எளிய நடையில் கட்டுரை அமைந்திருப்பது சிறப்பு.

**- ஜீவா, சென்னை.**

❍ மதுரையில் நீதிமன்ற உத்தரவுப்படி, சாலையோரமாக ஆக்கிரமிப்புக் கோயில்கள் அகற்றப்பட்டது பற்றி செய்தி ஊடகங்கள் பெரிதாக அழுது தீர்த்தன. ஆனால், பல ஆயிரம் உழைக்கும் மக்கள் வீடிழந்து வாழ்விழந்தது பற்றியும் உலக வங்கி உத்திரவுப்படி செயல்படும் அரசின் அடக்குமுறை பற்றியும் பு.ஜ. மட்டுமே எடுத்துரைத்தது. அரசியல் பலம்தான் மக்கள் பலத்தையும் ஆயுத பலத்தையும் தரும் என்ற எதிர்மறை படிப்பினையை உணர்த்துவதாக ஆந்திர புரட்சியாளர்கள் அரசுடன் நடத்திய பேச்சுவார்த்தை பற்றிய கட்டுரை உரிய தருணத்தில் வெளியாகியுள்ளது.

**- புரட்சித்தூயன், தருமபுரி.**




## வாசகர் கடிதம்

❍ ஏற்கெனவே செய்தி வெளிவந்துள்ள போதிலும், "சக்கிலியனாப் பொறந்தா பீ திங்கணுமா?" என்ற தலைப்பில் அச்சிறுவன் நேரில் பேசுவதுபோல அமைந்த கட்டுரை, எமது நெஞ்சைக் கொதிக்க வைத்தது. ஆளுங்கட்சியானாலும் எதிர்க்கட்சியானாலும் அடக்குமுறைக் கருவியான பயங்கரவாத போலீசுக்குப் போட்டி போட்டுக் கொண்டு சேவை செய்வதை தலையங்கக் கட்டுரை சிறப்பாக விளக்குகிறது. சிவகாசியில் உழைக்கும் மக்கள் மீதான 'ஆக்கிரமிப்பு'ப் போரினால் வீடிழந்த மக்கள், அங்கு 26-ஆவது வார்டு தேர்தலைப் புறக்கணிப்பதாக தட்டி கட்டி வைத்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

**- இரா. கணேசன், சாத்தூர்.**

❍ மறுகாலனியாதிக்கக் கொள்கையானது பன்னாட்டு ஏகபோக முதலாளிகளையும் இந்தியத் தரகு முதலாளிகளையும் கொழுக்க வைப்பதோடு நின்று விடவில்லை; சி.பி.எம். கட்சித் தலைவர்களை கூட்டுறவு முதலாளிகளாக மாற்றி விட்டது. 'மார்க்சிஸ்டுகள்' மறுகாலனியாக்கத்தை எதிர்க்காமல், அதன் இடிதாங்கியாகவே இருக்கப் போகிறார்கள் என்பதை பு.ஜ. கட்டுரை நிருபித்துக் காட்டுகிறது.

**- கதிரவன், சென்னை.**

❍ கால்நடை வளர்ப்பிலும் கூட அன்னிய ஏகபோக நிறுவனங்கள் தலையீடு செய்வதையும், பெருமளவில் பால் பொருட்கள் இறக்குமதியாவதையும் பற்றிய கட்டுரையானது, மறுகாலனியாதிக்கம் நெருங்கி விட்டதை அதிர்ச்சி தரும் உண்மைகளோடு உரைக்கிறது. மோடி விவகாரத்தை எப்படிப் பார்க்க வேண்டும் என்ற கண்ணோட்டத்தைத் தருவதாக "பயங்கரவாத மோடி" கட்டுரை அமைந்தது. அநீதிமன்றங்களின் யோக்கியதையை மீண்டும் நிருபித்துக் காட்டியதும் காங்கிரசுக்கு வால் பிடித்துச் செல்லும் போலி கம்யூனிஸ்டுகளை அம்பலப்படுத்தியிருப்பதும் வாசகர்களிடம் சிறப்பானதொரு வரவேற்பைப் பெற்றது.

**- வாசகர் வட்டம், திருச்சி.**

## சிதம்பர இரகசியம்!

# முற்போக்கு பட்ஜெட் அல்ல; மக்களுக்கு வெட்டப்பட்டுள்ள மரணக்குழி!

**போ**லி கம்யூனிஸ்டுகளின் ஆதரவோடு, வரியில்லா பட்ஜெட் என்ற மாய்மாலத்தோடு ப.சிதம்பரம் கொண்டு வந்துள்ள பட்ஜெட்டானது நாட்டை மீண்டும் காலனியாக்கும் சதியே என்பதை விளக்கி ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு ஆகிய புரட்சிகர அமைப்புகள் தமிழகமெங்கும் வீச்சாக பிரச்சார இயக்கத்தை நடத்தி வருகின்றன. இது முற்போக்கு பட்ஜெட் அல்ல; மக்களுக்கு வெட்டப்பட்டுள்ள மரணக்குழி என்பதை விளக்கும் "சிதம்பர இரகசியம்" என்ற பிரசுரம் ஏறத்தாழ 25,000 பிரதிகள் உழைக்கும் மக்களிடம் பெருத்த வரவேற்புடன் விற்பனை செய்யப்பட்டு, அனைத்து பகுதிகளிலும் முழக்கத் தட்டிகள், துண்டுப் பிரசுரங்களுடன் தெருமுனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

மயிலாடுதுறை சின்னகடைத் தெருவில் 12.4.05 அன்று வி.வி.மு. - பு.மா.இ.மு. ஆகிய அமைப்புகள் இணைந்து, இது உலக வங்கி கைக்கூலியின் பட்ஜெட்; மறைக்கப்படும் மறுகாலனியாதிக்கம் என்ற தலைப்பில் நடத்திய பொதுக்கூட்டமும், மையக் கலைக்குழுவின் புரட்சிகர நிகழ்ச்சியும் உழைக்கும் மக்களின் உற்சாகமான ஆதரவோடு நடந்தன. 17.4.05 அன்று ஒசூர் ராம் நகரில் பு.ஜ.தொ.மு. - பு.மா.இ.மு ஆகிய அமைப்புகள் சார்பில் சிதம்பர இரகசியத்தை அம்பலப்படுத்திய பொதுக் கூட்டமும் மையக் கலைக்குழுவின் புரட்சிகர கலைநிகழ்ச்சியும் மக்களிடம் பெருத்த வரவேற்பைப் பெற்றது. "எந்தக் கட்சிக்காரனும் எங்களை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை; ஆனால் நீங்கள்தான் பட்ஜெட்டுக்கு பின்னே மறைந்துள்ள சதிகளையும் நரித்தனத்தையும் விளக்கிச் சொல்லியுள்ளீர்கள்" என்று எல்லா இடங்களிலும் வரவேற்ற உழைக்கும் மக்கள் புரட்சிகர அமைப்புகளில் அணிதிரள முன்வந்துள்ளனர்.

திருச்சி - கருமண்டபத்தில் சிதம்பர இரகசியத்தை அம்பலப்படுத்தி ஆட்டோ ஓட்டுநர் பாதுகாப்பு சங்கம் மற்றும் ஓட்டல் தொழிலாளர் பாதுகாப்பு சங்கத்தினர் நடத்திய தெருமுனைக் கூட்டம்.




Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024. Editor: R. SHANMUGARAJ.

REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER NO.42648/85

Regn.No.TN/PMG(CCR)/621/03-05

# "எங்களை விபச்சாரத்திற்குள் தள்ளாதே!"

## - இரவு விடுதிகளில் நடனமாடும் பெண்களின் வேதனைக் குரல்

மகாராஷ்டிரத்தை ஆளும் காங்கிரசு கூட்டணி அரசுக்குத் திடீரென இளைஞர்கள் பற்றிய அக்கறை பொத்துக் கொண்டு பொங்கி வழியத் தொடங்கியிருக்கிறது. மும்பய் மாநகராட்சி எல்லை தவிர, அம்மாநிலத்தின் பிற பகுதிகளில் இயங்கி வரும் இரவு நேர நடன விடுதிகளைத் தடை செய்யப் போவதாக அறிவித்துள்ள அம்மாநில அரசு, "இந்த விடுதிகள் இளைஞர்களின் மனதைக் கெடுப்பதோடு, நமது பண்பாட்டுக்கு ஆபத்தாகவும் இருக்கிறது" என இத்தடைக்குக் காரணங்களை அடுக்கியிருக்கிறது.

இந்தக் குற்றச்சாட்டில் உண்மை இல்லாமல் இல்லை. ஆனாலும், இப்பிரச்சினை தடை செய்வதோடு முடிந்து விடுவதில்லையே! இரவு விடுதிகளில் நடனமாடி வரும் 75,000-க்கும் மேற்பட்ட பெண்களின் பிழைப்பு பறிபோகும் நிலையில் அவர்கள், "எங்களுக்கு மாற்று வேலை கொடு" எனக் கோரி போராடத் தொடங்கியிருக்கிறார்கள். "எங்களுக்கு மாற்று வேலை ஏற்பாடு செய்து கொடுக்காவிட்டால், நாங்கள் விபச்சாரத்திற்குள் தள்ளப்படுவோம்" என அவர்கள் கூறுகிறார்கள்.

நடனமாடும் பெண்களைச் சமூகம் கீழ்த்தரமாக பார்ப்பதால், அவர்களுக்கு இந்த வேலை போனால், வேறு வேலை கிடைப்பது அவ்வளவு எளிதானதல்ல. அரசு அனுமதியுடன் நடத்தப்படும் மதுக்கடைகள் மூடப்படும்பொழுது கள்ளச் சாராயம் ஆறாய்ப் பெருகி ஓடுவதைப் போல, இவ்விடுதிகள் மூடப்படும்பொழுது விபச்சாரம் முன்னைவிடப் பன்மடங்கு பெருகுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே, தங்களின் எதிர்காலம் தற்போது இருப்பதைவிட மோசமானதாகப் போய் விடுமோ என இப்பெண்கள் அச்சப்படுவதில் நியாயம் உண்டு.

"இரவு விடுதிகளை ஒழுக்கக் கேட்டை பரப்பும் தொழில் எனத் தடை செய்யக் கிளம்பியுள்ள அரசு, மேட்டுக்குடி கும்பல் குடித்துவிட்டு ஆபாசமாக நடனமாடும் ஐந்து நட்சத்திர விடுதிகளைத் தடை செய்யுமா? இரவு விடுதிகளின் மூலம் வருடாவருடம் 200 கோடி ரூபாயை வருமானமாகப் பெற்ற அரசு, அந்தப் பணத்தையெல்லாம் பாவப் பணமாகக் கருதி எங்களிடம் திருப்பித் தர வேண்டாமா?" என இப்பெண்கள் எழுப்பும் கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாமல், இஞ்சி தின்ன குரங்கைப் போல முழிக்கிறது, அம்மாநில அரசு.

பெரும்பாலான விடுதிகளை போலீசு அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் பினாமி பெயரில் நடத்திவரும் பொழுது, நடனமாடும் இப்பெண்களை மட்டும் குற்றவாளிக் கூண்டில் நிறுத்துவதில் என்ன நியாயம் இருக்கிறது? "ஆணுறையை அணிந்து கொண்டு விபச்சாரிகளிடம் செல்லுங்கள்; எய்ட்ஸ் பயமில்லாமல் வாழுங்கள்" என இளைஞர்கள் கெட்டுப் போகக் குறுக்கு வழி சொல்லும் அரசிற்கு, நல்லொழுக்கம் பற்றிக் கவலைப்பட என்ன தகுதி இருக்கிறது? அரசாங்கம் முதலில் இப்பெண்களுக்கு மாற்று வேலை ஏற்பாடு செய்து தரட்டும்; பிறகு வேண்டுமானால் கலாச்சாரம் பற்றிக் கவலைப்படட்டும்! ●



மும்பய் நகர இரவு விடுதியொன்றில் நடனமாடும் பெண்களை நோக்கி வீசப்படும் "கரன்சி நோட்டுகள்": ஆணாதிக்கத் திமிர். (உள்படம்) நடனமாடுவதற்கு முன் சாமி கும்பிடும் பெண்: வேடிக்கையான தொழில் பக்தி.

"வேறு வேலை கொடு; முடியாதென்றால் எங்கள் வழியில் வாழ விடு!" எனக் கோரி மகாராஷ்டிரா மாநில அரசை எதிர்த்துப் போராடும் அபலைப் பெண்கள்.

